# பொருளியல் நோக்கு

ஏப்ரல்
1986

## இலங்கையில் உள் நாட்டு மீன்பிடி





மக்கள் வங்கி வெளியீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொருளாதார குறிகாட்டிகள்

பிரதான பயிர்களின் சராசரி விலைகள்




வாழ்க்கைச் செலவுப்புள்ளிகள்




வலு வழங்கலும் கேள்வியும்




உர விநியோகம்




பொதுப் போக்குவரத்து




சுற்றுலாப் பயணிகள் வருகை

பிராந்திய அடிப்படையில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 864

# பொருளியல் நோக்கு

மலர் 12 இதழ் 1 ஏப்ரல் 1986

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை

## நிரல்கள்

| | | |
|---|---|---|
| நிகழ்ச்சிக் குறிப்பேடு | 2 | மார்ச் 1986 |
| நகர அபிவிருத்தி | 19 | கொழும்பு மாநகரில் காணி விலைகள் |
| விவசாயம் | 20 | உர உபயோகம் அதிகரிப்பு |

## விசேஷ அறிக்கை

| | | |
|---|---|---|
| | 3 | உண்ணுட்டு மீன்பிடி |
| கே. எஸ். பீ. தென்னக்கோன் | 10 | நன்னீர் வாழ் பிராணி - தாவர வளர்ப்பு |
| பீ. டீ. ஜீ. எஸ். என். சிர்வர்தன | 14 | அடைப்பில் மீன் வளர்த்தல் |

## சிறப்புக் கட்டுரைகள்

| | | |
|---|---|---|
| சமீர் அமீன்—டானியெல் பிளெயின் | 22 | பொது மக்களுக்குரிய அபிவிருத்தி |
| ரிகார்டோ பிரெஞ்ச் - டேவிஸ் | 25 | இலத்தீன் அமெரிக்க படுகடன் - சிலியின் நிலை |
| பிர்தவுஸ் ஜாப்வாலா | 30 | பூனைக்கு மணி கட்டுவது யார்? |

## அடுத்த இதழில்

★ இலங்கையில் விவசாயம் சார்ந்த கைத்தொழில்கள் - தற்போதைய நிலைமை, அபிவிருத்தி வாய்ப்புக்கள், பிரச்சினைகள் என்பன பற்றிய ஒரு பரிசீலனை

★ 1985 ல் இலங்கையின் பொருளாதாரம்—முற்றுமுழுதான பொருளாதார செயற்பாடு பற்றி ஒரு விரிவான ஆய்வு

★ சமீபத்திய முதலீட்டு போக்குகள்

★ பாரிய நீர்ப்பாசனத்திட்டப் பிரதேசங்களில் சமூக - பொருளாதார பிரச்சினைகள்

இந்த இதழுக்கான விசேஷ அறிக்கையை மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதியைச் சேர்ந்த லால் டி அல்விஸ் தயாரித்துள்ளார்.

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிபரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது.
பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.
பொருளியல் நோக்கு [illegible] தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களில் [illegible] பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

**மார்ச்**

1. கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் பெப்ரவரி 1986 ல் 591.06 ஆக இருந்ததென குடிஜன மதிப்பு புள்ளி விவரத்திணைக்களம் அறிவித்தது. இது ஜனவரி 1986 ல் 586.05 ஆகவும், பெப்ரவரி 1985 ல் 559.5 ஆகவும் இருந்தது.

மன்னார், வவுனியா மாவட்டங்களில் பயங்கரவாத நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதன் காரணமாக ஒருங்கிணைக்கப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டங்களின் கீழ் உலக வங்கி வழங்கி வந்த நிதி நிறுத்தப்பட்டிருப்பதாக வங்கி அரசாங்கத்துக்கு அறிவித்தது.

தற்போதைய எண்ணெய் விலைச்சரிவு காரணமாக பெருந்தொகையான செல்வம் எண்ணெய் உற்பத்தி நாடுகளிலிருந்து எண்ணெய் நுகர்வு நாடுகளுக்கு மாற்றப்படும் என ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் அறிக்கையொன்று தெரிவித்தது. இதன் மூலம் கைத்தொழில்மய நாடுகள் 4600 கோடி அமெரிக்க டொலர்களைப் பெறும்; இதில் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் பங்கு 1600 கோடி டொலராக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சராசரி எண்ணெய் விலை 1986 ல் பீப்பா ஒன்றுக்கு 20 அமெரிக்க டொலராக இருக்கும் என்ற ஊகத்தின் அடிப்படையிலேயே இது கணக்கிடப்பட்டுள்ளது.

3. பீப்பா ஒன்று 14.88 அமெரிக்க டொலர் வீதத்தில் 120,000 மெட்ரிக் தொன் சுத்திகரிக்கப்படாத எண்ணெய்யை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தத்தை இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் மேற்கொண்டது. கூட்டுத்தாபனத்தின் முன்னைய கொள்வனவு விலை பீப்பா ஒன்றுக்கு 17.25 டொலராக இருந்தது.

4. அடுத்துவரும் வருடத்தில் மூலதனச் செலவுகளுக்காக கிடைக்கக்கூடிய மூலவளங்கள் மிகக் குறைந்த அளவில் இருக்குமென நிதியமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. தற்பொழுது அமுல்படுத்தப்படும் செய்திட்டங்களை நிதிப்படுத்துவதில் 730 கோடி ரூபா குறை ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாவலி அதிகாரசபை அதன் 'ஜீ' வலயத்தில் உள்ளூர் குளங்களில் இறால் வளர்ப்பினை ஊக்குவிக்கும் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. மேலும், 1986 ம் ஆண்டுக்குரிய இலக்குகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மேலும் பத்து புதிய குளங்களை நிர்மாணிப்பதற்கும் அது திட்டமிட்டுள்ளது.

5. குறுங்காலத்தில் வழங்கப்படும் சுத்திகரிக்கப்படாத எண்ணெய்யின் விலை பீப்பா ஒன்றுக்கு 13 டொலருக்கும் குறைவாக வீழ்ச்சியடைந்தது. 1978 க்குப்பின் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த விலை இதுவாகும்.

ஐக்கிய அரபு எமிரேட்டுகளின் மிகப் பெரிய எண்ணெய் உற்பத்தி நாடான அபூதாபி வீழ்ச்சியடைந்துவரும் உலக எண்ணெய் விலைகளை அனுசரித்து, சுத்திகரிக்கப்படாத எண்ணெய் விலையை மூன்றாவது தடவையாக குறைத்தது.

கல்பிட்டி, பள்ளியவத்தை ஆகிய இடங்களில் வதியும் கடற்றொழிலாளரின் நலன்கருதி கடற்றொழில் அமைச்சு புத்தளம் மாவட்டத்தில் இன்னொரு கடற்றொழில் துறைமுகத்தை நிர்மாணிக்கும். இலங்கை கடற்றொழில் துறைமுக கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படும் இவ்வேலைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 5.5 கோடி ரூபா கடனொன்றை வழங்கும்.

10. ஆசிய அபிவிருத்தி வங்கி சீனாவை அதன் 47வது அங்கத்துவ நாடாக சேர்த்துக் கொண்டது.

13. கொழும்பில் இலங்கை - சீன அரசாங்கங்களுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்றின் பிரகாரம் சீனா இலங்கைக்கு 1 கோடியே 65 லட்சம் ரூபா வட்டியில்லா கடனொன்றை வழங்கும். இக்கடன் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக் கூடிய செய்திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும். இது 10 வருடங்களில் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன் 10 வருட தாண்சாண்ய காலமும் கொடுக்கப்பட்டுள்ளது.

14. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்திருக்கும் லுணுகம் வெஹெர பல் - நோக்கு நீர்ப்பாசன செய்திட்டத்தை இலங்கை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்.

17. மொனராகலை மாவட்டத்தில் கிழ் ஊவாவில் அரசாங்கம் அடுத்த வருடம் ஒரு நீர்ப்பாசனச் செய்திட்டத்தை அமுல் செய்யும். காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் தரவுகளின் பிரகாரம் ஆறு நடுத்தர திட்டங்களைக் கொண்ட இச் செய்திட்டம் 15 கோடி ரூபா செலவில் மேற் கொள்ளப்படும்.

அண்மையில் மத்திய மாகாணத்திலும் கிழ் மாகாணத்திலும் ஏற்பட்ட நிலச்சரிவுகளாலும், வெள்ளப் பெருக்கினாலும் பாதிக்கப்பட்டோருக்கு புனர் வாழ்வு அளிப்பதற்கென ஜப்பானிய அரசாங்கம் இலங்கைக்கு 23 லட்சம் ரூபா பண நன்கொடை ஒன்றை வழங்குமென கொழும்பில் ஜப்பானிய தூதரகம் அறிவித்தது.

18. மீன் உற்பத்தியாளரதும் நுகர்வோரதும் நன்மை கருதி ரூ. 8. 8 கோடி செலவில் பின்லாந்து அரசாங்கத்தின் உதவியுடன் ஒரு குளிர் சாதன தொழிற்சாலை நிர்மாணிக்கப்படும்.

23. மகாவலிகங்கைக்கு குறுக்காகநிர்மாணிக்கப்பட்டிருக்கும் அணைகளில் கடைசி அணையான றந்தெனிகலை அணைக்கட்டினை ஜனாதிபதி ஜயவர்தன அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். இது 697,000 ஏக்கர் நீர்ப்பரப்பினைக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உண்ணாட்டு மீன்பிடி

சரித்திரத்துக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதனின் ஆதி முன்னோர் தமது சுற்றுச் சூழலிருந்து மீனைப்பிடித்து நுகர்ந்தனர்; எனவே மீன்பிடியானது மனிதனின் மிகப் புராதனமான தொழில்களில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. ஆதி காலத்திலிருந்தே உலகின் சகல பாகங்களிலும் மனிதன் வேட்டையாடியும், மீன் பிடித்தும் தன் உணவைத்தேடி வந்திருக்கிறான். புராதன நாகரிகங்களின் கலை வெளிப்பாடுகள் விலங்குகளுடனும், மீன்களுடனுமான மனிதனின் போராட்டத்தைச் சித்தரிக்கின்றன. இன்னமும் கூட சில ஆதிவாசி கலாசாரங்களிலும், நவீன மாற்றங்களுக்குட்படாத சமூகங்களிலும் இப்பழக்கம் நிலைத்து வருகிறது. மீன்பிடித் தொழில் நுட்பத்திலும், உணவு விஞ்ஞானத்திலும், பாக முறைகளிலும் நவீன முன்னேற்றங்கள் எய்தப்பட்டிருக்கும் இற்றை நாளிலும் கூட நவீன மனிதன் தனது முன்னோர்களைப் போலவே மீனை வேட்டியாடி வருகிறான். மீனைப் பிடித்து வளர்த்து, மீன் பண்ணை முறையொன்றை விருத்தி செய்வதில் அவன் அவ்வளவு ஆர்வம் காட்டுவதாக தெரியவில்லை.

உலகின் சில பாகங்களில் வாழும் மக்கள் தமது உணவுக்கான மீனை சமுத்திரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் அதேவேளையில், வேறு சில பாகங்களில் வாழும் மக்கள் உள்ளூர் நீர் நிலைகளிலிருந்து மீனைப் பெற்று வருகின்றனர். எனினும், உள்ளூர் மீன்பிடியானது விகிதாசார ரீதியில் மிகக் குறைந்தளவு பங்களிப்பினையே செய்கிறது. உணவு விவசாய தாபன தரவுகளின் பிரகாரம் 1983 ம் ஆண்டின் மொத்த மீன் உற்பத்தியில் உள்ளூர் மீன்பிடி 11.6 சதவீதமாகவே இருந்துள்ளது. மேலும், இவ்வுள்ளூர் மீன்பிடி அவற்றின் செயற்பாட்டு மாதிரிக்கிணங்க இரு பிரதான வகைகளாக பிரிக்கப்படுகிறது. ஒன்று மீன் பிடித்தல்; மற்றது திட்டமிட்டு மீன் வளர்த்தல்.

மீன் பிடித்தலானது, நீர்ப் பரப்பில் மீன் வளங்களின் பெருக்கத்தை தூண்டும் இயற்கைச் சூழல் நிலைமைகளிலும், அதற்குப் பிரயோகிக்கப்படும் தொழில் நுட்பத்திலுமே பெருமளவில் தங்கியுள்ளது. எனினும், இயற்கைச் சூழலிருந்து வேட்டையாடப்படும் மீனின் அளவு அதிகரித்து வரும் தேவையை ஈடு செய்யக் கூடியதாக இல்லை. தொடர்ந்தும் பெருமளவில் மீன்கள் பிடிக்க்ப்பட்டு வருவதன் காரணமாக எமது பாரம்பரிய மீன் விளை நிலங்கள் மிகை அளவில் சுரண்டப்படலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. சில பிரதேசங்களில் மீன் வளங்களின் இயற்கை அதிகரிப்பு வேகத்தை விடவும் கூடிய வேகத்தில் நவீன தொழில் நுட்பத்தின் உதவியுடன் மீன்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன. இதற்கான ஒரு மாற்று வழி மீன் பண்ணை அமைப்பாகும்; எனினும், மீன் பண்ணை அமைப்பு மிக அரிதான அதே வேளையில் கடினமான பணியாகும். ஏனெனில் திறந்த கடல்களிலோ அல்லது விரிவான நீர்ப்பரப்புகளிலோ மீன் பண்ணைகளை அமைக்க முடியாது. பிடிக்கப்படும் மீன்கள் சகல நுகர்வோரினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதில்லை. எனவே, உணவுக்காக விலங்குகளையும், தாவரங்களையும் வீட்டில் வளர்ப்பது போல மீன்களையும் ஏன் வளர்க்கக் கூடாது எனச் சிலர் கேட்கின்றனர். இப்பின்னணியிலேயே சிலர் நீர் நிலைகளிலும், உள்ளூர் நீர்ப் பரப்புகளிலும், மீன்களை வளர்த்து வருகின்றனர். எதிர்கால உலகின் மீன் தேவைகளை நிறைவு செய்வதில் இத்துறைக்குள்ள ஆற்றலும், பண்ணை மீன் வளர்ப்பின் விருத்தியும் இப்பொழுது அதிகளவில் அங்கீகாரம் பெற்று வருகிறது.

## சர்வதேச இயனோக்கு

உணவின் ஒரு மூலமென்ற வகையில் உள்ளூர் மீன்பிடியின் முக்கியத்துவத்தை ஆரம்ப காலத்திலேயே மக்கள் அறிந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 1

உலகின் மொத்த மீன்பிடியில் உள்நாட்டு மீன்பிடியின் பங்கு

(பத்துலட்சம் மெட்ரிக் தொன்களில்)

| வருடம் | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|---|---|---|---|
| உள்ளூர் மீன்பிடி | 7.7 | 7.1 | 7.3 | 7.6 | 8.1 | 8.4 | 8.9 |
| மொத்தம் | 68.2 | 70.2 | 71.0 | 72.0 | 74.8 | 76.5 | 76.5 |
| % | 10.44 | 10.10 | 10.22 | 10.59 | 10.89 | 11.02 | 11.58 |

திருந்தனர். எனினும், பண்ணை மீன், வளர்ப்பும், செயற்கை வளர்ப்பு உத்திகளும் பெரும் பாலான ஆசிய நாடுகளில் இருபதாம் நூற்றாண்டிலேயே விருத்தியுற்றன.

உணவு விவசாய தாபன புள்ளி விவரங்களின்படி 2000 ம் ஆண்டளவில் உள்நாட்டு மீன் பிடி 5 கோடி தொன்களாக இருக்கும். ஆசிய பிராந்தியத்தைப் பொறுத்த வரையில் உண்ணாட்டு மீன்பிடியின் பங்கு 1977ல் 13.9 சதவீதத்திலிருந்து 1983ல் 16.5 சதவீதமாக அதிகரித்துள்ளது. இப்பிராந்தியம் உள்ளூர் மீன் பிடியில் கூடிய ஈடுபாடு காட்டுவதனையே இது காட்டுகிறது. இதே காலப்பிரிவில் இலங்கையும் மிகத் திருப்திகரமான செயற்பாட்டினைக் காட்டியுள்ளது. உண்ணாட்டு மீன் பிடியின் பங்கு 1977 ல் 9.4 சதவீதமாக இருந்து 1983 ல் 15.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. உலக கடல் சார் வளங்களின் உற்பத்தியில் ஆசியாவின் பங்கு 1977 ல் 58.7 சதவீதமாக இருந்து 1983 ல் 64.8 சதவீதமாக அதிகரித்தது.

கடல் சார் உற்பத்தித்துறையின் வளர்ச்சி விகிதத்தை விடவும் (12.09%) உள்ளூர் மீன்பிடி வளர்ச்சி விகிதம் (24.3%) அதிகமானதாக இருந்தது. இதே காலப்பிரிவில் ஆசியப் பிராந்தியத்தில் உள்நாட்டு மீன் பிடியின் வளர்ச்சி விகிதம் கடல் மீன் பிடியின் வளர்ச்சியையும் மிஞ்சியதாகவிருந்தது. இதன் விளைவாக ஆசியப் பிராந்தியம் ஒரு முன்னணி உள்நாட்டு மீன் உற்பத்திப் பிரதேசமாக இருந்தது.

அட்டவணை 2

உள்ளூர் நீர் நிலைகளில் உலகின் மொத்த மீன்பிடி

(பத்துலட்சம் மெட்ரிக் தொன்களில்)

| வருடம் | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 | 1779 - 83 வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஆபிரிக்கா | 1.5 | 1.4 | 1.4 | 1.4 | 1.4 | 1.4 | 1.4 | 4.14% |
| வட அமெரிக்கா | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.2 | 0.2 | 0.2 | +29.95% |
| தென் அமெரிக்கா | 0.2 | 0.3 | 0.2 | 0.3 | 0.3 | 0.3 | 0.3 | +27.02% |
| ஆசியா | 4.2 | 4.2 | 4.3 | 4.7 | 5.1 | 5.3 | 5.7 | +37.37% |
| ஐரோப்பா | 0.3 | 0.3 | 0.3 | 0.4 | 0.4 | 0.4 | 0.4 | +33.25% |
| சோ.சோ.கு. | 0.8 | 0.7 | 0.8 | 0.7 | 0.8 | 0.8 | 0.8 | + 3.09% |
| மொத்தம் | 7.1 | 7.1 | 7.3 | 7.6 | 8.1 | 8.4 | 8.9 | 24.36% |

மூலம்: உணவு விவசாய தாபனம்

தற்பொழுது ஆசியா 58 லட்சம் தொன் உண்ணாட்டு மீனை உற்பத்தி செய்கின்றது. இதில் 92% பத்து பிரதான உற்பத்தி நாடுகளிலிருந்து வருகிறது. இந்தப் பத்து பிரதான நாடுகள் முறையே சீனா, இந்தியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, ஜப்பான், வியட்னாம், தாய்லாந்து, பர்மா, தென் கொரியா என்பனவாகும். இதில் முதல் மூன்று நாடுகளும் உலகின் மிகப்பெரிய உண்ணாட்டு மீன்பிடி நாடுகளாக அங்கீகாரம் பெற்றுள்ளன. இந்நாடுகளுடன் ஒப்பிடும்போது ஏனைய உற்பத்தி நாடுகள் குறிப்பிடக்கூடிய நிலையை எய்தவில்லை. உணவு விவசாய தாபன புள்ளி விவரங்களின்படி சீனா ஆசிய உண்ணாட்டு மீன் உற்பத்தியில் 32 சதவீதத்தைப் பெறுகிறது. பொதுவாக ஜப்பான் செறிவான உண்ணாட்டு மீன்பிடி முகாமை உத்திகளைக் கையாண்டு வருகின்றது. மலேசியா, இலங்கை போன்ற நாடுகளும் 1977 - 1983 காலப்பிரிவில் உண்ணாட்டு மீன் உற்பத்தியில் முன்னணிக்கு வந்துள்ளன. இலங்கையில் உண்ணாட்டு மீன் பிடியின் கீழ் வரும் நிலப்பரப்பின் விஸ்தீரணம் அதிகரித்துள்ள அதேவேளையில் ஒவ்வோர் அலகினதும் உற்பத்தித்திறனும் விருத்தியுற்றுள்ளது. எனினும், இந்நாடுகளில் உண்ணாட்டு மீன் பிடி இன்னும் அதன் குழந்தைப் பருவத்திலேயே இருக்கின்றது.

மேலும், உற்பத்தி செய்யப்படும் மீன் உள்நாட்டு தேவைகளை நிறைவு செய்யக் கூடியதாகவும் இல்லை. தென் கிழக்காசியப் பிராந்தியத்தின் உண்ணாட்டு மீன் பிடி ஆற்றலில் 10 சதவீதம் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இது இத்துறையில் பாரிய வளர்ச்சி வாய்ப்புக்கள் இருப்பதனைக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் உண்ணாட்டு மீன் வளர்ப்பு

இலங்கை ஒரு தீவாகையால் கரையோரங்களில் மீன்பிடித்தல் எக்காலத்தும் சாதகமான ஒரு முயற்சியாக அமைந்துள்ளது. எனினும், அண்மைய தசாப்தங்களில் மீன்பிடிப்பவர்களுக்கு அதிக தடைகள் ஏற்பட்டு வந்துள்ளன. முதலாவதாக, இலங்கைத் தீவைச் சூழவுள்ள கடலில் மீன்வளம் குறைந்து வருகிறது. அத்துடன் பாதுகாப்புப் பிரச்சினைகளும் அதிகரித்து வந்துள்ளன. ஆழ்கடலில் மீன்பிடிப்பதற்கு பெருமளவில் முதலீடும் உயர்தர தொழில் நுட்பமும் தேவைப்படுவதும் மற்றுமொரு பிரச்சினை. எதிர்காலத்தில் இப்பிரச்சினைகள் மேலும் உக்கிரமடையலாம் என நம்பப்படுகிறது. எனவே மாற்று வழியைப் பற்றி தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இந்நிலை, உள்நாட்டு மீன் வளர்ப்பின் மீது கவனத்தைத் திருப்ப உதவியுள்ளது. இது இந்நாட்டின் போசாக்குத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு வழியாகும். இதன் விளைவாக நாட்டின் மொத்த மீன் உற்பத்தி சென்ற 9 ஆண்டுகளில் பின்வரும் அட்டவணையிற் கண்டவாறு வீழ்ச்சி அடைந்துள்ளது.

கடல்மீன் உற்பத்தி பெருமளவில் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் நிச்சயமற்றதாக இருக்கையில், உள்நாட்டு நீர் நிலைகளில் எதிர்காலத்தில் மீன் உற்பத்திக்கான வாய்ப்புகள் பற்றிய நிலை தெளிவாகி வருகிறது. பரவைக்கடல்கள் உட்பட நாடெங்கும் பரவலாகக் காணப்படும் நீர்நிலைகள் 8,00,000 ஏக்கர் பரப்புடையனவாகும். இவற்றில் வருடாந்தம் 80,000 – 90,000 தொன் மீன் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த உற்பத்தி அளவை, தற்போதுள்ள நீர் நிலையங்களை விரிவாக்கி தொழினுட்ப உள்ளீடுகைகளைக் கூட்டுவதன் மூலம் அதிகரிக்கலாம். மேலும், பல்வேறு (உள்நாட்டு, வெளிநாட்டு) நிறுவனங்கள் மேற்கொண்டுள்ள முன்னோடித் திட்டங்களின் மூலம், கடல்மீன் உற்பத்தியை விட உள்நாட்டு மீன் வளத்தை அபிவிருத்தி செய்தற்கான செலவு குறைவானது என்று தெரிய வந்துள்ளது. அதேவேளை இதனால் பரவலான அதிகபயனும் கிடைக்கும். அத்துடன் இத்தகைய திட்டங்கள் அளவில் சிறயனவாதலால் நிர்வகிப்பதும் இலகு. தற்போதைய இனப் பிரச்சினை காரணமாகவும் வளமான வட, கிழக்கு கடற் பிரதேசங்களின் நெருக்கடி நிலை காரணமாகவும் வழக்கமான முயற்சிகள் தடைப்பட்ட நிலையிலுள்ள மீனவர்களை வருவாய் தரத்தக்க தொழில்களில் எவ்வாறு ஈடுபடுத்தலாம் என்பது பற்றி ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இவர்களின் தொழில் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பது, கடல்மீனின் உற்பத்தி அளவில் பிரதிபலிக்கிறது. இவ்வுற்பத்தி 1983ம் ஆண்டைவிட 1984ல் 25 சதவீதம் குறைவானதாகும்.

அத்துடன், கரையோரப் பிரதேசங்களிலிருந்து உள்ளூர் பகுதிக்கான மீன் விநியோகம், நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட நடுவர்கள் தொகுதி ஒன்றினால் கட்டுப்படுத்தப்படுகிறது. இதனால் மீன்விலை நுகர்வோரைப் பொறுத்தவரை அதிகரிக்கிறது. அதிகரிக்கும் செலவுகள் காரணமாக பலர் வாங்க முடியாத அளவுக்கு மீனின் விலை ஏறுகிறது. குறிப்பாகக் கரையோரங்களுக்கு அப்பாற்பட்ட பகுதிகளில் அதிகரித்துவரும் எரிபொருட் செலவும், பாதுகாப்பு, போக்குவரவுப் பிரச்சினைகளும் வறியவர்களுக்கு எட்டாத நிலைக்கு மீன் விலையை உயர்த்தியுள்ளன. எனவே, பெருந்தொகையாகவுள்ள உள்நாட்டு நீர்நிலையங்கள், மீனைக் கொண்டுவதற்கும் கையாள்வதற்குமான செலவுகளைக் குறைப்பதன் வாயிலாக, கரையோரப் பிரதேசங்களில் மீன்பிடித் தொழிலை ஒருமுகப் படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகளைக் குறைப்பதற்கு உதவலாம். மீன் உற்பத்தித் துறையைப் பன்முகப்படுத்தவதற்கு மட்டுமன்றி அதனை அபிவிருத்தி செய்வதைத் துரிதப்படுத்தவும் உதவும். அத்தகைய அபிவிருத்தியானது, குறிப்பாக நீர்நிலையங்களுள்ள ஆனால் நியாய விலையில் மீன் கிடைக்காத பகுதிகளில் வாழும் கிராம மக்களின் பொருளாதார நிலையையும், போசாக்குத் தரத்தையும் உயர்த்துவதற்கும் உதவும். வரண்ட வலயத்தில் மேற்கொள்ளப்பட்ட பல ஆய்வுகள் இந்நிலையை நிறுவியுள்ளன.

தென்னாசிய, கிழக்காசிய நாடுகளில் நடாத்தப்பட்ட பல ஆய்வுகள், அமைவிடத்தைப் பொறுத்து மீன்பிடியும் அதனோடு தொடர்புடைய பிற முயற்சிகளும், வறிய கிராமத்தவர்களுக்கு வருமானத்துக்குரிய பிரதான துணைவழியாக அமைகிறது

அட்டவணை 3

நாட்டின் மொத்த மீன் உற்பத்தியில் கடல் மீனின் பங்கு (தொன்கள்)

| | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 | 1984* |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த மீன் உற்பத்தி | 136681 | 154121 | 165723 | 184722 | 206408 | 210100 | 217418 | 167750 |
| கடல் மீன் உற்பத்தி | 123718 | 137547 | 148673 | 164773 | 176398 | 176700 | 181918 | 136750 |
| பங்களிப்பு சதவீதம் | 90.8 | 89.3 | 89.7 | 89.2 | 85.9 | 84.1 | 83.8 | 80.9 |

* உத்தேசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைக் காட்டியுள்ளன. எனவே உள்நாட்டு மீன் பிடித் தொழில் துணைவருவாய்க்கு மிகப் பொருத்தமானதொரு வழியாகும். காணியற்றவர்களாகவும், பகுதிநேர விவசாயத் தொழிலாளர்களாகவும் உள்ளவர்களிற் பலருக்கு இது ஒரு துணை வருவாய்க்குரிய வழியாக அமைகிறது. உவர்நீர், பரவைக்கடல், வளைகுடா முதலியவற்றில் மீன் பிடிப்பவர்களுக்கும் இந்நிலை பொருந்தும்.

எனவே, பெருந்தொகையான நீர்நிலைகளுள்ள இலங்கை நாட்டின் மக்களிடையே நன்னீர் மீன் வளர்ப்பை நயப்புக்குரியதாக ஆக்குதற்குரிய முயற்சி, கடல் மீன்பிடித் தொழிலுக்கு ஒரு மாற்று வழியாக அமையும் என்பது திண்ணம். இயற்கையான மீன்வளம் குறைந்து வருவதாலும், வேலையின்மை, சிறியளவு கடல் மீன்பிடியினுல் போதிய வருமானமில்லாமை போன்ற பிரச்சினைகள் காரணமாகவும் சிறந்த போசாக்கு அளிப்பதற்கும், கூடிய வருமானத்திற்கும் மீன்வளர்ப்பு அளிக்கும் வாய்ப்பு பற்றி நுணுக்கமாக ஆராய்தல் அவசியமாகும்.

மேலும், மக்கள் விரும்பும் மீன் உணவு வகைகளுக்கும் வழங்கலுக்கும் இடையிலுள்ள இடைவெளியினை நிரப்புவதற்கும் உள்நாட்டு மீன்வளர்ப்பு சிறந்ததொரு வழி என்பதை மீன் பொருட்கள் சம்பந்தமான தேவை வழங்கல் பற்றிய தொடக்கநிலை ஆய்வு எடுத்துக் காட்டியுள்ளது. துரதிர்ஷ்டவசமாக இலங்கையில் உள்நாட்டு மீன்வளர்ப்பு நீண்டகாலமாக போதியளவு அங்கீகாரம் பெறவோ ஆதரவு பெறவோ இல்லை. அண்மைக் காலங்களில் தான் அரசாங்கங்கள் பெறுமதி வாய்ந்த மீன் உற்பத்தித்துறை மீது அதிக கவனஞ் செலுத்தத் தொடங்கின. இதற்குரிய காரணங்களை நாம் மேலே ஆராய்ந்துள்ளோம். வேறுபல ஆசிய நாடுகள் இந்நிலையை வெகுகாலத்துக்கு முன்பே உணர்ந்து இப்பொழுது மிகநவீன முறைகளைக் கையாண்டு உள்நாட்டு மீன்வளர்ப்பில் ஈடுபட்டுள்ளன. அந்நாடுகளின் மீன் தேவையின் பெரும்பகுதி, வீட்டு மீன்வளர்ப்புத் திட்டங்களினூடாக வழங்கப்படுகிறது. உள்நாட்டு மீன் வளர்ப்பும் நுகர்வும் 20ம் நூற்றுண்டின் நடுப்பகுதியிலிருந்து மெதுவாகவும் படிப்படியாகவும் வளர்ச்சியடைந்தது என்பதையும் சென்ற தசாப்தத்தில் இது துரித வளர்ச்சி அடைந்துள்ளது என்பதையும் பதிவுச் சுவடிகள் காட்டுகின்றன. ஆசிய நாடுகளில் உள்நாட்டு மீன்பிடி விரிவாக்கப்பட்டமையினுல் கடல் மீன்பிடித் தொழிலில் மேலும் முதலீடு செய்து அபிவிருத்தி செய்யும் கொள்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கடல் மீன் பிடிப்பதற்கு அதிக செலவு ஏற்படுகிறது. அதேவேளை கடல் மீன் வளமும் குறைந்து வருகிறது. இதற்கு மாருக உள்நாட்டு நன்னீர் மீன் வளர்ப்பிற்கு ஒரு சில தொழினுட்ப, நிதி உள்ளிடுகைகளே தேவைப்படுகின்றன. சிறு காணிச் சொந்தக்காரர்களான விவசாயிகள் கூட மீன் வளர்ப்பில் ஈடுபடலாம். கடலோரங்களிலும் ஆழ்கடலிலும்மீன்பிடிக்கும் திட்டங்களை விஸ்தரிப்பதற்குப் போதிய நிதி, தொழினுட்ப வளங்கள் இல்லாமையால் மூன்றும் உலக நாடுகளில் சென்ற மூன்று சதாப்தங்களாக உண்ணுட்டு மீன் வேளாண்மை மீது அதிக கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

## வரலாற்றுத் தொடர்புகள்

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே இலங்கையில் நன்னீர் நிலையங்களில் மீன்பிடிக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. அக்கால மக்கள், மீன் உணவில் உள்ள புரதச் சத்தின் பெறுமதியை அறிந்த நிலையில் அல்லது அறியாத நிலையில் மீனை உண்டு வந்துள்ளனர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் நாட்டின் புவியியல் நிலைமைகள் மீன் வேளாண்மைக்குச் சாதகமாக அமைந்திருந்தன. இது அக்கால மக்கள் உள்நாட்டு நீர் நிலையங்களில் மீன்பிடிப்பதற்கு வாய்ப்பளித்தது. மீன் புதைபடிவங்களும் தூண்டில்களும் கண்டுபிடிக்கப்பட்டு, அவை கி. மு. 6000 ஆண்டுக்குரியவை என பி. ஈ. பி. தரணியகலை அவர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அமைவிடங்களிற் காணப்பட்ட புதை பொருள் ஆதாரங்களும் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட புதைபடிவங்கள், பண்டைய நாகரிகம் என்பனவும் நீர் சார்ந்த சமூகம் ஒன்று பற்றிய அடிப்படைச் சாற்றுகளைத் தந்துள்ளன. இவற்றிற் பல உள்நாட்டு நீர் நிலையங்களுடனும், அவற்றுக்கும் அச்சமூக வாழ்க்கைக்குமிடையே இருந்த நெருங்கிய தொடர்பு பற்றியனவுமாகும். அவர்கள் தம் அடிப்படைத் தேவைகளுக்காக கடலை நாடுமுன் ஆறுகள், குளங்கள், குடாக்கள் போன்ற உள்நாட்டு நீர் நிலையங்களிலேயே மீன் பிடித்தனர். பண்டைய காலத்தில் உள்நாட்டில் மீன்பிடித்தனர் என்பதற்கும் வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. ஒரு சிறந்த உதாரணம் 2ம் நூற்றுடைச் சார்ந்த பரிமியாற்றுக்குளக் கல்வெட்டாகும். இது, பொலனகார குளங்களின் கால்வாய்களில் பிடிக்கப்பட்ட மீன்கள் பங்குபோடப்பட்டு எவ்வாறு உபயோகிக்கப்பட்டன என்பது பற்றிய கருத்தைத் தருகின்றன. ''மீன் பங்கு'', கால்வாய்கள், குளங்களிற் காணப்பட்ட மீன்கள் தொடர்பான உரிமைபற்றிய சட்டங்கள் பற்றிய குறிப்புகள் சமந்தபசாதிகாவிலும், பபன்சுச்சாரியிலும் காணக்கிடக்கின்றன. மஹாவம்சத்தின்படி மீன் எப்பொழுதும் ஓர் ஆடம்பர உணவுப் பொருளாகக் கருதப்பட்டது. மீன் உண்ண விரும்பிய சிலர், பொதுவான அல்லது பகிரங்க நீர் நிலைகளில் கவனமாக மீன்களைப் பிடித்து வீட்டுப் பொய்கைகளுக்குக் கொணர்ந்து,

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றை உணவுக்காகப் பயன்படுத்தும்வரை உணவூட்டி, வளர்த்ததாக சமந்தபசதிகா கூறுகிறது. இக்கால கட்டத்தில் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டது என்பதும் அதனை சமயமோ சட்டமோ தடுக்கவில்லை என்பதும் அவதானிக்கப்படலாம். பண்டைக்காலத்தில் நாட்டின், உட்பகுதிகளுக்குத் தேவையான மீன்கள் உள்நாட்டு நீர்நிலையங்களிலிருந்தே பெறப்பட்டன என்பது கண்கூடு.

இலங்கையின் மத்திய காலத்தில் உள்நாட்டு மீன் மக்களால் அதிகம் நயக்கப்பட்டது. கிடைக்கத்தக்கதாகவுள்ள வரலாற்று ஆதாரங்களின்படிசில பகுதிகளில் மீன் அத்தியாவசிய உணவுப் பொருளாகத் திகழ்ந்துள்ளது. பத்தாம் நூற்றுண்டின் மெதிரிகிரிய தூண் கல்வெட்டு, பௌத்த பிக்குகள் மீன் உண்ணுவதற்காக சட்டம் தளர்த்தப்பட்டது பற்றிய சான்றுகளைத் தருகிறது.

17 ம் நூற்றுண்டில் ரொபட் நொக்ஸ் இலங்கையில் உள்நாட்டு மீன்பிடியின் நிலைபற்றி தமது எழுத்துக்களிற் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, பதியப்பட்ட வரலாற்றுக் காலத்திலிருந்தே இலங்கையில் மதரீதியான தடையோ மக்கள் எதிர்ப்போ இன்றி உள்நாட்டில் மீன் வளர்க்கப்பட்டது என்பதும், பிடித்து உண்ணப்பட்டது என்பதும், வரலாற்றுக்கு முன்பே மீன் பிடிக்கப்பட்டதென்பதும் ஐயத்திற்கிடமில்லாத உண்மையாகும்.

**பழக்கங்களும் உண்ணும் பாங்கும்**

மக்கள் தாம் வாழும் சூழலுக்கு ஏற்ப அடிக்கடி தமது உணவுப் பழக்கவழக்கங்களை மாற்றிக் கொண்டுள்ளனர். அண்மிய இடங்களிற் கிடைக்கும் உணவு வகைகள் மக்கள் அதிகமாக விரும்பும் உணவாகவும், பொது உணவாகவும் அடிப்படை உணவாகவும் திகழ்ந்துள்ளன. அதே போன்று தம் சுற்றுடலில் உள்ள மீன்வகைகளும் அவர்கள் விரும்பி உண்ணும் உணவாகின. ஆதலால் கடற்கரையோர மக்கள் கடல் மீனையும், கடலிலிருந்து வெகுதூரத்தில் நாட்டின் மத்திய பகுதியில் வாழ்ந்த மக்கள் உள்நாட்டு நீர் நிலையங்களிற் காணப்பட்ட மீன்களையும் உண்ண முற்பட்டனர். சமீப நூற்றுண்டுகளில் கடலில் மீன் பிடித்தல் பல காரணங்களின் நிமித்தம் அதிக பிரசித்தி பெறலாயிற்று. சிலகரையோரப் பகுதிகளில் சனத்தொகை அதிகரித்ததோடு, கடல் மீனுக்குக் கூடிய பொருளாதார, சமூக அந்தஸ்தும் அளிக்கப்பட்டது. இவ்வகையில் உள்நாட்டு மக்களின் நிலை தாழ்ந்திருந்தது. இதன் விளைவாக உள்நாட்டில் வாழும் மக்கள் உள்நாட்டு மீன்களை உண்ண மறுத்தனர். இதற்கு மற்ருெரு காரணம் கடல் மீன் உட்கொள்பவர்கள் அதிக செல்வம் படைத்தவர்கள் எனக் கருதப்பட்டமையாகும். அதிக உற்பத்திச் செலவு, செலவுமிக்க வழங்கல் ஏற்பாடு முதலியவற்றினுல் மீனின் விலை அதிகரிக்க வறிய மக்கள் அதனை விலைகொடுத்து வாங்க முடியவில்லை.

மேலும், கரையோரப் பகுதிகளிலிருந்து தொழில் நிமித்தம் உள்நாடு சென்றவர்களும் தம் சொந்தப் பிரதேசத்தில் வழக்கமான உணவுச் சுவைகளைப் பின்பற்றி உள்நாட்டு மீன்களை விரும்பவில்லை. எவ்வாருயினும், மலிவு விலையில் மாமிசப் புரதம் பெற்றுக் கொள்ள முடியாத வறிய மக்கள் உள்நாட்டு மீன்களை விரும்பி உண்டனர். கடல் மீன் உட்கொள்வதில் உள்ள சமூக அந்தஸ்துக் காரணமாகவே நடுத்தர வருமானமுள்ளவர்களும் கடல் மீனை விரும்பி உட்கொண்டனர்; அன்றி அதன் போசாக்குக்காகவோ, பொருளாதார காரணங்களுக்காகவோ அல்ல. உயர்தர, நடுத்தர வருமானம் பெறுவோர் கடல் மீன் கிடைக்காதுபோது கூட உள்நாட்டு மீனை உட்கொள்ள விரும்பவில்லை. எனினும், உள்நாட்டு வறியமக்களிடையே உள்நாட்டு மீனினங்கள் நயக்கத்தக்க உணவாகத் திகழ்ந்தன. ஆனுல், உணவுப் பழக்கங்கள், சுவை என்பன காரணமாக வெளிநாட்டு மீனினங்கள் மக்களிடையே அவ்வளவாக நயக்கப்படவில்லை. வீட்டு வாசலிலேயே உள்நாட்டு மீன் மலிவாகக் கிடைக்கத்தக்கதாக இருப்பினும், வெளிநாட்டு மீனினங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட தொடக்க காலத்தில் அவை பிரபல்யமடையவில்லை. உள்நாட்டு மீன்களைப் பொறுத்தவரை இரண்டு பிரச்சினைகள் உள்ளன. ஒன்று அதன் சுவை; மற்றது அது வளர்க்கப்படும் முறை. மக்கள் அதனை அதிகமாக விரும்பாமையால் போட்டி விலையைப் பெறுவது கஷ்டமாகும். இதனுல் உள்நாட்டு மீன் உற்பத்தியாளருக்கு குறைந்த வருவாய் கிடைக்கிறது. இதன் விளைவாக உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களின் உற்சாகம் குறைந்ததோடு இக்கைத்தொழிலின் முன்னேற்ற வேகமும் குறைந்தது. இந் நிலைமையைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் உதவிப்பணம், ஊக்கப்பாடுகளுக்காக சென்ற பத்தாண்டுகளில் அதிக பணம் செலவிட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளில் ஒன்று புதிய பாக முறைகளை அறிமுகப்படுத்தியமையாகும். இது, புதிய சுவைகளுக்குப் பழகிக் கொள்ளவும் புதிதாக அறிமுகப்படுத்திய இனங்களை மக்கள் விரும்புமாறு செய்யவும் உதவியுள்ளது. இம்முயற்சி, இம்மீனினங்களைப் பிரபல்யப்படுத்தவும் சந்தைப்படுத்தவும் பெரிதும் உதவியுள்ளது.

அண்மைக்காலத்தில் வெளிநாட்டு மீனினங்களைப் பிரபல்யப்படுத்துவதிலும் சந்தைப்படுத்துவதிலும் வெற்றி காணப்பட்டுள்ளது. இது, எளிமையான, செலவு குறைந்த தொழினுட்பம், சமையல் செய்து காட்டல் வகுப்புகள் என்பவற்றின் மூலமும் பதப்படுத்திய அல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரளவு பதப்படுத்திய தயாரித்த மீன் உணவுகள் மூலமும் சாதிக்கப்பட்டுள்ளது. ரசமாலுபதி, மீன் விரல்கள், மீன் சோசேஜ்.. முதலியன நகர்ப்புற சந்தைகளில் அறிமுகப் படுத்தப்பட்டன. இத் தொடர்பில், வெளிநாட்டு நன்னீர் மீன் உணவு வகைகள் உல்லாசபயண ஹோட்டல்கள், உணவகங்களிலும் உயர்மட்ட சமூக வட்டங்களிலும் அறிமுகப் படுத்தினுல் மக்களின் நுகர்வுப் பாங்குகளை மாற்றுவது சாத்தியமாகும் என்பது கவனிக்கப்பட வேண்டும். இதனுல் உள்நாட்டு மீன் உற்பத்தியாளரின் பொருளாதார நிலையும் உயரலாம். எவ்வாருயினும் பிரபயல் படுத்துவதற்கு குறித்த நகர்ப்புறங்கள் இலக்காகத் தேர்ந்தெடுக்கப் பட்டமையால், முழுமையான பிரபல்யப்படுத்தல் திட்டத்தில் ஓர் அம்சம் கவனத்திற் கொள்ளாமல் விடப்பட்டுள்ளது. இந்தப் பெறுமதி வாய்ந்த புரதம் எக்கிராமமக்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டதோ அவர்கள் இதன் பயனை அடையாது போகலாம்.

அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள், உள்நாட்டுச் சந்தைக்கு அதிக பிராணிப் புரதத்தை வழங்க நடவடிக்கை எடுத்து வந்தன. இதற்காகப் பல மீன் அபிவிருத்தித் திட்டங்களை அறிமுகப் படுத்தி உற்பத்தியைப் பெருக்க நாடின. தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் இறக்குமதி செய்யப்பட்டது. 1950 ல் அறிமுகப்படுத்திய உள்நாட்டு மீன்வளர்ப்பு உட்பட அதிக மீன் வழங்க மேற்கொண்ட முயற்சிகள் 1980 முதல் மொத்த மீன் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க விளைவை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டம், உள்நாட்டு மீன்தொழிலில் அசாதாரணமான மாற்றத்தைத் தோற்றுவித்தது. வறண்ட வலயத்தில் குறிப்பாகக் காணப்பட்ட இம்மாற்றம் அதிக வருவாயையும் வளங்களையும் அளித்தது. பருவ குள மீன் பிடித்தலினுல் வறண்ட வலய கமக்காரர்களின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட தாக்கம் தொடர்பாக மக்கள்

அட்டவணை 4

உள்நாட்டு மீன்களை விருத்தி செய்வதற்கான மானியங்கள்

| ஆண்டு | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 யூன்வரை |
|---|---|---|---|---|---|
| வழங்கிய மீன் கூறுகள் | 370 | 901 | 669 | 1881 | 274 |
| அளிக்கப்பட்ட பணவுதவி (ரூ. பத்துலட்சம்) | .64 | 1.3 | 3.6 | 1.9 | 1.6 |

வங்கி ஆராய்ச்சிப் பிரிவு நடாத்திய ஆய்விலிருந்து, கமக்காரர்கள் உட்கொள்ளும் மீனின் அளவு 1983 ம் ஆண்டைவிட 7.2 இருத்தல் தலைக்கு அதிகமானது என்பது தெரியவந்தது. அதாவது 40.47 இருத்தல்; உள்நாட்டு மீன் வளர்ப்புத்திட்டத்தின் முன்னேற்றத்திற்கு இது தெளிவானதோர் எடுத்துக்காட்டாகும். சென்ற தசாப்தங்களில் போசாக்குக் குறைவும் வறுமையும் நிலவிய வறண்ட வலயத்தில் வெளிநாட்டு மீனினங்கள் பிரபல்யமடைந்து இம்மாற்றம் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பருவகாலங்களில் குளங்களில் மீன்வளர்த்தல்

இலங்கையின் வறண்ட வலயத்தில் நாட்டின் சனத்தொகையில் 15 சதவிதமானேர் வாழ்கின்றனர். அங்கு வாழும் குடியானவர்களிடையே பாரதூரமான அளவுக்குப் போசாக்குக் குறைவும் வறுமையும் காணப்படுகிறது. இவர்களில் சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் அல்லது கிராம/பருவகாலக் குளங்கள் என்பவற்றிலிருந்து நீர்பெற்று, தம் வாழ்க்கைக்கு நெல் சாகுபடி செய்வதையே நம்பிவாழும் 70,000 குடும்பங்களும் அடங்கும். வேறு பொருளாதார முயற்சிகள் இல்லாமையாலும் போதிய வருமானம் இல்லாததாலும் அவர்கள் வறுமைப்பட்டுபோசாக்கற்றவர்களாக இடர்ப்படுகின்றனர். இத் தொடர்பில் இரத்தினபுரி மாவட்டத்தில் துங்கமை என்ற கிராமத்தில் 1979 ல் கடற்றெழில் அமைச்சு தொடங்கிய மீன் வளர்ப்புத் திட்டத்தின் தாக்கத்தை அளவிடுதல் பயனுள்ளதாகும். தற்போது பருவகால குள மீன் வளர்ப்பு வறண்ட வலயத்தில் பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல பருவகால நீர் நிலைகள் குளங்களாதலால், இப்பகுதியில் மீன் வளர்ப்பு கமக்காரர்களின் பொருளாதாரத்தில் ஏற்படுத்தியுள்ள விளைவுகளை ஆராய்தல் பயனுடைத்தாகும். இப்பொழுது எழுப்பப்பட வேண்டிய வினு, பருவகாலக் குளங்களில் மீன் வளர்த்தலும் விஸ்தரிப்பும் அண்மை, அயல் பிரதேசங்களிலுள்ள கமக்காரர்கள் மீது பொருளாதார தாக்கம் எதனையும் ஏற்படுத்தியுள்ளதா என்பதாகும். ஆம் என்பதே விடை. இல்லையாளுல் இங்கு இக்கைத் தொழில் வளர்ந்திருக்கவோ மக்கள் ஆர்வம் காட்டியிருக்கவோ முடியாது. பருவகாலக் குளங்களில் மீன் வளர்க்கும் திட்டம் ஆறு ஆண்டுகளைக் கடந்துவிட்டது. 1986 ல் ஏறத்தாழ 200 பருவகாலக் குளங்களில் மீன் வளர்க்கப்படுகிறது. மொத்தம் 7000 குளங்களில் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 1986/87 ல் 2100 தொன் மீன் உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

கடற்றெழில் அமைச்சு 1979 அக்டோபரில் பருவகாலக் குளங்களில் மீன் வளர்க்கும் திட்டம் ஒன்றைத் தொடங்கியது. கமத்தொழிலே வருவாய்க்குரிய ஒரே வழியாக இருந்த துங்கமையில் இத்திட்டம் தொடங்கப்பட்டது. இது ஒரு புதுத்திட்டமாகையால், அமைச்சு இத்திட்டத்தில் பங்குகொண்டு இதனுல் ஏற்படும் பயன்களைத் தொடக்கத்திலிருந்தே எடுத்துக்காட்டி வந்தது. ஒன்பது மாதங்களுக்குப் பிறகு 17,290 இருத்தல் மீனை அவர்கள் பிடித்தெடுக்க முடிந்தது. இந்த அனுபவத்தின் விளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக இத்திட்டம் 200 குளங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது. வறண்ட வலயத்தின் பல பகுதிகளிலுள்ள கமக்காரர்கள் இத்திட்டத்தில் பங்குகொள்கின்றனர்.

பருவகாலத்தில் குளத்து மீன் வளர்ப்பதனுல் ஏற்படும் பொருளாதாரத் தாக்கத்தை இருவகையாகப் பிரிக்கலாம்:

(அ) நேரடித் தாக்கம்

(ஆ) மறைமுகத் தாக்கம்

நேரடித் தாக்கம்

மீன் வளர்ப்புப் பண்ணைத் திட்டத்துக்கு முன்பு குளத்து நீர், நீர்ப்பாசனத்துக்கும் கால் நடை உணவுக்கும் வீட்டுக் காரியங்களுக்கும் மட்டுமே பயன்படுத்தப்பட்டது. எனினும், குளத்து நீரில் மீன்களை வளர்ப்பதற்கு நிறையச் சாத்தியக் கூறுகள் இருந்துவந்தன. என்றுலும், பருவகாலத்தில் குளங்களில் மீன்களை வளர்க்கும் திட்டம் தொடங்கப்பட்டதற்குப் பின்பு, இந்தக் குளங்கள் கிராமப் பொருளாதாரத்துக்குப் பலவழிகளில் வருவாயைக் கொண்டுவரும் ஒரு மூலமாகிவிட்டது. வெளிக்கள ஆய்வொன்றின்போது நாம் குளமீன் வளர்ப்பு வெவ்வேறு வழிகளில் கிராம வாசிகளுக்கு மேலதிக அல்லது பகுதி நேர தொழில் வாய்ப்புகளையும் குறை நிரப்பு வருமானத்தையும் சிருஷ்டிக்கிறது என்பதனைக் கண்டறிந்தோம்.

ஒரே மாதிரியான நிலைமைகளில் சராசரிக் குடும்பமொன்றின் வருமானம் (ரூபா 7,906/-) உலர் வலய விவசாயிகளில் குடும்பமொன்றின் பொது வருமானத்தைவிட சற்று அதிகமாயிருக்கிறதெனக் கண்டுபிடிக்கப்பட்டது. மீனிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கழித்து விட்டால், சராசரிக் குடும்பமொன்றின் வருமானம் கிட்டத்தட்ட உலர் வலய விவசாயியின் குடும்ப வருவாயைப் போலவே இருக்கும். துங்கமா கொடையில் கிடைக்கும் உபரி வருமானம் பருவகாலத்தில் குளங்களில் மீன் வளர்ப்பதன் பயனுகவே கிடைப்பதாகத் தோன்றுகிறது. விவசாய வருமானங்கள் முதன்மை வகிக்கின்றன; விவசாயிகளின் மொத்த வருமானம் 73.37 சதவிகிதம் போல அவ்வளவு உயர்வாயிருக்கிறது. இதில் மீனிலிருந்து கிடைக்கும் வருமானம் 9.63 சதவிகிதம் மட்டுமேயாகும். எனினும், இவ்விவசாயிகள் கமத்தொழிலை மட்டும் சார்ந்திருக்கும் நிலை ஓரளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளது.

மீனவர் குடுப்பங்கள் எனப்படுவன, மீன் வளர்ப்புத் தொழிலை ஓர் உப வருவாய்த் துறையாக மேற்கொண்டுள்ள விவசாயக் குடும்பங்களாகும். மீனவரல்லாக் குடும்பங்கள் எனப்படுவன, விவசாயப் பயிர்களைச் சாகுபடி செய்வதில் மட்டுமே இன்னும் தொடர்ந்து ஈடுபட்டுவரும் விவசாயக் குடும்பங்களாகும்.

மீனவர் குடும்பங்கள் தங்கள் மொத்த வருமானத்தில் 22 சதவிகிதத்தை மீன் பிடித்தலிலிருந்து பெறுகின்றனர். ஆதலால், மீனவர் குடும்பங்கள் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வருமானத்தைச் சார்ந்திருப்பது குறைவென்பது வெளிப்படை, மீனவரல்லாக் குடும்பங்களின் வருவாய் நிலை முற்றிலும் வேறுயிருக்கிறது. மேலும், குறிப்பாக விவசாயம் முதன்மை வகிக்கும் ஒரு பொருளாதாரத்தில் விவசாயிகள் மீனிலிருந்து வருமானம் பெறும் காலம் மிக முக்கியமாகும். மீன் வருமானத்தை வறட்சிக் காலத்தில் பெற முடியும். பொதுவாக விவசாயிகள் பல்வேறு வட்டாரங்களிலிருந்து கடன் பெறும் நிர்ப்பந்தத்துக்குள்ளாகும் அறுவடைக் காலத்துக்கு முன்பு இந்த மீன் வருமானம் கிடைக்கிறது. ஆதலால், விவசாயக் குடும்பத்தில் மீன் வளர்ப்பை மேற்கொள்ளும் ஒரு வருக்கு 1981 ம் ஆண்டிலும் 1982 ம் ஆண்டிலும் முறையே மேலதிக வருமானமாகக் கிடைத்த 2,200/- ரூபாவும் 845/- ரூபாவும் நல்ல உதவியாக அமைந்தது. இந்த வருமானங்கள் வெளிவட்டாரங்களிலிருந்து இக்கமக்காரர்கள் கடன் வாங்குவதை ஆகக் குறைந்த அளவுக்குக் குறைத்துள்ளன. விவசாயம் பிரதான வருவாய்த்துறையாக இருந்த போதிலும், மீன் வளர்ப்பு, வருவாய் பெற இரண்டாவது மிக முக்கியமான துறையெனக் கருதலாம். ஏனென்றுல், மீன் வருமானம் மொத்த வருமானத்தில் 40 சதவிகிதம் வரை அமையலாம்.

பருவகாலத்தில் குளங்களில் மீன் வளர்த்தல், அறுவடைக் காலத்தில் விவசாயிகளுக்கு மலிவாகப் புத்தம் புதிய மீன்களையும் வழங்குகிறது. மேலும், நாட்டின் உட்பகுதிகளில் மீன் விலைகள் கடல் மீன் விலைகளை விட சுமார் 66 சதவிகிதம் குறைந்திருந்தன. இது, குறிப்பாக மீன் அறுவடைக் காலத்தில் நாட்டின் உட்பகுதிகளில் மீன் புசிப்போர் தங்களுடைய உணவுச் செலவுகளை ஒரு குறித்த மட்டத்துக்குக் குறைத்துக் கொள்ள முடியும். இந் நிலைமை எடுத்துக்காட்டுவதென்ன? விவசாயத்தில் உழைப்பு உச்ச நிலையிலுள்ள இரு போகங்களுக்கிடையேயுள்ள காலத்தில் கமக்காரர்கள் மீன் பிடித்தல் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யத் தங்கள் நேரத்தைப் பயன்படுத்தலாம். பருவ காலத்து குள மீன் வளர்ப்புத் திட்டங்களின் தொகை அதிகரிப்பதற்கேற்ப, இந் நடவடிக்கைகளை விரிவாக்கலாம்.

மறை முகத் தாக்கம்

நாட்டின் உட்பகுதி மீன்களின் விலைகள் குறைந்ததால், மக்கள்பலர் தாங்கள் உணவில் இத்தகைய மீன்களை அதிகமாகச் சேர்த்துக்கொள்ள முடிந்தது. இவ்விலை குறைவு ஆள்வித மீன் நுகர்வு மட்டங்களை அதிகரிக்க

(11 - ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்னீர்வாழ் பிராணி - தாவர வளர்ப்பும் நீர்த்தேக்க மீன்பிடித் தொழிலும்

"அக்வா கல்ச்சர்" என்ற ஆங்கிலச் சொற்றொடருக்கு நீர்வாழ் விலங்குகளையும் தாவரங்களையும் வளர்த்தல் என்று பொருள். விவசாயத்தைப் போலன்றி இது இலங்கையில் ஒரு பரம்பரைத் தொழிலாகச் செய்யப்பட்டுவரவில்லை. நன்னீரில் வளர்ப்பதற்கான இனங்களில் மக்களால் அதிகமாக விரும்பப்படும் இனவகைகளில் மீனும் இருந்து வந்துள்ளது. உவர்நீர்த்துறையில் கடல்சார் கூனி இறால் (சிங்க இறால்கள்) மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. கடந்த தசாப்தம் வரை இலங்கையில் கடற்றொழில் கடலிலிருந்தோ அல்லது நன்னீர் நிலைகளிலிருந்தோ மீன்பிடித்தலையே பிரதான மையமாகக் கொண்டிருந்தது. தற்போது நீர்வாழ் விலங்குகள்- தாவரங்கள் வளர்ப்பதில் மிகுந்த அக்கறை தோன்றிவருகிறது. எனினும், இந்த வளர்ப்பு (அக்வா கல்ச்சர்) மீன்பிடித் தொழிலுக்கு ஒரு மாற்று முறையாகாது; எனினும், அது நிச்சயமாக உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருமளவுக்கு நிறைவு செய்யலாம். மீன்பிடிக்கும் தொழிலில் போலன்றி மீன்வளர்ப்பில் மீனின் வாழ்க்கைச் சக்கரத்தில் மனிதன் சாதுரியமான உபாயங்களையும் முகாமைத் திறனையும் பிரயோகிக்க வேண்டியிருக்கிறது. இது மீன்வளர்ப்பு முறைகளுக்கோ அல்லது மீன்வளர்ப்பு உத்திகளுக்கோ வித்திடுகிறது.

## உபாயம்

இலங்கையில் நீர்வாழ்வனவற்றின் வளர்ப்பை விரிவாக்கும் முயற்சிகளை அதிக சிக்கலாக்கும் சில குறிப்பிட்ட சமூக, கலாசார, எல்லாவற்றிற்கும் மேலாக, சமயத் தடைகள் இருந்து வருகின்றன என்பது இரகசியமல்ல. எனினும், மீன் பிடிப்பதற்கு உள்ள எதிர்ப்பைவிட மீன்வளர்ப்பை ஏற்றுக் கொள்வதற்குக் காட்டப்படும் எதிர்ப்பு அதிகமாயிருப்பது விநோதமாகும். ஆனால், கிராம மக்களுக்கு வழங்கக்கூடிய மிகப் பொருத்தமான, மிக மலிவான விலங்குப்புரதம் நன்னீர் மீனிடமிருந்து கிடைப்பதால், ஒரு தேசியக் கொள்கையாக மீன் வளர்ப்புக்கு ஊக்கமளிப்பதைத் தவிர அரசாங்கத்துக்கு வேறு வழியில்லை. இதைச் சர்ச்சைக்கிடமான ஒரு சமூகப் பிரச்சினையாக நோக்குவதைவிட மக்களின் போஷாக்கு நிலையை உயர்த்துவதற்கான ஓர் உபாயமென்றே திட்டமாக நோக்க வேண்டும். மக்களின் சமூக நியமங்களை நுணுக்கமாக ஆராய்ந்து பார்க்குமிடத்து, நுகர்வுக்காக மீன்களை வளர்ப்பதைவிட மீன்களை வேட்டையாடும் செயலை மக்கள் அதிகமாக விரும்புகிறார்களென்று தெரிய வருகிறது. ஆதலால் உட்பிரதேசங்களில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக நாம் கைக்கொண்டுள்ள உபாயம் என்னவென்றால், பிடித்தலை அடிப்படையாகக் கொண்ட தொழிலை, வளர்ப்பை அடிப்படையாகக் கொண்ட தொழிலாகப் படிப்படியாக மாற்றுவதாயிருந்துள்ளது; இதன் மூலம் நீர்வாழ்வனவற்றின் வளர்ப்பு பற்றிய முறையியலை மெதுவாகப் புகுத்தும் காரியம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும், உண்மையிலேயே மீன் வளர்க்கும் தொழிலுக்கு நாம் போகும்போது உள்ளீடுகள், நிர்வாகம் ஆகியவற்றின் மட்டமும் உயர்கிறது. ஆனால், இதனுடன் கைகோர்த்தவாறு, மீன் வளர்ப்புப் பகுதியொன்றின் உற்பத்தியில் ஒரு விகித சம அதிகரிப்பு ஏற்படும் பிரதிபலனும் எங்களுக்குக் கிடைக்கிறது.

## கடற்றொழில் அமைச்சின் உதவி

நன்னீர் மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதற்காகக் கடற்றொழில் அமைச்சு பல்வேறு வகையான உதவிகளை அளித்து வருகிறது. அவற்றில் சில வருமாறு:

1. தற்போது, மீன்வளம் பெருகுவதற்கான சிறு மீன்கள் அரசாங்க கடற்றொழில் நிலையங்களிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. கூடிய விரைவில் இச்சிறு மீன்களுக்கான கோரிக்கை வளர்ந்ததும் சிறு மீன் உற்பத்தியில் தனியார் துறையும் துணிந்து இறங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.
2. நன்னீர் மீன் வளர்ப்பின் சகல அம்சங்கள் பற்றியும் மீனவர்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனை வழங்குதல்.
3. ஊக்குவிப்புகளாக மான்யங்கள் வழங்குதல்.
4. நன்னீர் மீன்வளர்ப்பில் பயிற்சியும் விரிவாக்கமும்.

## நீர்த்தேக்க மீன்பிடித்தொழில்

இலங்கையில் எந்த இயற்கை ஏரிகளுமில்லை. எனவே, மனிதன் கட்டிய நீர்த்தேக்க அமைப்பின் ஏரி போன்ற சூழலுக்கு மிகவும் ஏற்ற சுதேச ஏரி மீன்கள் கிடைப்பதில்லை. இதனால் திலாப்பியா போன்ற விதேச ஏரி மீனினங்களைப் புகுத்த வேண்டியிருந்தது. திலாப்பியா மொஸாம்பியன் (கொறளி) மீனை நிறைய இருப்பில் வைத்து உபயோகித்ததும் நீர்த்தேக்கங்களில் மீன் உற்பத்தி குறிப்பிடத்தக்கவாறு அதிகரித்தது. பின்னர், திலாப்பியாவையடுத்து ரி. மெலனொப்லூரா, ரி. நிலோடிகா ஆகிய மற்றும் மீனினங்கள் உபயோகிக்கப்பட்டன. இதன்பயனாக, பிடிக்கப்பட்ட மீன்கள் பல்வகையினவாக இருந்ததுடன் மட்டுமன்றி மீன் உற்பத்தியும் மேலும் அதிகரித்தது. தற்போது எங்களுடைய நீர்த்தேக்கங்களிலிருந்து ஏறக்குறைய 30,000 மெட்ரிக் தொன் நிறையுள்ள மீன்கள் உற்பத்தியாகின்றன. இவற்றில் பிரதானமாக திலாப்பியா மீனினமே அடங்கியுள்ளது. நீர்த்தேக்கங்களில் மீன் வளர்ப்பதில் சாகபட்சணிகளுக்கே (தாவர உணவு கொள்வன) இன்னும் முக்கிய இடமளிக்கப்படுகிறது. இத்தகைய இனமான திலாப்பியா துரிதமாகவும் இயற்கையாகவும் பெருகுகிறது. லேபியோ துஸ்ஸமியேனறி (ஹிரிகாரயா) என்னும் சுதேச வர்க்கத்தை முறையாக வளர்க்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு, உற்சாகமூட்டும் பலன்கள் பெறப்பட்டுள்ளன. சிறைப்படுத்திய நிலையில் பெருகாத சீனக் கயல்மீனும் இந்தியக்கயல் மீனும் வாவிகளிலும் பருவகாலக் குளங்களிலும் புகுத்தப்பட்ட பல்வகை மீன் வளர்ப்பு முறைக்கான இலக்கு இனமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. எனினும், விதேச கயல் மீனினத்தைச் சேகரித்து வைத்தல், தெரிவு செய்யப்பட்ட சில பாரிய நித்திய நீர்த்தேக்கங்களில் செய்யப்படுகிறது. அங்கு மீட்சி எதிர்பார்த்ததற்கு மேலிருந்துள்ளது. நீர்த் தேக்கங்களில் கயல் மீனினத்தை, குறிப்பாக இந்தியக் கயல் மீனை வளர்க்கும் வாய்ப்புகள் அதிகமுண்டு.

இலங்கையிலுள்ள நீர்த் தேக்கங்களின் வளங்கள் எவ்வளவோ அதிகமாயிருப்பதால், தீவிர வளர்ப்புத்திட்டமொன்றுக்குத் தேவைப்படக்கூடிய சிறு மீன்களின் தொகை பிரமாண்டமானதாகவிருக்கும். அரசாங்கக் கடற்றொழில் நிலையத்திலிருந்து இந்த நீர் நிலைகளுக்கான சிறு மீன் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு வடிவமைப்பதென்பது நடைமுறையில் சாத்தியமற்ற, பொருத்தமற்ற காரியம். எனவே, சிறு மீன் உற்பத்தியின் பல்வேறு கட்டங்களில் மீனவர்கள் பங்குபற்றும்படியாக ஒரு மாற்றுத்திட்டம் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுவருகிறது. முன்னோடியளவிலான முயற்சிகள் பெருவெற்றிபெற்றுள்ளன. இவ்வாண்டிலிருந்து மீன் வளர்ப்பு முறையியல் மேலும் பல நீர்த் தேக்கங்களுக்கு விஸ்தரிக்கப்படும். இத்திட்டத்தில் மீனவர்களே நீர்த் தேக்கங்களில் பதிக்கப்பட்ட வலைக் கூண்டுகளில் சிறு மீன்களை வளர்க்கிறார்கள். இந்த நீர்த் தேக்கங்கள் இனப்பெருக்கத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவையாகும்.

மான்ய விலையில் வள்ளங்களும் மீன்பிடி உபகரணங்களும் வழங்கப்படு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதால், அதிகமான மக்கள் இத்துறைக்கு ஈர்க்கப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது சகல பாரிய நீர்த் தேக்கங்களிலும் மீன் பிடித்தல் வர்த்தக அளவில் நடைபெறுகிறது.

மிக அனுகூலமான உற்பத்திக்காக நீர்த் தேக்கங்களை விஞ்ஞான முறையில் பயன்படுத்துவதற்குப் படிப்படியாக நீர்த்தேக்க முகாமைத்துவ நடவடிக்கைகள் அமுலுக்குக் கொண்டுவரப்படுகின்றன.

நீர்த்தேக்கங்களின், முகாமைத்துவம், பரீட்சார்த்தங்களை அடிப்படையாகக் கொண்ட நீர்வாழ் மீன் வளர்ப்பியல் நியதிகள், தகுந்த மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றின் குறிக்கோள்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் கல்வியும் பயிற்சியும் ஒன்றிணைந்த திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. சகல முகாமைத்துவ உபாயங்களும் சேமநல நடவடிக்கைகளும் எளிதில் நடைபெறுவதற்காக மீனவர் விஸ்தரிப்புச் சங்கங்களின் கீழ் மீனவர்களெல்லோரும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளனர்.

நீர்ச் சூழல் அமைப்பில் புதிய விலங்கினங்களைப் புகுத்தும்போது குறிப்பாக அவற்றின் வாழிடத்தைக் கவனமாக அவதானிக்க வேண்டும். ஏனென்றால் அது முழுக் குளச் சூழல் அமைப்புக்கும் நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ முடியலாம். சில சமயங்களில் விதேச உயிரினங்களால் இப்போதிருந்துவரும் சுதேச விலங்கினங்களும் தாவர இனங்களும் பாதிக்கப்படக்கூடும்.

புதிய மீன்வளர்ப்பு முறைகள் அறிமுகஞ் செய்யப்பட்டதனாலும் கட்லா மிரிகல், கயல் மீன், ரோகு போன்ற புதிய மீனினங்கள் புகுத்தப்பட்டதனாலும் உயர்வலயத்திலுள்ள பருவகால கிராமக் குளங்களின் வருடாந்த உற்பத்தித் தொகை அதிகரித்துள்ளது. இந்தப் புதிய அறிமுகங்கள் 1970 களின் பிற்பகுதியில் நடைபெற்றன. இந்த விதேச மீனினங்கள் உலர் வலயத்திலுள்ள பருவகால குளங்களிலிருக்கும் உணவு திரையிலும் சூழலமைப்புகளிலும் வெறுமையாகக் கிடந்த மூலை முடுக்குகளை நிரப்பிவிட்டன. மற்றும் மீனினங்களிலிருந்து வேறுபடும் உணவுப் பழக்கங்களைக் கொண்ட கலப்பினங்களைப் புகுத்தியதனால், குளங்களில் வாழும் மீனினங்களுக்கு ஒரு கனத்த அடர்த்தி ஏற்பட்டு, வருடாந்த அறுவடைகள் அதிகரித்துள்ளன. இம் முயற்சியின் நன்மைகள் இக் குறிப்பிட்ட நிலப் பரப்புகளில் வசிக்கும் மக்களின் பொருளாதாரத்திலும் பிரதிபலித்துள்ளன.

கே. எஸ். பீ. தென்னக்கோன்

(9 - ம் பக்கத் தொடர்ச்சி)

வும் உதவியது. இதன்பயனாக, போஷாக்குத் தரங்கள் உயர்ந்திருக்கக் கூடும். துங்கமாகொடையில் மீன் நுகர்வு மட்டம் (40.46 இருத்தல்) தேசிய மட்டமான 33.2 இருத்தலை விட சற்று உயர்ந்ததாகும். மீன் வாயிலாக அதிக அளவில் புரதத்தை உட்கொள்வதால் மக்களின் போஷாக்கு நிலை உயரக் கூடும். இது நீண்டகாலத்தில் ஆரோக்கிய, வைத்திய பராமரிப்பின் மீது பணச் செலவைக் குறைக்கலாம்.

பருவகால குளமீன் வளர்ப்புத் தொழில் ஒரு புறமிருக்க, பல வீட்டு விலங்கு வளர்ப்புத் திட்டங்களும் பரீட்சார்த்த அடிப்படையில் 1983 ம் ஆண்டில் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளன.

**உள்நாட்டு மீன் பிடித்தொழிலில் அண்மையில் ஏற்பட்டுள்ள சில அபிவிருத்திகள்**

உள்ளூர் மீன்பிடித்தொழில் இலங்கையில் நெடுங்காலமாக இருந்து வந்துள்ள போதிலும், இவ்வகையான மீன் பிடித் தொழில் உற்பத்தியை அதிக அளவில் அதிகரிக்கவில்லை; அத்துடன் வர்த்தக முறையிலும் நடத்தப்படவில்லை. சில விதேச கலப்பு மீன் வர்க்கங்களை அறிமுகஞ் செய்வதன் மூலம் உணவுக்கான மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் நீர்ப்பாசனக் குளங்களின் உபயோகத்தை ஆகக்கூடிய அளவு அதிகரிக்க 1949 - 50 ம் ஆண்டுகளில் முயற்சிகள் செய்யப்பட்டன. துரிதமாக வளர்ந்து பெருகக் கூடியனவும், வர்த்தக முக்கியத்துவம் உடையனவுமான சுதேச மீன் இனங்கள் இருக்கவில்லை. எனவே, இலங்கையின் நீர் நிலைகளில் விதேச மீன் வர்க்கங்களைப் புகுத்த வேண்டியதாயிற்று. ஆதலின், 1950 ம் ஆண்டுக்குப்பின், பிரதானமாக, நாட்டின் உட்பகுதிகளிலுள்ள நீர் நிலைகளில் விதேச கலப்பு மீன் வர்க்கங்கள் புகுத்தப்பட்டு, உள்ளமைப்பு வசதிகள் விரிவாக்கப்பட்டதுடன், இலங்கை உள்நாட்டு மீன் பிடித் தொழிலில் ஒரு புதிய சகாப்தத்துக்குள் பிரவேசித்தது. ''திலாப்பியா மொஸாம்பியன்'' என்னும் விதேச மீன் வர்க்கத்தின் வளர்ச்சி குளங்களிலும் நீர்த் தேக்கங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டு, அறிமுகப்படுத்தப்படும் வரை, நாட்டின் உட்பகுதிகளில் உண்ணத்தக்க நன்னீர் மீனின் உற்பத்தி மிகக் குறைவாகவே இருந்தது. மக்கள் பரம்பரை முறைகளின்படியே மீன் பிடித்து வந்தார்கள். ஆனால், இந்தக் கலப்பு மீனினங்கள் புகுத்தப்பட்டதுடன், உலர் வலயத்தில் உள்ள குளங்களின் நீர்ச் சூழல் முறையின் உயிரின சஞ்சாரமற்ற மூலை முடுக்குகளிலெல்லாம் மீன்கள் துரிதமாக நிறைந்து விட்டன. 1979 ம் ஆண்டின் முற்பகுதியில் 17,150 தொன் உள்நாட்டு மீன்கள் கரைக்குக் கொண்டுவரப்பட்டதும், அதுவரை காணாத புதுமையான வெற்றியொன்று பதிவு செய்யப்பட்டது. 1980 ம் ஆண்டளவில், இதைவிட பெரிய வெற்றி சாதிக்கப்பட்டதுடன், இத்தொகை இரட்டித்தது.

இந்த 25 வருட காலத்தில் மீன் உற்பத்தியில் தெளிவான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. ஒப்பியல் ரீதியாக அண்மைக் காலத்தில் தோன்றிய குளச் சூழல் முறையினாலும் இங்குள்ள சுற்றுடல் நிலைமைகளினாலும், விதேச மீன் வர்க்கங்கள் குளங்களிலும் நீர்த் தேக்கங்களிலும் படிப்படியாக நன்கு ஸ்தாபிதமாகி விட்டனவென்பதை இது பிரதிபலிக்கின்றது. திலாப்பியாவின் பரம்பல் துரிதமாக நிறைவேற்றப்பட்ட முதல் ஆண்டுகளில் உலர் வலயத்திலுள்ள ஒவ்வொரு குளத்திலும் இம்மீன்கள் பெருமளவில் பெருகிவிட்டனவென்று கூறப்படுகிறது. ஆனால், இலங்கையின் உட்பகுதி மீன்கள் பற்றி நடத்தப்பட்ட பரம்பல் ஆய்வுகளிலிருந்து, அமைதியான அருவிகளில் திலாப்பியா விருத்தியடையவில்லையென்று தெரியவந்தது. திலாப்பியா புகுத்தப்படுவதற்கு முன்பு பராக்கிரம சமுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரத்தில் ஆண்டொன்றுக்குச் சராசரியாக 2.7 தொன் மீன் பிடிக்கப்பட்டதாகக் கடற்றொழில் அமைச்சு மூலங்களிலிருந்து அறியப்படுகிறது. இப் புதிய மீனினம் புகுத்தப்பட்டதையடுத்து, சராசரியாகப் பிடிக்கப்பட்ட மீன்களின தொகை 1966 ம் ஆண்டில், ஆண்டொன்றுக்கு 500 தொன்கள் வீதம் அதிகரித்தது. தற்போது ஆண்டுக்குச் சராசரியாக 900 தொன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. மேலும், பிடிக்கப்படும் மீன்கள் பற்றிய புள்ளி விவரங்களிலிருந்து, உலர் வலயத்திலுள்ள நித்திய குளங்களில் பிடிக்கப்படும் மீன்களில் 70 சதவிகிதம் பொதுவாக திலாப்பியா இனமாகவே உள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குளங்களுக்குள் மீனினங்களின் தொகை கன [illegible] அளவில் அதிகரித்து [illegible]தால், திலாப்பியாவின் [illegible]மாணம் வளராமல் தடைப்பட்டுவிட்டது. உணவு தேடும் சூழலில் மீனினங்களுக்கிடையே போட்டி தீவிரமடைந்துள்ளது.

இலங்கையின் உட்பகுதிகளிலுள்ள நீர் நிலைகளில் கடந்த தசாப்தத்தில் மற்றும் பல மீன் வளர்ப்பு முறைகள் கைக்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், அவை இன்னும் ஒரு பரீட்சார்த்த அடிப்படையிலேயே பரீட்சிக்கப்பட்டுவருகின்றன; பொது மக்களுக்கு இன்னும் அறிமுகஞ் செய்யப்படவில்லை. மீன் வளர்ப்பு ஒப்பியல் ரீதியாக இலங்கைக்குப் புதியதாகும். ஆனால், பிலிப்பைன்ஸ், இந்தோனீஷியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகளில் செறிவான மீன் வளர்ப்பு முறைகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. அந்நாடுகளில் இவ்வகையான மீன் வளர்ப்பு முறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் அவர்களுடைய புரதத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் குறிப்பிடத்தக்கவாறு உதவியுள்ளது. உதாரணமாக, குவைத் நாட்டில் 1982 ம் ஆண்டில் ஆராய்ச்சித் திட்டமொன்று வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. அங்கு தேச சுவாத்தியத்துக்கு இணங்கப் பண்ணப்பட்ட திலாப்பியா மீன் உவர் நீர் வாவிகளில் வளர்க்கப்பட்டது. இத்திட்டம் அந்நாட்டின் மீன்பிடித் தொழிலில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குவைத் நாட்டில் வளர்க்கப்பட்ட இந்த மீனின் வெற்றியில் உவர்ப்பு நீங்கிய புத்தம் புதிய சுவையான மீன் கிடைப்பது முக்கிய அம்சமாகும். தற்போது குவைத் சந்தையில் இந்த மீனுக்குக் கிராக்கி வளர்ந்து வருகிறது.

இலங்கையில் வாவி மீன் வளர்ப்பு முறை 1970 களின் பிற்பகுதியில் அறிமுகஞ் செய்யப்பட்டது. இவ்வகை வளர்ப்பை விருத்திசெய்ய அரசாங்கம் பல்வேறு ஊக்குவிப்புச் சலுகைகளை வழங்கியது. வாவியொன்றைக் கட்டும் செலவில் 50 சதவிகிதத்துக்கு மான்ய உதவி வழங்குவதாக அரசாங்கம் அறிவித்தது; அத்துடன் விரல் பரிமாணமுள்ள சிறு மீன்களையும் தொழில் நுட்ப ஆலோசனையும் தொடர் — சேவைகளையும் வழங்கியது. எனினும், வாவி மீன் வளர்க்கும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மான்யங்கள் அதிகரித்துவந்த போக்கையும், வாவி மீன் வளர்க்கப்பட்ட நிலப் பரப்புகளையும் கவனிக்குமிடத்து, உண்மையான மீன் உற்பத்தி உள்ளமைப்பு வசதிகளின் விரிவாக்கத்துக்கு ஏற்ப அமைந்திருப்பதாகத் தோன்றவில்லை.

நாட்டில் 121 வாவி மீன் வளர்ப்புப் பகுதிகளிருந்தன. அவற்றிற்கு மான்ய உதவியாக 2,42,188/- ரூபா வழங்கப்பட்டது. இந்த வாவிகள் உள்ளடக்கிய நிலப்பரப்பு 1981 ம் ஆண்டில் 140 ஏக்கராயிருந்தது. ரொக்க மான்யமாக வழங்கப்பட்ட உதவி 1982 ம் ஆண்டளவில் 49 இலட்சம் ரூபாவாக அதிகரித்து விட்டது. ஏறக்குறைய 1500 ஏக்கர் பரப்பைக்கொண்ட வாவிகளுக்கே இவ்வுதவி வழங்கப்பட்டது. 1986 ம் ஆண்டின் முதல் ஆறுமாதங்களில் வழங்கப்பட்ட மான்யங்கள் மேலும் 51 இலட்சம் ரூபாவுக்கு அதிகரித்தன. இவ்வுதவியில் 1525 ஏக்கர் பரப்பைக் கொண்ட வாவிகள் அடங்கும். இந்த வாவி மீன் வளர்ப்புப் பகுதிகளிலிருந்து பெறப்பட்ட மொத்த உற்பத்தி இன்னும் தேசிய மீன் அறுவடைக்குக் குறிப்பிடத்தக்கவாறு பங்களிப்புச் செய்யவில்லை. தற்போது நாட்டில் செயற்படும் வாவிமீன் வளர்ப்புப் பகுதிகளின் தொகையைக் குறிப்பிடத்தக்கதாகக் கருதமுடியாது. ஆனால், சீனா, இந்தியா போன்ற நாடுகளில் வாவி மீன் வளர்ப்பு நெடுங்காலமாக நடைபெற்று வருகிறது; பரம்பரை வளர்ப்பு முறைகளுக்குப் பதிலாகப் புதிய விருத்தி செய்யப்பட்ட முறைகள் புகுத்தப்பட்டு வருகின்றன; செறிவான பல் கலப்பு மீன் வளர்ப்பு முறை வாயிலாக அதிக இலாபகரமான அறுவடைகளும் கிடைத்து வருகின்றன. இலங்கையில், வெளிக்கள ஆய்விலிருந்து பெறப்பட்ட தகவல்களின் படி, மீன் வாவிகளில் 80 சதவிகிதம் பொருளியல் ரீதியாக நடக்கும் சக்தியற்றவையாகும். மான்ய உதவிபெற்ற விவசாயிகளில் பெரும்பாலோர் தற்போது

அட்டவணை 5

உண்ணாட்டு மீன் உற்பத்தி (தொன்)

| வருடம் | 1960 | 1970 | 1974 | 1978 | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 3350 | 8147 | 7539 | 13097 | 19947 | 29124 | 32798 | 35500 | 30097 |

ஆதாரம்: கடற்றொழில் அமைச்சு

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன் வாவிகளைப் பராமரித்து வரவில்லை. பணம் செலவிடப் பட்டபோதிலும், பிரதானமாகக் கீழ்க்கண்ட காரணங்களினால் பல வாவிகள் மீன் உற்பத்திப் பகுதிகளாகச் செயற்படுத்தப் படவில்லை

(அ) செயற்பாட்டுத் துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் போதிய அளவில் கிடைக்காமை.

(ஆ) வாவிகள் கிரமமாக முறையாகப் பராமரிக்கப்படுவதற்கான சேவைகள் போதிய அளவில் நடைபெறாமை.

(இ) பொருளியல் அடிப்படையில் இருந்து வந்த குறைகள்.

வாவி மீன் வளர்ப்பை விருத்தி செய்வதில், அண்மைக் காலத்தில் பதவியேற்ற அரசாங்கங்கள் நாட்டின் உள்பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு உபயோகிக்கப் படும் பரம்பரை மீன்பிடி உபகரணங்களுக்குப் பதிலாகப் புதிய, தொழில் நுட்பத் திறனுள்ள சில மீன்பிடி உபகரணங்களையும் முறைகளையும் அறிமுகஞ் செய்துள்ளன. ஆரம்பத்தில், திலாப்பியா மீனினம் நிறைந்துள்ள நித்திய குளங்களில் இவை புகுத்தப்பட்டன.

அரசாங்க மான்யத் திட்டத்தின் கீழ் நைலோன் வலைகளும் நார்க்கண்ணாடியாலான வலுவூட்டிய பிளாஸ்திக் வள்ளங்களும் வழங்கப்பட்டன. பிடிக்கப்படும் மீனின் உற்பத்தியை அதிகரிக்கும் முயற்சியில் முதலாவதாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளே இவை.

நாட்டின் உட்பகுதிகளில் அதிகமான மீன் வளர்ப்பு நிலையங்களைத் தோற்றுவிக்கவும் குளங்களில் மீன் உற்பத்தியை அதிகரிக்கவும் மேலும் ஓர் ஊக்கச் சலுகையாக 1980ம் ஆண்டில் அரசாங்க மான்யத் திட்ட

அட்டவணை 6

| வாவி மீன் வளர்ப்பு மானியங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|
| வருடம் | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 ஜூன் வரை |
| மானியம் வழங்கப்பட்டோர் | 121 | 460 | | 2142 | 209 |
| வழங்கப்பட்ட தொகை (ரூ. பத்து லட்சம்) | .24 | 1.13 | 3.4 | 4.9 | .51 |
| நீர்ப்பரப்பு (ஏக்கர்) | 140.15 | 99.25 | 472 | 1500 | 1525 |

ஆதாரம்; கடற்றொழில் அமைச்சு

மொன்று அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இத் திட்டப்படி, வள்ளத்தினதும் மீன்பிடி உபகரணங்களினதும் மொத்தச் செலவில் 35 சதவிகிதம் வழங்கப்பட்டது. எனினும், இந்த நடவடிக்கைகள் நித்திய குளங்களில் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் விதத்தில் பெருந் தாக்கத்தை உண்டாக்கவில்லை. ஆதலால், இந்த மான்யம் 1981 ம் ஆண்டில் 90 சதவிகிதத்துக்கு அதிகரிக்கப் பட்டது.

மான்யம் உயர்த்தப்பட்டதன் பயனாக, கடந்த சில வருடங்களில் மீன் உற்பத்தி அதிகரித்துள்ளது. மான்யத் தொகையும் மீன் வளர்ப்புப் பகுதிகளின் தொகையும் அதிகரிக்கப்பட்டதால், நாட்டின் உட்பகுதிகளில் 1980ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1981 ம் ஆண்டில் மீன் உற்பத்தி 45 சதவிகிதம் அதிகரித்தது. இந்தப்போக்கு 1984 ம் ஆண்டுவரை நீடித்தது. 1984 ம் ஆண்டில் பிடிக்கப்பட்ட மீன்களின் நிறை 35,500 தொன்களை அடைந்தது.

சமீப வருடங்களில் நடைபெற்றுள்ள மீன் உற்பத்தி பற்றிய புள்ளி விவரங்களிலிருந்து இலங்கையின் உட்பகுதிகளில் மீன் வளர்ப்பு நிலையங்கள் பௌதிக முறையில் தெரிவு செய்யப்பட்டு, ஸ்தாபிக்கப்பட்டு, பெருகியுள்ள வேகம் தெளிவாகிறது. ஆனால், இப்புதிய கைத்தொழில் சம்பந்தமாகப் பொது உற்சாகம் எதிர்பார்த்தவாறும், மீன் உற்பத்தியிலும் உற்பத்தி மட்டங்களிலும் ஏற்பட்டுள்ள அதிகரிப்புகளுக்கு மேற்பப் பொங்கியெழுந்து விருத்தியடையவில்லை. இதற்குப் பிரதான காரணம் மீன் வளர்ப்பு நிலையங்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் கலாசாரமும் சமயமும் உணவுப் பழக்கங்களுமாகும். இப் பகுதிகளிலுள்ள மக்கள் கடல் மீனையே விரும்புகிறார்கள். நாட்டின் உட்பகுதிகளில் பிடிக்கப்படும் மீனின் நூதன உருசி இவர்களுக்குப் பிடிக்கவில்லை. உருசியில் வித்தியாசம் இருந்தபோதிலும், சில பாகமுறைகளில் உட்பகுதி மீன் சுவையாக இருக்குமெனப் பத்தாண்டுகளுக்கு முன்பு நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால், மக்கள் நூதனச் சுவையுள்ள இந்த விதேச மீனைத் தங்கள் உணவில் சேர்த்துக் கொள்வதில் முன்னேற்றம் ஆமை வேகத்திலேயே இருக்கிறது.

நூதன மீன் வர்க்கங்களை உணவில் சேர்த்துக்கொள்ள மக்கள் காட்டும் இந்த வெறுப்பு, மீனுக்கான கோரிக்கையை நேரடியாகப் பாதிக்கிறது; அதன் விளைவாக விலைகள் குறைகின்றன; உட்பகுதி மீன் பிடித்தலை போதிய வருவாய் தரக்கூடிய ஒரு பொருளாதார முயற்சியாக மக்களிடையே விருத்தி செய்வதற்கு ஊக்கம் குறைகிறது. எனவே, நாட்டின் மீன் உற்பத்தியைத் தற்போதுள்ள மட்டங்

(15 - ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைப்பில் மீன் வளர்த்தல்

தென் ஆசியாவில் பெரும்பாலும் நிலத்தை அடிப்படையாகக் கொண்டே மீன் வளர்க்கப்படுகிறது. அடைப்புக்குள் மீன் வளர்த்தல் எத்துணை முக்கியமானது என்பது பிலிப்பைன்ஸ், சீனா, தாய்லாந்து போன்ற ஆசிய நாடுகளில் அண்மைக் காலத்தில் உணரப்பட்டுள்ளது. அடைப்புக்குள் அந்நாட்டவர் மீன் வளர்க்கத் தொடங்கியகாலத்தில் நன்னீர் மீன் இனங்கள் மட்டுமே வளர்க்கப்பட்டன. எவ்வாறாயினும், சென்ற தசாப்தத்தில் பொருத்தமான கடல், நன்னீர் மீனினங்களை அடைப்புக்குள் வளர்ப்பதில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இலங்கையிலும் கடற்றொழில் அமைச்சு 1982ல் பரீட்சார்த்தமாக அடைப்புக்குள் மீன் வளர்க்கும் முயற்சிகளை மேற்கொண்டது. கனேடிய நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட இம் முயற்சியின் நோக்கம் தொழில்நுட்ப, பொருளாதார ரீதிகளில் இதன் சாத்தியக் கூறை அறிவதும், அடைப்புக்குள் மீன் வளர்ப்பதற்கான தொழிநுட்ப முறைகளை உருவாக்குவதும் அதிலுள்ள இடர்ப்பாடுகளை அறிவதுமாகும்.

“அடைப்பு” என்பது ஒரு நீர் நிலையத்தின் தளத்தை அடிப்பாகமாகக் கொண்ட, பொருத்தப்பட்ட ஒரு அடைப்பாகும். ஒருமிதக்கும் கூட்டைப் போலவன்றி, “அடைப்பு” என்பது நிலையான ஓர் அமைப்பாகும். ஒரு நீர் நிலையத்தில் கம்பங்கள் நடப்பட்டு, பக்கங்கள் வலைகளால் அடைக்கப்படுகின்றன. எவ்வின மீன் வளர்க்கப்படும் என்பது நீரின் தன்மையைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது. பொதுவாக இவ்வடைப்புகள், வலைகளையும் மூங்கில் அல்லது கழிகளைக் கொண்டும் அமைக்கப்படுகின்றன. வலையின் அளவு, அடைப்புக்குள் வளர்க்கப்படவுள்ள மீனின் இனத்தைப் பொறுத்துத் தீர்மானிக்கப்படுகிறது. மீன்களை இடுவதற்குமுன், அடைப்புக்குளிருந்து இரை கல்லும் பிராணிகள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும். இது, புதிதாக அறிமுகப்படுத்தப்படும் மீன் வகை பிழைப்பதற்குரிய வாய்ப்பை உறுதிப்படுத்தும். அடைப்புக்குள் புதிதாக அறிமுகப்படுத்திய மீனினம் நிறைந்திருப்பதோடு வழக்கமாக நீரோட்டத்துக்கு வலை இடமளிப்பதால் மீன்களுக்குத் தீனிபோடுவது தடைப்படாது. மீன்கள் பிடிக்கப்படும்வரை அவை அடைப்புக்குள் நன்கு வளரும். அடைப்புக்குள் மீன் வளர்த்தல் வெற்றிகரமாக அமைவதற்கு அடைப்பை அமைப்பதற்குப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்வது அவசியம். திட்டம் பொருத்தமானதா என்பதைத் தீர்மானிப்பதற்கு அது அமைக்கப்படும் இடத்தின் சூழல்பற்றிய விரிவான அறிவு தேவை. அத்துடன் பல பௌதிக, நீருயிரியல் காரணிகளும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

அடைப்புகளை நீர்நிலையத்தின் குறித்த அளவு ஆழமான பகுதியில் அமைக்கலாம். அடைப்பு விரிவானதாக இல்லாதவிடத்து பெருமளவு முதலீடு செய்ய வேண்டியதில்லை. அடைப்பானது, நீர் நிலைப் படுக்கையில் அமைக்கப்படும் ஒரு வேலியாகையால் ஆழ்ந்த தொழினுட்ப அறிவும் தேவைப்படுவதில்லை. எனவே, மூன்றாம் உலகத்தின் வறிய மக்களும் இதில் ஈடுபடக் கூடியதாக இருப்பது இதன் அனுகூலங்களில் ஒன்றாகும். கரையோரங்களைச் சார்ந்த, கடல் கொந்தளிப்புக்காலங்களில் ஆழ் கடலுக்குச் செல்லமுடியாத சிறு மீனவர்கள், பரவைக் கடல்களில் அடைப்புகளை அமைத்து தொழிலையும் ஊதியத்தையும் தேடிக் கொள்ளலாம்.

அடைப்புக்கள் தெரிவு செய்யப்பட்ட மீனினத்தை வளர்ப்பதில் மிக முக்கியமான அம்சம், அது பொருளாதார ரீதியாக உருப்படியான ஒரு நிலையை அடையும்வரை அதனைப் பேணிப் பாதுகாப்பதாகும்.

எவ்வாறாயினும், இலங்கையில் மனிதனால் அமைக்கப்பட்ட சில நீர் நிலைகள் அவற்றின் பௌதிக இயல்பு காரணமாக இவ்வகை மீன் வளர்ப்புக்குப் பொருத்தமற்றவை எனக் காணப்பட்டுள்ளன. சூழல், காலத்திற்குக் காலம் நீரின் ஆழம் மாறுபடுதல், படுக்கையில் போதியளவு ஆழமற்ற அடையல் இன்மை என்பன இப் பௌதிக காரணிகளாகும். ஆனால், இலங்கைத் தீவைச் சூழவுள்ள சற்று உவர்த்தன்மையுள்ள நீரைக் கொண்ட 3 இலட்சம் ஏக்கர் கடலில் புத்தளம், மட்டக்களப்பு, நீர்கொழும்பு, ரத்கமை, யாழ்ப்பாணம் போன்ற களப்புகள் உள்ளன. இவற்றில் சில பகுதிகளில் அடைப்பு மீன் வளர்ப்புக்குப் பொருத்தமான இயற்கைச் சூழல் காணப்படுகிறது. பரவைக் கடலில் பெரும்பகுதி வடக்கிலும் கிழக்கிலும் அமைந்துள்ளன. எனினும், அடைப்பு மீன் வளர்ப்புக்குப் பொருத்தமான பரப்பின் அளவு இன்னும் கணிக்கப்படவில்லை. சேற்றுத்தன்மையுள்ள வளமான ஆழமற்ற நீர்ப்பரப்பில் அடைப்புகள் வழக்கமாக அமைக்கப்படுவதால், பரவைக் கடல்கள் இதற்கு மிகப் பொருத்தமானவையாகும்.

வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்வதற்குப் பொருத்தமான மீன் இனங்கள் பின்வரும் அடிப்படைகளில் தெரிவு செய்யப்படுகின்றன:

(அ) நீர்நிலையத்தின் நிலைமைகளுக்கு ஏற்ப அடைப்புகளில் வளர்வதற்கு ஏற்ற இனம்;

(ஆ) நீர் நிலையத்தில் இடம்பெறும் உற்பத்தி முயற்சிகளை அனுகூலமாகப் பயன்படுத்திக் கொள்ளத்தக்க திறமை. மீன் குஞ்சுகள் போதியளவு இடைக்கத்தக்க நிலை.

புத்தளம், பொல்கொடை ஆகிய இடங்களில் பரீட்சார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள அடைப்புகளில் ஒரு முறைக்கு ஹெக்டயர் ஒன்றுக்கு 850 கி. கிராமும், ஆண்டொன்றுக்கு 1700 கி. கிராம் இருமுறை மீன் அறுவடை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சின் மீன் வளர்புத் திட்டத்தில் பின்வரும் நோக்கங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

(அ) நடுத்தர பொருளாதார சாத்தியக் கூற்றுடன் அதிக மீன் புரதம் கிடைக்கச் செய்தல்.

(ஆ) கிராமப்புற மீனவர்களுக்கும் மீன் பண்ணைகளுக்கும் குறைந்த செலவிலான தொழில்நுட்ப அறிவூட்டல்.

பிலிப்பைன்ஸின் அனுபவத்தைச் சாதகமாகக் கொண்டு பார்க்கையில், இங்கு அடைப்பு மீன் வளர்ப்பதில் பின்வரும் நடைமுறைப் பிரச்சினைகள் தோன்றலாம்.

(அ) போட்டியிடும் மீன் பண்ணையாளர்களுக்கு பெருமளவு ஒரே ஆழமான நீர் நிலையங்கள் தேவைப்படும்; இந்நிலைமை, அப்பகுதிகளில் பரம்பரையாக நடைபெற்று வரும் பிற மீன்பிடி நடவடிக்கைகளை மட்டுப்படுத்தும். நிரந்தர அடிப்படையில் நீர் நிலையங்களைப் பெறுவதும் முகாமைப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

(ஆ) ஒரு கட்டத்தில் செறிவாக அமைக்கப்படும் அடைப்புகள், நீரோட்டத்துக்குத் தடையாக அமைந்து, அசுத்தப்பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

(இ) அடைப்புகள் அமைப்பதன் காரணமாக அப்பகுதிகளில் நீர்ப் போக்குவரத்தும் தடைப்படலாம்.

(ஈ) இயற்கைக் காட்சிகளும் மாற்றமடையலாம், எனவே; இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய சட்டவாக்கங்கள் அவசியமாகும்.

**பி. பி. ஜி. எஸ். என். சிரிவர்த்தன**

(ஆராய்ச்சி உத்தியோகத்தர், தேசிய மீன்வள நிறுவனம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

களில் தொடர்ந்து வைத்திருப்பதற்குக் கூட, மான்ய உதவியளிப்பது அத்தியாவசியமான ஓர் உள்ளீடாக இருக்கிறது. உட்பகுதி மீன்களை மக்கள் விரும்பாதிருக்கும் இப்பிரச்சினையை மிகப் பயனுள்ள முறையில் பரிகரிப்பதென்றால், சுவை கொட்டும் முறையிலும் கவர்ச்சியான உருவிலும் இம் மீனைப் பாகம் பண்ணும் வழிகளை அறிமுகஞ் செய்வதற்கும், பெரும்பாலான மக்கள் வாங்கியுண்ணும் மலிவான விலையில் இது கிடைக்கிறதென்று எடுத்துக் காட்டுவதற்கும் குறுங்கால பிரசாரத் திட்டமொன்று உபயோகிக்கப்படவேண்டும். தற்போது, சில பிரதேசங்களில், குறிப்பாக உள்ளூர் மீன்களைச் சமையல் செய்யத் தங்கள் சொந்த முறைகளை உருவாக்கியுள்ள மக்களிடையே இது விரும்பி உபயோகிக்கப்படுகிறது.

குளங்களில் திலாப்பியா மீனினம் பெருகியதுடன் உலர் வலயத்திலுள்ள பலர் இம் மீனை வளர்க்கும் நிலையங்களைச் செயற்படுத்த முயன்றனர். ஆனால், கீழ்க்கண்ட காரணங்களுக்காக கடற்றொழில் அமைச்சு கட்டுப்பாடுகளை விதித்தது. அக்கட்டுப்பாடுகள் இன்னும் அமுலில் உள்ளன.

1. அளவுமீறிய மீன்பிடித்தலால் மீன் வளம் காலியாகிவிடும்.

2. செயற்பாட்டு நிலையங்களின் தொகை அதிகரித்தால், இப்போதுள்ள செயற்பாட்டு நிலையங்களின் தலா வருமானம் குறைந்துவிடும்.

3. 'டைனமைட்' வைத்தல், இழுவலைகளைக் கொண்ட எந்திர வள்ளங்களை உபயோகித்தல் போன்ற மீன் பிடித்தல் முறைகளால் அதிகரிக்கும் போட்டியினால் தீங்கு விளையும்.

4. மிதமிஞ்சி மீன் பிடிப்பதால், நாட்டின் உட்பகுதி மீன் வளர்ப்பு நிலையங்களின் முழுக் கட்டுக்கோப்பும் சூழல் அமைப்பும் நாசமாகிவிடலாம்.

ஆதலால், நாட்டின் உட்பிரதேச மீன்பிடித் தொழில் படிப்படியாக அபிவிருத்தியடைவதற்கே கடற்றொழில் அமைச்சு ஊக்கமளித்துள்ளது. எனினும், உள்ளூர் மீன்பிடித் தொழிலின் ஆரம்ப நோக்கம் கரையோரப் பகுதிகளுக்கும் நகரப் பகுதிகளுக்கும் மீன் வழங்குவதைவிட கிராமங்களிலுள்ள ஏழைமக்களுக்கு மலிவான மீனை (புரதம்) அதிக அளவில் வழங்குவதாகுமென்பதை நினைவிற்கொள்ள வேண்டும். இக் கொள்கைக்கு மாறாக, மின்னேரியாவிலுள்ள தொழிற்சாலை (இது இப்போது இயங்கவில்லை.) சுற்றுப்புறங்களிலிருந்து மிகக்குறைந்த விலைகளில் நீர்த்தேக்க மீனினங்களை, பெரும்பாலும் திலாப்பியா மீனை வாங்கி, அவற்றிலிருந்து தாங்கள் உற்பத்தி செய்யும் மீன் சீவலை நகரப் பகுதிகளில் மிக உயர்வான விலைகளில் விற்று வருகிறது. இது ஏழைக் கிராம வாசிகளுக்குப் போய்ச் சேரவேண்டிய மலிவான புரதத்தை வாங்கி, நன்னிலையிலுள்ள நகர மக்களுக்கு விநியோகிக்கும் செயலை ஒக்கும். நாட்டின் உட்பகுதிகளில் கிராமங்களிலுள்ள மீனவர்களிடமிருந்து சுமார் 5 ரூபா விலையில் வாங்கப்படும் திலாப்பியா மீன் நகரப் பகுதிகளில் மீன் சீவலாக 250 கிராம் 7 ரூபா 50 சதம் என்ற விலையில் விற்கப்படுகிறது.

ஆதலால், தேவையான மீன் வளர்ப்பு முறைகளும் நுகர்வு முறைகளும் கிராம மக்களிடையே ஸ்தாபிதமாகும்வரை கடற்றொழில் அமைச்சு இந்த மீன் பிடித்துறையைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும்.

எனினும், கடந்த சில ஆண்டுகளில் நாட்டில் விதேச உட்பிரதேச மீன்களைப் பிரபலப்படுத்த ஒருசில திட்டமான முயற்சிகள் செய்யப்பட்டதன் விளைவாக உட்பிரதேச மீன் விலைகளில் பெரும் தாக்கம் ஏற்பட்டுள்ளது. 1978ம் ஆண்டில் திலாப்பியா மீன் கிலோ ஒன்றுக்கு 4 ரூபாவிலிருந்து 5 ரூபாவரை விலை குறிக்கப்பட்டது. மீனுக்கு இந்தக் குறைவான விலைகளே கிடைத்த காரணத்தினால். பருவமற்ற காலத்தில் நல்ல சந்தையைப் பெறுவதற்காக மக்கள் கருவாட்டை உற்பத்தி செய்தார்கள். ஆனால், இப்பொழுது அதே உலர் வலயப் பகுதிகளில் விலை குறைவாயிருக்கிறது. புதிய மீனுக்கு நல்ல விலைகள் கிடைத்து வருவதால் குள மீன்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட கருவாட்டைப் பெறுவது எளிதல்ல. 500 கிராம்

அட்டவணை 7

வழங்கப்பட்ட மானியங்களும் உபகரணங்களும்

| வருடம் | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 |
|---|---|---|---|---|---|---|
| வழங்கப்பட்ட உபகரணங்கள் | 7 | 197 | 1871 | 2077 | | |
| மானியங்கள் (ரு. பத்துலட்சம்) | 0.004 | 6.918 | 14.789 | 21.711 | | |

ஆதாரம்: கடற்றொழில் அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10/- ரூபாவிலிருந்து 15/- ரூபா வரையான விலைகளில் நிலாப்பியா சமீப வருடங்களில் நகர்ப்புற சந்தைகளை ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் படையெடுத்துள்ளது.

உள்ளூர் மீன்பிடிப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டதையடுத்தே இப்புதிய போக்குகள், பிரபலப்படுத்தும் உபாயங்களில் பெரும்பாலானவை தோன்றின.

இன்னொரு முக்கியமான விளைவையும் இங்கு குறிப்பிட வேண்டும். இத்துறைக்கு 1977 - 82 க்குரிய பெருந்திட்டத்தில் உயர் முதலிடமளிக்கப்பட்டுள்ளது. இதிலுள்ள அளவிடற்கரிய வளங்களே அதற்குக் காரணம். 1983 ம் ஆண்டளவில் உட்பிரதேசங்களில் 50,000 தொன் மீன் உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டது. ஆனால், பொதுவசதிக் குறைபாடுகளாலும் மற்றும் சமூக—பொருளாதார நிர்ப்பந்தங்களாலும் இந்த இலக்கை அடைவது சாத்தியப்படவில்லை. பெருந்திட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்பு உள்ளூர் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கென ஒதுக்கப்பட்ட மூலதனம் மிகக் குறைவாயிருந்தது. கடற்றொழில் துறையின் மொத்த முதலீட்டில் இது 10 சதவிகிதம் மாத்திரமே. இந்த நிதி முதலீடு கூட 1984 ம் ஆண்டில் இத்துறையின் அபிவிருத்திக்குப் பூரணமாகப் பயன்படுத்தப்படவில்லை. அரசாங்க நிறுவனங்களிலுள்ள "சிவப்பு நாடா" முறையே இதற்குப் பிரதான காரணம்.

மேலும், இத்துறையின் அபிவிருத்திக்கு உதவுவதற்காக, தேவையான சமூகப் பொதுமுதலீட்டு வசதிகளும் ஓரளவுக்குப் படிப்படியாகவே அமைக்கப்பட்டுள்ளன. ஜப்பான், கொரியா, சீனு, பிலிப்பைன்ஸ், இந்தோனீஷியா போன்ற ஆசிய நாடுகளின் அனுபவமே இந்த நிலைமைக்குப் பின்னுலிருந்த உந்துவிசை.

கடந்த மூன்று தசாப்தங்களில், இலங்கையில் உள்ளூர் மீன்பிடித்தலை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக இங்குள்ள நிலைமைகள், கிடைக்கக் கூடிய நிதிவசதிகள், பொதுச் சாத்தியக் கூறுகள் ஆகியவற்றின் பல்வேறு அம்சங்களைப் பற்றி உள்நாட்டு — வெளிநாட்டு விஞ்ஞானிகள் பல ஆராய்ச்சித் திட்டங்களையும் பரீட்சார்த்த திட்டங்களையும் தொடர்ச்சியாக நடத்தியுள்ளனர். இந்தப் பரீட்சார்த்தங்களும் ஆராய்ச்சிகளும் இலங்கையில் உள்ளூர் மீன்பிடித் தொழிலுக்கு நிலைமைகள் அனுகூலமாயிருப்பதாகவும், வருங்காலம் நம்பிக்கையூட்டுவதாயுள்ளதென்றும் எடுத்துக்காட்டியுள்ளன. ஆதலால். உள்ளூர் மீன்பிடித் தொழிலின் அபிவிருத்திக்காக அதிக சமூக பொது முதலீட்டு வசதிகளை ஏற்படுத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. வெளிநாட்டு, உள்நாட்டு உதவி வழிகள் வாயிலாக ரொக்கப் பணம், பொருள்கள் ஆகிய இரு வகை உதவியளிப்பதும் இதில் அடங்கும். தொழில் நுட்பத் தரங்களையும் வர்த்தக முறைகளையும் அபிவிருத்தி செய்வதற்காகவும் கிராமப் பகுதிகளில் மீன் வளர்ப்பு முயற்சிகளை ஊக்குவிப்பதற்காகவும் மீன்வளர்ப்பு — ஆராய்ச்சி மையங்களை நிறுவுவதற்கு இவ்வுதவி பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, கிராமப்பகுதிகளில் உள்ளூர் மீன் வளர்ப்பதற்கும், பாதுகாத்துக் கையிருப்பில் வைப்பதற்கும், விநியோகிப்பதற்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டன; நீர் வாழ் பிராணிகள் வளர்ப்பியலாளர்களும் உட்பிரதேச மீன் வளர்ப்பியல் போதனுசிரியர்களும் அதிகமாகக் கிராமப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டனர்.

மேலும், இரு நிலையங்களை (பிம்புருத்தாவையில் ஒன்று; கலாவேவையில் மற்றொன்று) நன்னீர் மீன் வளர்ப்புக்கும் விஸ்தரிப்புச் சேவைகளுக்கும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விரு நிலையங்களும் மகாவலி நீர் வழிகளிலும், குடியேற்றக்காரர்களிடையேயும் உள்ளூர் மீன்பிடித் தொழிலை விருத்தி செய்ய உதவுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனல், உள்ளூர் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக, தேவையான உள்ளமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வந்த போதிலும், மக்களின் கலாசார, சமயப் பின்னணியைக் கவனிப்பது முக்கியமாகும், இது இத்திட்டத்தின் மீது பெருந்தாக்கத்தை ஏற்படுத்தலாம். எனினும், இக்காரணிகள் இத்திட்டத்துக்கு ஒரு தடையாயிருக்கவில்லை. ஒரு வேளை மக்களின்

அட்டவணை 8

உண்ணுட்டு மீன்பிடியில் பொதுத்துறை முதலீடு

| வருடம் | 1972 | 1974 | 1976 | 1978 | 1980 | 1982 | 1984 | 1986 |
|---|---|---|---|---|---|---|---|---|
| ரூ. பத்துலட்சம் | .13 | .82 | 5.49 | 3.82 | 6.86 | 29.90 | 15.9 | |
| | | | | 2.00* | 6.8* | 16.0* | 44.5* | 103.5* |

* உத்தேசம்

ஆதாரம்; கடற்றொழில் அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை இதற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால், மீன் நுகர்வில் தன்னிறைவு நிலையை அடைவதற்காக, வீட்டு மீன்வளர்ப்புப் பண்ணைகளிலும் அல்லது வாவிகளும் விருத்தியுற்ற மீன் வளர்ப்பு முறைகளை மேற்கொள்வதவசியமாகும்.

**கிடைக்கும் வளங்கள்**

முழு அளவிலான அபிவிருத்தித் திட்டத்தில் உட்பிரதேச மீன்பிடித் தொழில் ஒரு குறிப்பிடத்தக்க பங்கெடுக்க முடியுமென்று உணரப்பட்டுள்ளது. இந்தக் குறிக்கோளைச் சாதிப்பதில் திரட்டத்தக்க வளங்களைக் கவனிக்குமிடத்து, இக்கருத்து வலுப்படுகிறது. உட்பிரதேச மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கேற்ற ஏராளமான நீர் நிலைகள் இங்கு உள்ளன. அவற்றைப் பின்வருமாறு உப பிரிவுகளாகப் பிரிக்கலாம்:

| | |
|---|---|
| (அ) நன்னீர் நிலைகள் | (1) பாரிய நீர்ப்பாசன நீர்த்தேக்கங்கள் |
| | (2) நடுத்தர நீர்ப்பாசன நீர்த்தேக்கங்கள் |
| | (3) சிறு நீர்ப்பாசன நீர்த்தேக்கங்கள் |
| | (4) வெள்ள ஏரிகளும், வில்லுகளும் |
| | (5) ஆறுகளும் அருவிகளும் |
| (ஆ) உவர்நீர் நிலைகள் | (1) பரவைக்கடல்களும், பொங்குமுகங்களும் |
| | (2) கண்டல் சதுப்புநிலங்களும் சிறுகுடாக்களும் |
| (இ) மற்றவை | (1) களிக்குழிகள் |
| | (2) முருகைக்கற்குழிகள் |

இவற்றில் பெரும்பாலானவை மனிதனால் ஆக்கப்பட்ட உருவ வியல்களாகும். இவை இலங்கையின் உலர் வலயத்தில் அதிகம் செறிந்திருக்கின்றன. சில பருவ காலத்திலேயே அமைகின்றன; இவற்றின் தொகை அதிகம். ஆனால், மொத்தப் பரப்பில் இவை கொள்ளும் இடங்கள் சிறியவை. பெரும் பரப்பில் ஆண்டு முழுவதும் நீரைப் பிடித்துவைத்திருக்கும் நீர்நிலைகளே உள்ளன. ஆனால் அவற்றின் தொகை சிறியது. வெள்ள ஏரிகள் (வில்லுகள்), ஆறுகள், முருகைக் கற்குழிகள், கண்டல் சதுப்பு நிலங்கள் ஆகியன உட்பிரதேச மீன் வளர்ப்புக்கு இன்னும் தீவிரமாகப் பயன்படுத்தப்படவில்லை.

தற்போது நாட்டின் உட்பிரதேசத்தில் நடைபெறும் மீன்பிடித் தொழிலில் மீன் பிடித்தல் எல்லா இடங்களிலும் நடந்து வருகிறது. எனினும், நன்னீர் மீன்பிடித் தொழிலுடன் ஒப்பிடுகையில், பொருளியல் ரீதியாக அதிக பயனுள்ள பகுதிகள் உவர் நீர்நிலைகளில் உள்ளன. ஏனென்றால், அவை விஸ்தாரமாகவும் செழிப்பாகவுமிருக்கின்றன. இவற்றில் காணப்படும் மீன் வர்க்கங்கள் சந்தையில் அதிக பொருளாதாரப் பெறுமதியுடையனவாகவும் இருக்கின்றனர்.

மேலும், கைவிடப்பட்ட சுமார் 12,000 நீர்ப்பாசன அமைப்புகள் புனரமைக்கப்பட்டால் அவை உள்ளார்ந்த வளங்களாகக் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படலாம்.

இவற்றின் பரப்புகள் அளப்பரியனவாகவும் நாடெங்கும் பரவலாகவுமிருந்த போதிலும், பௌதிக அம்சங்கள், செழுமை, பொருளாதார வாய்ப்புகள் ஆகியவற்றின் அடிப்படையில் இவற்றின் வினைத்திறன் நிலைமைகள் வேறுபடுகின்றன. உட்பிரதேச மீன்பிடித் தொழிலின் அபிவிருத்தியில் தோன்றியுள்ள வரையறுக்கும் காரணிகளில் கீழ்க்கண்டவையும் உள்ளன:

(அ) வறட்சி நிலைமைகளாலோ அல்லது கனத்த மழை வீழ்ச்சி நிலைமைகளாலோ நீர்ப்பிடிமானத்தில் பருவ கால வேறுபாடுகள்.

(ஆ) நீரேந்துப் பிரதேசத்தில் நிகழும் நடவடிக்கைகளின் காரணமாக செழுமை விகிதங்களில் ஏற்படும் மாற்றங்கள்; இப்பிரதேசம் ஒரு வனுந்தரப் பகுதியாக, விவசாயப்பகுதியாக அல்லது கட்டாந்தரையாக இருக்கலாம்.

(இ) உவர்த்தன்மை, காரத்தன்மை முதலியன போன்ற நீரில் இரசாயன அமைப்பு விலங்கினத்தின் மீதும் தாவர இனத்தின் மீதும் ஏற்படுத்தும் எதிர்த்தாக்கம்.

(ஈ) சுற்றுப்புறத்தின் சமூக - பொருளாதார நிலைமைகள். கோரிக்கையும் மக்களின் புலப்பாடுகளும் கூட அவர்களுடைய உற்சாகத்தையும் உட்பிரதேச மீன்பிடித்தொழிலின் அபிவிருத்தியையும் பாதிக்கின்றன.

கடற்றொழில் அமைச்சும் ஏனைய முகவரகங்களும் நடத்திய ஆராய்ச்சிகள், இந்நிலைமைகளின் கீழ் ஆண்டொன்றுக்கு நாட்டின் உட்பகுதியில் சுமார் 50,000 தொன் மீன் உற்பத்தி செய்வது சாத்தியமென எடுத்துக் காட்டியுள்ளன. இதற்குத் தற்போது வழங்கப்படும் தொழில் நுட்ப உள்ளீடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால், மீன் உற்பத்தியில் புதிய, விருத்திசெய்யப்பட்ட தொழில் நுட்ப முறைகள் அதிகரித்த அளவில் புகுத்தப்பட்டால், (இப்பொழுது தொழில் நுட்ப முறைகள் வழங்கப்படுகின்றன) மீன் உற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியும். புதிய கலப்பு மீன் வர்க்கங்களை அல்லது புதிய மீன் வளர்ப்பு முறைகளைப் புகுத்தியும் உட்பிரதேச மீன் வளர்ப்புக்கான நீர் நிலைகளை விரிவாக்குவதன் மூலமும் மீன் உற்பத்தியைப் பெருக்க முடியும்.

உட்பிரதேச மீன்பிடித் தொழில் அபிவிருத்தியை வரையறுக்கும் காரணியைக் கவனிக்குமிடத்து, சீனக் கயல் மீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற குறுகிய காலத்தில் துரிதமாக வளரும் வர்க்கங்களைப் புகுத்துவதன் மூலம் பாதகமான விளைவுகளைத் தவிர்க்கமுடியும். தற்போது, அவை பிரதானமாகப் பருவகால அறுவடையை வழங்குவதற்காகப் பருவகால குளங்களில் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், குறுகிய கால அறுவடையைப் பெறுவதற்கான ஓரினமாக அவை தங்களின் பொருளாதாரப் பெறுமதியை நிரூபித்துள்ளன. மிரிகல், ரோஹுட், கட்லா ஆகிய மீனினங்களின் அறிமுகமும் பருவகால குள மீன் வளர்ப்பு உலர் வலயத்தில் பொருளாதாரப் பெறுமதியுள்ளது என்பது நிரூபணமாகியுள்ளது. ஆதலால், பருவ மழையோ அல்லது வறட்சியோ தவிர்க்க முடியாத ஒரு தடையாக இருக்கத் தேவையில்லை. மீனினங்களைச் சரியாகத் தெரிவு செய்வதன் மூலமோ அல்லது தகுந்த வளர்ப்பு முறைகள் வாயிலாகவோ இத்தடையை வெல்ல முடியும் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

அதேபோல, தகுந்த மீனினங்களையும் வளர்ப்பு முறைகளையும் தெரிவுசெய்தால், நீர் நிலைகளின் இரசாயன அமைப்பினாலும் மற்றும் இயற்கை நிலைமைகளாலும் ஏற்படக்கூடிய பாதிப்பைத் தவிர்க்க முடியும். உதாரணமாக, உலர் வலயத்திலுள்ள குளங்களுக்கு திலாப்பியா தான் மிகவும் ஏற்ற மீனினமாகும். இந்த வாழிடத்தை நன்கு அனுசரித்து நடப்பதன்மூலம் அது சூழலமைப்பில் தகுந்த ஓரிடத்தை தேடிக்கொள்கிறதெனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. ஆதலால், நீர்ச் சூழல் நிலைமைகள் பற்றி நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து உட்பிரதேச மீன்பிடித் தொழில் அபிவிருத்திக்கு மிக முக்கியமான முடிவுகள் கிடைத்துள்ளன.

ஒரு பொருளாதார முயற்சியாக உட்பிரதேச மீன்பிடித் தொழிலில் மக்கள் பங்குபற்றுவதை நிர்ணயிப்பதில் அயல்

அட்டவணை 9

உள்நாட்டு நீர்ப்பரப்புகள்

| வகை | தொகை | பரப்பு (ஏக்கர்) |
|---|---|---|
| பாரிய நீர்பாசன நீர்த்தேக்கங்கள் | 73 | 175,000 |
| நடுத்தர அளவு நீர்பாசன நீர்த்தேக்கங்கள் | 160 | 42,000 |
| சிறிய ,, ,, | 16,468 | 97,000 |
| வெள்ள ஏரிகளும் வில்லுகளும் | – | 10,000 |
| மலைநாட்டு நீர்த்தேக்கங்கள் | – | 20,000 |
| மகாவலி நீர்த்தேக்கங்கள் | – | 60,000 |
| உவர் நீரேரிகள் | – | 300,000 |
| ஏனையன | – | |
| மொத்தம் | | 704,000 |

பகுதிகளின் சமூக - பொருளாதார நிலைமைகளும் மிகமுக்கியமாகும். இப்பகுதிகளில் மக்கள் உட்பிரதேச மீன்பிடித் தொழிலில் உண்மையான அக்கறை கொள்ளவில்லையானால், இம் முயற்சி விருத்தியடையாது; அதைப் பரப்புவது கடினம். ஆனால், உட்பிரதேச மீன் பிடித் தொழிலை உலர் வலயத்திலுள்ள மக்கள் கடந்த மூன்று தசாப்தங்களாக, குறிப்பாக ஒரு மாற்றுப் பொருளாதார முயற்சியாக அல்லது ஒரு குறைநிரப்பு பொருளாதார முயற்சியாகச் செய்து வந்திருப்பதன் பயனாக இந்த மீன்பிடித்துறை துரிதமாக விரிவடைந்துள்ளது.

மீன் வளர்ப்புக்குச் சில சுதேச மீனினங்களும் இருக்கின்றன. இவற்றை ஒரு பயனுள்ள மூலவளமாகக் கருதலாம். தற்போது, புதிய வளர்ப்பு முறைகளுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பல சுதேச உவர் நீர் மீன் வர்க்கங்கள் உள்ளன. உதாரணமாக, பால் மீனும் பல கூனிஇறால் இனங்களும் உள்ளன. அத்துடன், நன்னீர்க் குளங்களில் சில சுதேச மீன் வர்க்கங்களும் இருக்கின்றன. இவற்றைப் புதிய மீன் வளர்ப்பு முறைகளுக்கு உபயோகிக்கும் நடவடிக்கை பரீட்சிக்கப்பட்டுவருகிறது.

வடக்கு, கிழக்கு கடல் பிராந்தியங்களில் மீன் உற்பத்தி வீழ்ச்சியடைந்ததனையடுத்து 1985 ல் பதியப்பட்ட மொத்த மீன் உற்பத்தியில் உள்ளூர் மீன் பிடியின் பங்கு 20 சதவீதமாக அதிகரித்தது. 1970 களின் ஆரம்பத்தில் 5-10 சதவீதமாக இருந்த இந்துறையின் பங்களிப்பு தொடர்ச்சியாக வளர்ச்சிகண்டு வந்துள்ளதனை இது எடுத்துக் காட்டுகிறது. உற்பத்தி, பாதுகாப்பு நடவடிக்கைகள், மானியத்திட்டங்கள், வாவிகள் நிர்மாணம், உபகரணங்களின் வினியோகம் போன்ற அம்சங்களில் கடற்றொழில் அமைச்சின் உள்நாட்டு மீன்பிடி அலகு தொடர்ந்தும் கவனஞ் செலுத்தி வருதல் வேண்டும். இவ் வேலைகள் இடையீடின்றி கண்காணிக்கப்படுதல் முக்கியமாகும். 1979ம் ஆண்டில் 16,000 மெட்ரிக் தொன்களாக இருந்த உற்பத்தி 1985ல் இரட்டிப்பாகியுள்ளது. 1986 ம் வருடத்துக்கான இலக்கு 1979 ன் உற்பத்தியை மும்மடங்காக்குவதாகும். தலாபிலா போன்ற மீன் இனங்கள் இலங்கையின் சூடான நீர் நிலைகளுக்கு மிகப் பொறுத்தமானவை என்பதனையும், அவற்றை மிக மலிவான முறையில் உற்பத்தி செய்ய முடியும் என்பதனையும் கடந்த தசாப்தத்தின் அனுபவம் எடுத்துக் காட்டியுள்ளது. மேலும், கிராமங்களில் வாழும் சிறு வருமானக் குழுக்களுக்கு இம்மீன் இனங்களை வளர்த்து, சந்தைப்படுத்தும் ஆற்றல் உண்டு இலங்கையின் உள்நாட்டு நீர் நிலைகளில்

(21 - ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாநகரில் காணி விலைகள்

கொழும்பு நகரிலும் சூழவுள்ள பகுதிகளிலும் 1977 க்குப் பின் காணிவிலை கடுமையாக அதிகரித்துள்ளது. பண வழங்கலும் இக் காலப்பிரிவில் ஐந்து மடங்காக அதிகரித்தது. இதற்குக் காரணம், தாராள பொருளாதாரக் கொள்கை, ஏனைய நாணயங்களுக்கு எதிராக ரூபா மிதக்க விடப்பட்டமை, அரசு ஆதரவுடன் சேமிப்புக்களுக்கு அளிக்கப்பட்ட ஊக்கப்பாடு, மத்திய கிழக்கு வேலைவாய்ப்புக்கள், இரத்தினக்கல், சேவைத்துறைகள் தொடர்ந்து அபிவிருத்தியடைந்தமை, பொதுவாக வர்த்தக முயற்சிகள் விரிவாக்கப்பட்டமை என்பனவாகும். இக்காரணிகள் அனைத்தும் நேரடியாகவோ மறைமுகமாகவே காணிகளின் விலை அதிகரிப்பதற்கு உதவியுள்ளன. சென்ற சில ஆண்டுகளில், வளர்ந்து வந்த பொருளாதார முயற்சிகளுக்கும் இட நெருக்கடிக்கும் ஓர் அத்தியாவசிய சேவையாகவும் வசதியாகவும் அமைந்தது விறுவிறுப்பான சொத்துச் சந்தையும் கட்டுமானத் துறையுமாகும். இதன் பேறாக கொழும்பிலும் அதன் சுற்றுச் சூழலிலும் கண்ணுக்குப் புலப்படாத ஒரு காணி, சொத்துச் சந்தை தோன்றியது. 1977 க்குப் பின்னர் நகரிலும் சுற்றுப் புறங்களிலும் காணி, சொத்துச் சந்தை பெரும்பாலும் சொத்து வியாபார முகவர்களாலேயே நடாத்தப்படுகிறது. காளான் போல முளைத்த சொத்து வர்த்தக முகவர் நிலையங்கள் தோன்றியிருக்கின்றன என்பதற்கும் சான்றுகள் உள்ளன. இவை தம் வாடிக்கைக்காரர்களுக்கு தவணை முறையில் பணம் செலுத்தும் அடிப்படையில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளன. காணி, சொத்துக்களின் விலை ஏற்ற இறக்கப் போக்கினை நோக்குகையில் இருகட்டங்களில் இவ்விலை ஏற்ற இறக்கங்கள் நிகழ்ந்திருப்பதாகத் தோன்றுகிறது. முதலாவதாக, 1978 - 1981, மற்றது 1981 ன் பின்னர். 1978 - 1981 காலப் பிரிவில் நிலவிய காணி விலைகளுக்கமைய காணிவிலைகள் துரிதமாக அதிரித்தமையைக் காணலாம்.

புள்ளி விபரங்களின்படி, 1978 ல் காணி விலை பத்தரமுல்லையில் மிகக் குறைந்தும் (பேர்ச் ஒன்றுக்கு ரூ. 600) நாவலையில் மிகக்கூடியும் (பேர்ச் ஒன்றுக்கு ரூ. 4,500) இருந்தது. 1979 ல் பத்தரமுல்லை, கிரிபத்கொடை, கோட்டே ஆகிய இடங்களில் பதியப்பட்ட மிகக்குறைந்த விலை பேர்ச் ஒன்றுக்கு ரூ. 1,000 ஆகும். நாவலையிலும் தெஹிவளையிலும் பேர்ச் ஒன்றுக்கு ஆகக்கூடிய விலையாக ரூ. 8,000 பதியப்பட்டது. இவ்விரு ஆண்டுகளிலும் விலையேற்றம் படிப்படியானதாக இருந்தது. ஆனால், 1980 முதல் காணி, சொத்து விலைகள் துரிதமாக அதிகரித்தன. 1980 ல் கிரிபத்கொடையில் மிகக் குறைந்த விலை பேர்ச் ஒன்றுக்கு 1,500 ரூபாவாக இருந்தது. ஆனால், நுகேகொடையில் அசாதாரணமான விலை ஏற்றம் காணப்பட்டது. (பேர்ச் ஒன்றுக்கு 20,000 ரூபா.)

1981 ம் ஆண்டிலும், முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பு நோக்குகையில் காணி, சொத்துப் பெறுமதி அதிகரித்தது. கிரிபத்கொடையில் மிகக் குறைந்த விலை பதியப்பட்டது. (ஏறத்தாழ ரூ. 2,000), 1981 முதல் இதே போக்கு (கிரிபத்கொடை ரூ. 2,000, நுகேகொடை ரூ. 25,000/-) நீடித்து வருகிறது. ஏனைய பகுதிகளில் பொதுவாக விலைகள் அதிகரித்து வந்துள்ளன. ஆனால், குறிப்பிடத்தக்களவு கூடவோ குறையவோ இல்லை.

1979 ம் ஆண்டில் காணியின் ஆகக்குறைந்த விலையில் மிகக் கூடிய அதிகரிப்பு இரத்மலானையில் பதியப்பட்டது. இது, முன்னைய ஆண்டோடு ஒப்பிடுகையில் 150 சதவீத அதிகரிப்பாகும். ஆகக்கூடிய விலையில் மிகக்கூடிய அதிகரிப்பு தெஹிவளையில் பதியப்பட்டது. இது 100 சதவீதமானதாகும்.

பிற பகுதிகளில் காணிப் பெறுமதிகள் பொதுவாக அதிகரித்துக் காணப்பட்டன. 1979 ம் ஆண்டுடனும் 1981 ம் ஆண்டுடனும் ஒப்பிடுகையில் காணி விலை அதிகரிப்பைப் பொறுத்தவரையில் 1980 ம் ஆண்டு முக்கியமானதாகும். ஆகக்குறைந்த விலை 33.3 சதவீதத்தால் அதிகரிக்க, ஆகக்கூடிய விலை 185.7 சதவீதத்தால் அதிகரித்தது. ஓர் அசாதாரண அம்சம் கோட்டே பகுதியில் விலை அதிகரித்தமையாகும். அங்கு 1980 ல் மிகக்குறைந்த விலை 100 சதவீதத்தால் அதிகரித்தது., ஆகக்கூடிய விலை 400 சதவீதத்தால் அதிகரித்தது. இதுவே, 1978 - 1985 காலப் பிரிவில் ஏற்பட்ட மிகக்கூடிய அதிகரிப்பான (கோட்டே பகுதியில் காணப்பட்ட) பாரிய அதிகரிப்புக்குரிய அடிப்படைக் காரணம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டமையாகும்.

1981 லும் அதன் பின்னரும் ஏற்பட்ட நிலையான அதிகரிப்பு கிரமமான போக்காகத் தோன்றுகிறது. எவ்வாறாயினும், 1982 லும் அதன் பின்பும் விலைகளின் ஏற்றமும் வீழ்ச்சியும் வேகத்தில் குறைந்தன. ஆனால், 1984 ல் மீண்டும் எல்லாப் பகுதிகளிலும் மிகக்குறைந்த விலைகள் அதிகரிக்கக் காணப்பட்டன. இது நகரில் வதிவதற்கான வீடுகளுக்குரிய காணிகளுக்குள்ள தட்டுப்பாட்டைக் காட்டுகிறது. அதேவேளையில் சுற்றுப் புறங்களில் காணிகளுக்கு அதிக தேவை ஏற்பட்டிருப்பதையும் காட்டுகிறது. காணிப் பெறுமதி காணிகள் அமைந்துள்ள இடங்களைப் பொறுத்ததாகும்.

( 21 - ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உர உபயோகம் அதிகரிப்பு

1984 ம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் உபயோகிக்கப்பட்ட உரத்துடன் ஒப்பிடுகையில் 1985ன் அதே காலப்பிரிவில் அதைவிட உதிக உரம் உபயோகிக்கப்பட்டுள்ளது என்பது பதிவாகியுள்ளது. தேசிய உரச் செயலகம் தயாரித்துள்ள புள்ளி விவரங்களின்படி 1984 ல் 303400 மெ. தொன் உரம் உபயோகிக்கப்பட, 1985 ல் 326537 மெ. தொன் உபயோகிக்கப்பட்டது. அதாவது 23,100 மெ. தொன் அல்லது 7.6 சதவீத உரம் அதிகமாக உபயோகிக்கப்பட்டுள்ளது. இதுவே எந்த ஓராண்டினதும் முதல் 9 மாதங்களில் உபயோகிக்கப்பட்ட மிகக் கூடிய அளவு உரமாகும். 1984ன் முதல் 9 மாதங்களில் உபயோகிக்கப்பட்ட உரத்தின் சதவீத அளவை விட 1985ல் உபயோகிக்கப்பட்ட சதவீத அளவு குறைவான தெனினும், உபயோகிக்கப்பட்ட அதிக அளவு உற்சாகமூட்டுவதாகும். ஏனெனில், 1981 ல் கணிசமான அளவு உர உபயோகம் குறைந்த பின், சென்ற ஐந்து ஆண்டுகளில் தொடர்ந்து அதிகரித்து வந்த உபயோகத்திற்கு இதுவும் உதவியுள்ளது.

சிறு ஏற்றுமதிப் பொருட்களையும் புகையிலையையும் தவிர மற்றெல்லாப் பயிர்களும், 1984 ஐவிட 1985 முதல் 9 மாதங்களில் அதிக உரம் உபயோகித்தன. நெல்லும் அதையடுத்துத் தேயிலையும் மிகக் கூடிய அளவு உபயோகித்தன.

1985ன் முதல் 9 மாதங்களில் அதிக உரம் உபயோகிக்கப்படக் காரணம் உரத்தின் விலை மாறுபடாதிருந்தமையே எனலாம். உரவிலைகள் 1983 மேயில் திருத்தப்பட்ட பின் மாற்றம் ஏதும் நிகழவில்லை. மற்றொரு காரணம், முன்னைய ஆண்டிற் போன்றே 1985 ம் ஆண்டிலும் சாதகமான காலநிலை நிலவியமையும் ஒரு காரணமாகும்.

எவ்வாறாயினும், முந்திய ஆண்டிற் போலன்றி, உற்பத்தி செய்யப்பட்ட பயிர்களின் விலைகள், உர உபயோகம் அதிகரிப்பதற்கு உதவவில்லை. ஏனெனில், விலைகள் வீழ்ச்சியுற்றன அல்லது சிறதளவே ஏற்றம் காணப்பட்டது. வடக்கிலும் கிழக்கிலும் இருந்த குழப்பநிலை, உர விநியோகத்தைப் பெரிதும் பாதித்தது. இதனால் இப்பகுதிகளில் உர உபயோகமும் பாதுக்கப்பட்டது. பயிர்விலைகள் முன்னைய ஆண்டிற் போலவே இருந்திருப்பின் அல்லது அதிகரித்திருப்பின் இனப்பிரச்சினை விநியோக முறைமையைக் குழப்பாதிருந்திருந்தால் நாடு முழுவதிலுமான உபயோகம் மேலும் அதிகரித்திருக்கும்.

## நெல்

1985ன் முதல் 9 மாதங்களில் நெல்லுற்பத்தித் துறையில் உர உபயோகம், 9.9 சதவீதத்தால் அல்லது 10,282 மெற்றிக் தொன்களால் அதிகரித்தது. அதாவது 1984 அதே காலப்பிரிவில் 104,400 மெ. தொன் உபயோகிக்கப்பட 1985 ல் 114,700 தொன் உபயோகிக்கப்பட்டது. ஆய்வுக்குரிய காலப்பிரிவில் நெல் விலைகள் தேங்கியும், நெல் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு குறைந்தும் இருந்துங்கூட உர உபயோகம் அதிகரித்தமை திருப்திக்குரியதாகும். 1983 மார்ச்சில் புசல் ஒன்றுக்கு 62 ரூபா 50 சதமாகத் திருத்தப்பட்ட நெல்லின் உத்தரவாதவிலை ஆய்வுக்குரிய காலப்பிரிவின் இறுதிவரை மாற்றப்படவில்லை. திறந்த சந்தையிலும் கூட 1984ன் அதே காலப்பிரிவில் விலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. நெற்செய்கைத்துறையில் ஏக்கருக்கு உபயோகிக்கப்பட்ட உரத்தின் சராசரி அளவு அதிகரித்தமையால் மொத்த அளவும் அதிகரித்தது.

## தேயிலையும் இரப்பரும்

1985 முதல் ஒன்பது மாதங்களில் தேயிலைத் துறையில் (6.5 சதவீதத்தால் அல்லது 6.600 மெ. தொன்களால்) 101,400 மெ. தொன்களிலிருந்து 108,000 தொன்களாக அதிகரித்தது. தேயிலை விலைகள் கணிசமாக வீழ்ச்சி அடைந்தும் கூட தேயிலைத் துறையில் உர உபயோகம் இவ்வாறு திருப்திகரமாக நடைபெற்றது.

இரப்பர் துறையிலும் உர உபயோகம் 8.2 சதவீதத்தால் அல்லது 19,300 மெ. தொன்னிலிருந்து 20,900 தொன்களாக 1,600 மெ. தொன்களால் அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்கு, இரப்பர் விலைகள் திருப்திகரமான மட்டத்தில் இருந்தமை காரணமாகும். உரவிலைகள் ஸ்திரமாக இருந்தமையும் காலநிலை சீராக இருந்தமையும் மற்றும் காரணங்களாகும். ஆய்வுக்குரிய காலப்பிரிவில் இரப்பர் விலைகள் ஓரளவே அதிகரித்தன. இலங்கையின் தேயிலை, இரப்பர்த் தோட்டங்களிற் பெரும்பகுதி பெருந்தோட்டத்துறையின் கீழ் வருகின்றன. இவ்விரு துறைகளும் சிறந்த முறையில் முகாமை செய்யப்பட்டமையும் அதிக உரம் உபயோகிக்கப்பட்டமைக்குக் காரணமாகும்.

## தென்னை

தென்னந்தோட்டத் துறையில் ஆய்வுக்குரிய காலப்பிரிவில் உர உபயோகம் ஓரளவே அதிகரித்தது. 1984 ல் 27,700 மெ. தொன் உபயோகிக்கப்பட 1985 ல் 28,100 தொன் உபயோகிக்கப்பட்டது. இது 1.6 சதவீத அல்லது 400 தொன் அதிகரிப்பாகும். தேங்காய் விலைகள் வீழ்ச்சியுறுவிட்டால் உர உபயோகம் கணிசமாக அதிகரித்திருக்கும் 1984 ல் தேங்காய் விலைகள் கணிசமாக அதிகரித்திருந்த

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, உர உபயோகத்தில் மிகக்கூடிய அதிகரிப்பான 38 சத வீதம் அல்லது 14,300 மெ. தொன் பதியப்பட்டது.

### உப உணவுப் பயிர்கள்

வெங்காயம், மிளகாய், சோளம், சோயா அவரை, மோச்சை, பயறு ஆகியவற்றைக் கொண்ட உப உணவுப் பயிர்களுக்கு உபயோகிக்கப்பட்ட உரத்தின் அளவு 8 சதவீதத்தால் அல்லது 900 மெ. தொன்களால் 11,700 மெ. தொன்களிலிருந்து 12,600 தொன்களாக அதிகரித்தது. நெல் பயிரிடப்படும் நிலப் பரப்பு அதிகரிக்கும்போது, உப உணவுப் பயிர்கள் செய்யப்படும் பரப்பு குறைவது வழக்கம். 1985 லும் இப்போக்கு அவதானிக்கப்பட்டது. குறைவாக உரம் உபயோகிக்கப்பட்டமைக்கு இது காரணமாகலாம். 1984 ல், நெல் பயிரிட்ட நிலப் பரப்பு அதிகரித்தபோது உப உணவுப் பயிர்களுக்கு உபயோகிக்கப்பட்ட உரத்தின் அளவு 9.5 சதவீதத்தில் குறைந்தது.

### சிறு ஏற்றுமதிப் பயிர்கள்

கறுவா, ஏலம், மிளகு, கராம்பு ஆகியவற்றைக் கொண்ட சிறு ஏற்றுமதிப் பயிர்களுக்கு உபயோகிக்கப்பட்ட உரத்தின் அளவு 11.4 சதவீதத்தால் அல்லது 400 மெ. தொன்களால் குறைந்தது. புகையிலைச் செய்கைக்கு உபயோகிக்கப்பட்ட உரம் 26.3 சதவீதத்தால் குறைந்தது. புகையிலைச் செய்கையில் உர உபயோகம் இவ்வாறு குறைந்திருப்பது பற்றித் தீவிரமாக கவனஞ் செலுத்த வேண்டும். 1984 ல் உர உபயோகம் 46 சதவீதமாகக் குறைந்திருந்தது. மரக்கறிவகைகள், உருளைக் கிழங்கு, பழவர்க்கங்கள், வீட்டுத் தோட்டப்பயிர்களுக்கான உரம் 12.2 சதவீதத்தால் அல்லது 4,200 மெ. தொன்களால் அதிகரித்தது.

பயிர்ச்செய்கையைப் பெருக்கும் பொருட்டு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவற்றில் சிபாரிசு செய்யப்பட்ட அளவு உரம் உபயோகிக்கப்படுதல் முக்கியமானதாகும். இலங்கையில் சிபார்சு செய்யப்பட்ட அளவுக்குக் குறைவாகவே எல்லாப் பயிர்களுக்கும் உரம் உபயோகிக்கப்படுவதால், உர உபயோகத்தை அதிகரித்து பயிர்ச் செய்கையைப் பெருக்குவதற்கு வாய்ப்புண்டு. அதே வேளை சிறந்த நீர் முகாமை, மண்பாதுகாப்பு, களை, நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் போன்ற பிற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(19 - ம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும், 1982 முதல் 5 சந்தர்ப்பங்களில் புறநடையான போக்கு காணப்பட்டது; 1982 ல் இரத்மலானையிலும், 1983 ல் நுகேகொடையிலும், 1985 ல் தெஹிவளையிலும், மிகக் குறைந்த விலைகள் குறையக் காணப்பட்டன. 1983 லும் 1985 லும், நாவலையில் மிகக் கூடிய விலை குறையக் காணப்பட்டது.

இத்தரவுகளை அவதானிக்கும்போது, 1982 ல் நகரின் சுற்றுப்புறங்களில் காணிப் பெறுமதிகளில் மாற்றம் தொடர்ந்து நிகழ்ந்தது என முடிவு செய்யலாம். எனினும், பொதுப்படையாக விலைகள், நாட்டின் பணவீக்க நிலைமைகளுக்கமைய அதிகரித்தே வந்தன.

1980 க்கு முன் கட்டட அமைப்பு வேலைகள் முன்னொரு போதும் இல்லாத அளவு வேகமாக நடைபெற்றன. மத்திய வங்கிக் கூற்றின்படி இத்துறையின் உண்மையான வளர்ச்சி 1978 ல் 28 சதவீதமாகவும் 1979 ல் 20 சதவீதமாகவும் 1980 ல் 11 சதவீதமாகவும் இருந்தது. ஆனால், இந்த வேகம் நிலைக்கவில்லை. 1981 அளவில் இது 3 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. 1983 ல் மேலும் வீழ்ச்சியடைந்தது. 1984 ல் ஓரளவு வீழ்ச்சியுற்றது. 1981 முதல் இவ்வாறு வீழ்ச்சியுறக் காரணம், கட்டடப் பொருட்களின் விலைகள் ஏறியமையும் கட்டிடம் அமைக்கத்தக்க காணிகளின் விலை அதிகரித்தமையுமாகும். இப்புள்ளி விவரங்களிலிருந்து புலப்படும் உண்மை யாதெனில் நாட்டின் ஏனைய துறைகளில் ஏற்படும் மாற்றங்களோடு காணி, சொத்துக்களின் பெறுமதிகளும் உயர்கின்றன அல்லது தாழ்கின்றன என்பதாகும்.

(18 - ம் பக்கத் தொடர்ச்சி)

அடைப்பில் மீன் வளர்த்தல், மீன் பண்ணையமைப்பு போன்றவை குறித்த ஆரம்ப பரீட்சார்த்த முயற்சிகள் ஓரளவுக்கு வெற்றி கண்டுள்ளன. இத்தகைய செறிவு மிக்க மீன் வளர்ப்பு, வேளாண்மை உத்திகள் விருத்தியுறும் வாய்ப்புக்களைக் காட்டுகின்றன. மீனுக்கான கோரிக்கை தொடர்ந்தும் அதிகரித்துச் செல்லும் அதே வேளையில், மீனவர்களும் விவசாயிகளும் மீனை நிரம்பல் செய்வதில் அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர். வெற்றிகரமான ஓர் உண்ணாட்டு மீன் பிடித்துறையை வளர்த்தெடுப்பதற்கு இத்தகைய கேள்வி — நிரம்பல் சக்திகளை சரியான முறையில் நெறிப்படுத்திச் செல்லக்கூடிய திட்டமிடப்பட்ட தொடர்ச்சியான விஸ்தரிப்புச் சேவைகள் அவசியமாகும்.

நன்னீர் மீன் பிடித்துறையை பேரளவில் அபிவிருத்தி செய்வதானது பல்வேறு பிரச்சினைகளையும் எழுப்பலாம். குறிப்பாக, உள்ளூர் நீர் நிலைகளின் சூழல் மீதும், உள்நாட்டு மீனினங்கள், தாவரங்கள் என்பவற்றின் மீதும் மோசமான பாதிப்புக்கள் நிகழக்கூடும். பொது நீர்த்தேக்கங்களிலும், தடாகங்களிலும் நீர் வளங்களையும். மீன் வளங்களையும் பங்கிட்டுக் கொள்வதிலும் சிக்கலான பிரச்சினைகள் தோன்றலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மக்களுக்குரிய அபிவிருத்தி

ஸமீர் அமீன்
டானியல் பிளெயின்

பொருளியலாளரான ஸமீர் அமீன் (செனிகல்) டாக்கரிலுள்ள 'யூனிட்டார்' நிறுவனத்தின் ஆபிரிக்கத் திட்டத்தின் எதிர்காலத்துக்கான உபாயங்கள் பகுதியின் பணிப்பாளராக இப்பொழுது கடமையாற்றுகிறார். "சமமற்ற அபிவிருத்தி", "உலக அளவில் குவிப்பு" ஆகிய நூல்கள் உட்படப் பல நூல்களை அவர் எழுதியுள்ளார். கடந்த பதினைந்து வருடங்களின்போது, அவர் குறிப்பாக அபிவிருத்திப் பிரச்சினைகளின் விவாத ஆலோசனையைத் தெளிவாக்கவும், சீர்படுத்தவும் "மைய" நாடுகள், "சுற்றெல்லை" நாடுகள் போன்ற எண்ணக்கருக்களைப் புகுத்துவதன் மூலம் அபிவிருத்திப் பிரச்சினைகளைப்பற்றி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கருத்துக்களைத் தலைகீழாய்க் கவிழ்ப்பதற்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார். பத்து வருடங்களுக்கு முன்பு இத்தாலியப் பத்திரிகையாளர் குழுவொன்றுடன் நடைபெற்ற நீண்ட கலந்துரையாடலொன்றின்போது, ஸமீர் அமீனும் அவருடைய சகா ஆண்ட்ரீ கண்டர் பிராங்கும் (இவரும் ஒரு பொருளியலாளர்) அப்போதிருந்த "1984 ம் ஆண்டுக்குரிய செயற்கை எல்லை" பற்றிப்பேசி, உலகப் பொருளாதாரத்தின் உருவாக்கம் பற்றியும், வளர்முக நாடுகள் ஆற்றக் கூடிய பங்கு பற்றியும் இரு கருதுகோள்களை முன்வைத்தனர். இக்கருதுகோள்களில் முதலாவது, "மூலதனத் திட்டத்தின் மறு சீரமைப்பு" பற்றியதாகும். அதாவது, ஒரு புதிய சர்வதேச தொழிற் பிரிப்பாகும். இதில் உற்பத்தி நிகழ்வுப் போக்குகளின் பெரும் பகுதிகள் (துண்டங்கள்) - பழம் நியம அணிக் கைத்தொழில்கள் - சுற்றெல்லைப் பகுதிகளுக்கு இடமாற்றப்படுகின்றன. மலிவான தொழிலாளர்களையும் விரிவடைந்து வரும்சந்தைகளுக்கு வெகு அருகில் (கைத்தொழில்களின்) புதிய அமைவிடங்களையும் பயன்படுத்திக் கொள்வதற்காக இத்தகைய ஒரு மாற்றம் நிச்சயமாக ஏற்படும். இந்தச் சந்தைகள் நடுத்தர வகுப்பாரின் உயர்ந்துவரும் கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவையாகும். பிரேஸில் நாட்டிலே அதன் உச்சக் கட்டத்தின்போது சரியாக இவ்விதமான அபிவிருத்தியே ஏற்பட்டது. இந்த மறு அபிவிருத்தி முறையில், புதுமையான தொழில்நுட்ப மாற்றங்களையும், ஒன்றிணைப்பு அணிக் கைத்தொழில்களைக் கட்டுப்படுத்தும் கைத்தொழில்கள் உட்படப் புதிய கைத்தொழில்களையும் அடிப்படையாகக் கொண்ட மையம் ஒரு சமமற்ற வேலையைச் செய்கின்றது.

மற்றக் கருதுகோள் இத்தகைய மறு அபிவிருத்தி முயற்சியின் தோல்வியை உள்ளடக்குகிறது: இது, மூலதனத்தின் தர்க்க நியாயமே நிலைமையைக் கட்டுப்படுத்தி ஆதிக்கம் செலுத்துகிறது: மையத்துக்கும் சுற்றெல்லைப் பகுதிகளுக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் இப்படிச் செய்யவில்லையென்ற ஊகத்தை அடிப்படையாகக் கொண்டது. இப் பேச்சுவார்த்தைகளே வெளியுலகுக்குத் திறந்துள்ள தேசியத் கைத்தொழில் அபிவிருத்திக்கு ஊக்கமூட்டும் என்பது குறிப்பிடத்தக்கது. அப்பொழுது மறு அபிவிருத்திக்குக் காட்டப்படும் எதிர்ப்பு இன்னும் அதிக அளவுக்கு எதிர்மறையாயிருக்கக் கூடிய ஓர் இரண்டாவது மாதிரியுருவை உண்டாக்கும். இதில் ஒன்றிணைப்பு அணிக் கைத்தொழில்கள் மீண்டும் மாற்றப்பட்டு, இறுதியில் மையப்படுத்தப்படுகின்றன. புதிய உருமாற்றப்பட்ட நவீனமயமாக்கப்பட்ட கைத்தொழில்கள் மத்திய நாடுகளில் தலைதூக்குகின்றன; "அழித்தொழித்தல், இனவெறிப்பாகுபாடுகள், அதிகரித்துவரும் வன்செயல்கள்" ஆகியனவெல்லாம் நடைபெறும் ஒரு கட்டுக்கோப்பில் தெற்கு (தென பகுதி நாடுகள்) ஓரத்துக்குத் தள்ளப்படுகிறது: மூன்றுவது உலகம் தொல்லை தருவதாகி விடுகின்றது.

பத்து வருடங்களுக்குப்பிறகு இவ்விரு கருதுகோள்களும் "ரிப்போட்ஸ்" என்னும் சர்வதேச அபிவிருத்தி, ஆராய்ச்சி சஞ்சிகைக்கு ஸமீர் அமீன் அளித்த ஒரு பேட்டிக்கு அடிப்படையாக அமைந்தன. "பியோ மான் சு" ஆராய்ச்சி நிலையம் ஏற்பாடு செய்த ஒரு சர்வதேச கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக இத்தாலிக்கு விஜயம் செய்திருந்தபோது அவர் இப்பேட்டி அளித்தார். இந்த ஆராய்ச்சி நிலையம் ஐரோப்பிய நாடுகளுக்கும் அரபு நாடுகளுக்கு மிடையே நிலவும் உறவுகளில் அக்கறை கொண்டதாகும்.

## சமீர் அமீன் பேட்டி

**கேள்வி:-** மிஸ்டர் அமீன், கடந்த பத்தாண்டுகள் உங்கள் கருதுகோள்களை எவ்வாறு சோதித்துள்ளன?

**பதில்:-** துரதிர்ஷ்டவசமாக, நாம் மூன்றும் உலகில் இருகருதுகோள்களும் சாதிக்கப்படுவதற்கு வெகு தூரத்தில் இல்லை. ஒரு பக்கத்தில், கைத்தொழில் மயமான நாடுகள் இருக்கின்றன. மறுபக்கத்தில், நாலாம் உலகம் என இப்பொழுது குறிப்பிடப் படும் எல்லை நாடுகள் உள்ளன. ஒன்றிணைப்பு அணிக் கைத்தொழில்களின் பயனுறுதி வாய்ந்த மறுசீரமைப்பே பிரேஸில், மெக்ஸிகோ போன்ற முக்கிய இலத்தீன் அமெரிக்க நாடுகள் மட்டுமன்றி அர்ஜென்டினாவும் மற்ற நாடுகளும் கவனஞ் செலுத்தியுள்ள திசையாக இருந்து வந்துள்ளது. இம்முறை தென்கொரியா, தைவான் போன்ற கிழக்காசியாவிலுள்ள சில நாடுகளிலும், அரபு நாடுகளிலும் தென்னாசியாவிலுமுள்ள மற்றும் ஒரு சில மையங்களிலும் நிலைகொள்கின்றது. புதிதாகக் கைத்தொழில் மயமாக்கப்பட்ட நாடுகளிலுள்ள இந்த மறு அபிவிருத்திப் பிரதேசங்கள், தற்சமயம், வேறு முக்கிய காரணிகளின் நிமித்தமாக நெருக்கடியில் உள்ளன; ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே நிலவும் போட்டிகளும், பணவீக்கமின்றிப் பிரமாண்டமான பற்றுக் குறையைக் குவிக்க அமெரிக்காவுக்கு உதவும் உயர் வட்டி விகிதங்கள் என்னும் எதிர்த் தாக்குதலுமே இக்காரணிகளாகும். இதனால் ஏற்பட்டுள்ள விளைவுகளில் ஒன்றுயாதெனில், மூலதன மறுசீரமைப்பு வெற்றிகரமாக நடைபெற்றுவந்த அதே நாடுகளில் பொதுப் படுகடன் சகிக்க முடியாத அளவுக்கு மோசமடைந்து வந்ததாகும். இது உலக வங்கி வெளியுலகுக்குத் திறந்திருக்கும் அபிவிருத்தியை முன்கூட்டியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்த்தபோது கூறியதற்கு முற்றிலும் எதிர்மாறான நிலைமையாகும். மறுபக்கத்தில், குறிப்பாக, சஹாராவுக்குத் தெற்கே கிட்டத்தட்ட ஆபிரிக்கா முழுவதையும் அத்தியாவசியத் தேவைகளுக்கு ஏற்பட்டுள்ள கொடுந்தட்டுப்பாடு மொத்தி வருகின்றது. அங்கு பஞ்சம் அதிகரித்து வருகிறதென்பதை இது மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

கேள்வி:— ஆதலால், தற்போதைய பொருளாதார நிலைமை, தங்கள் பொருளாதாரங்களைச் சரிக்கட்ட முயலுமாறு வளர்முக நாடுகளைக் கட்டாயப் படுத்துகின்றது. அந்நாடுகள் அப்படிச் செய்யமுடியுமா?

பதில்:— நான் கண்டிக்க விரும்பும் அதே சொல்லை நீங்கள் உபயோகித்திருக்கிறீர்கள். அந்நாடுகள் புதிய நிலைமைக்குத்தக்கபடி தங்கள் அபிவிருத்தியைச் சரிப்படுத்தியமைக்க வேண்டுமென்று நீங்கள் கூறுகிறீர்கள்...... இங்குதான் அபிவிருத்தி சம்பந்தமாகத் தெரிவுரிமைகள் உள்ளன: பங்காளிகள் உலக வளர்ச்சிப் போக்குகளுக்கு இசைவாகத் தங்களைத் திருத்தியமைத்துக்கொள்ள முயல வேண்டுமா? அல்லது இதற்கு மறுதலையாத அப்போக்குகளிலிருந்து தங்கள் இணைப்பை நீக்கிக்கொள்ள அவர்கள் முயலவேண்டுமா?

ஆபிரிக்க நாடுகள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியில் படுமோசமான நிலையிலுள்ளன. இது கடந்த காலத்திலே அங்கு நடைபெற்று வந்துள்ள அபிவிருத்தி வகையின் தர்க்க ரீதியான விளைவேயாகுமென்பது தெளிவு. 1973 – 74ம் ஆண்டுகளில் ஏற்பட்ட பெற்றோலியம் நெருக்கடிக்கு முன்பே கூட ஆபிரிக்கா 1970 களின் ஆரம்பத்தில் நீண்ட நெருக்கடியின் கட்டமொன்றுக்குள் பிரவேசித்தது. அதற்கு ஒரு திகதியைக் குறிப்பதெனில், 1971ம் ஆண்டில் டொலருடைய மாற்றத்தக்க தன்மையின் முடிவே அதுவாம். அது விரிவாக்க காலம் திடீரென நின்று விட்டதையும், தற்போதைய நெருக்கடி தொடங்கியதையும் குறிக்கின்றது.

இதற்கு முந்திய கால கட்டத்தில் ஆபிரிக்காவுக்கும் பொதுவாக மூன்றும் உலகுக்கும் முற்கணிக்கப்பட்ட அபிவிருத்தி வகை அக்காலத்து உலகளாவிய விரிவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. அதன் விளைவாக, அது பெரும்பாலும் வெளி உலகத்தை நோக்கியே திரும்பியது; விவசாயம், சுரங்கத் தொழில், பெற்றோலியம் ஆகியவற்றில் ஏற்றுமதிப் பொருள்களுக்கு உயர் முதலிடம் கொடுப்பதையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு, வெளிநாட்டு மூலதனத்தின் அல்லது வெளிநாட்டுப் பொது உதவியின் ஆதரவோடு ஒரு சிறிய இறக்குமதி மாற்றீட்டுக் கைத்தொழிலுக்கு நிதியளிக்க அது முயன்றது; கிராம, நகர்ப்புற மக்களின் தேவைகளைவிட ஒப்பியல் ரீதியாக சுகஜீவியம் நடத்திவந்த நடுத்தர வகுப்பாரின் தேவைகளை நிறைவேற்றுவதே அதன் பிரதான நோக்கமாயிருந்தது.

இவ்வகையான அபிவிருத்தி உண்டாக்கிய விளைவுகளே தற்போதைய நெருக்கடி வெளிச்சத்துக்குக் கொண்டுவந்த சீரழிவுகளுக்குக் காரணமாகும். சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் சமச்சீரற்ற அபிவிருத்தியை ஏற்படுத்தியது; அப்போது உயர்ந்த வளர்ச்சி விகிதத்துடனிருந்த போதிலும் இப்போது சகிக்க முடியாத வெளிநாட்டுப் படுகடனில் உழலும் ஐவறி கோஸ்ட் போன்ற நாடுகளுக்கும் (முன்பு மேல் வோல்டாவாக இருந்த) பர்க்கினு போன்ற இத்தகைய வளர்ச்சியை அனுபவிக்காத நாடுகளுக்குமிடையே இந்த ஏற்றத்தாழ்வான அபிவிருத்தியைக் காணக்கூடியதாயுள்ளது. அந்நாடுகளின் உள்நாட்டுச் சமூகத்திலும் அது மிகவும் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியை ஏற்படுத்தியது. நகரங்களுக்குள்ளேயே இடைவெளி அகலமாகிவருவது போலவே நகர்ப் புறங்களுக்கும் நாட்டுப் புறங்களுக்குமிடையேயும் இடைவெளி தொடர்ந்து விரிவடைந்துவருகிறது. ஆங்காங்கே தனித்துள்ள துறைகளின் சுபிட்ச நிலையுடன் ஒப்பிடுகையில், ஆபிரிக்காவிலுள்ள நகரங்கள் போன்ற சராசரிப் பரிமாணமுள்ள நகரங்களில் கூட காணப்படும் பிரமாண்டமான சேரிப்பட்டணங்கள் நாட்டுப் புறங்களின் துயர் நிறைந்த படுமோசமான சஞ்சல வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன.

கேள்வி:- அப்படியானால், வளர்முக நாடுகளுக்குள்ள தெரிவுரிமைகள் என்ன?

பதில்:- 1960 களில் நிலவிய சுபிட்ச நிலைமைகளைப்பற்றி வாஞ்சையுடன் ஞாபகப்படுத்திக் கொண்டிருப்பதில் பயனில்லை. அந்நாட்கள் கடந்து போய் விட்டன. மீண்டும் அந்நிலைமைகளுக்கு மீள்வோம் என்று நினைக்காதீர்கள். இந் நெருக்கடியை எதிர்நோக்க இரு வழிகள் உண்டென்பது எனது அபிப்பிராயம். முதலாவது வழி, சற்றுமுன்பு நீங்கள் உபயோகித்த ''இசைவாக்கிக் கொள்ளுதல்'' என்னும் சொல் சுட்டும் வழியாகும். அதாவது, வரும் புதிய முறையில் ஓரிடத்தைக் காண முயல்வதாகும். புதியமுறை இன்னும் துலக்கமாக உருப்பெறவில்லை; அதன் விவரங்களையும் பெறுபேறுகளையும் இப்பொழுதே அறிய முடியாது. மற்றவழி, இதற்கு நேர் மாறானது. அதாவது, இப்பொழுது புனரமைக்கப்பட்டுவருவதும் இன்னும் அறியப்படாததுமான முறையிலிருந்து தூர விலகி இருப்பதாகும்.

பெரும்பாலான மூன்றும் உலக நாடுகளையும், ஒரு வேளை அரபு நாடுகளையும், கிட்டத்தட்ட சகல ஆபிரிக்க நாடுகளையும் பொறுத்த வரையில், இப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது வெளித்தோன்றிக் கொண்டிருக்கும் புதிய முறைக்கு மிகத் தாழ்ந்த நிலைகளில் தவிர மற்றப்படி தங்களை இசைவாக்கிக் கொள்ளுதல் அந்நாடுகளுக்கு உண்மையிலேயே சாத்தியமற்ற காரியமாயிருக்குமென்று நான் அஞ்சுகிறேன். இதன்விளைவாக, அந்நாடுகள் சரித்திர முக்கியத்துவமுள்ள ஒரு வாய்ப்பையும் சவாலையும் எதிர்நோக்குகின்றன. இந்த முறையிலிருந்து விலகிச் சற்றுத் தூரத்தில் அவற்றினால் இருக்க முடியுமா? என்ன அடிப்படையில் அப்படி இருக்க முடியும்? இதற்குமாறாக, ''வீச் செல்லையில் பொது மக்களுக்குரியதாயிருக்கக் கூடியது'' என்று நான் விரைவிலக்கணஞ் செய்யும் அபிவிருத்தி முறைக்கு அந்நாடுகளால் முதலிடம் தர முடியுமா? என்ன அடிப்படையில் அப்படித் தரமுடியும்? நான் விளக்குவது, ஒரு தேசிய, பொது ஜன விருப்புக்குரிய அபிவிருத்தி முறையாகும். அது ஒரு ''சோஷலிஸ'' அபிவிருத்தி முறையென்று நான் கூறவில்லை. தயவுசெய்து இதைக் கவனிக்கவும். ஜனபிமானம் பெற்ற ஓர் அணுகுமுறை, சமூகப் புனரமைப்புக்கு மிகப் பொருத்தமான திட்டங்களைக் கைக்கொள்ள மக்களை அனுமதிக்கும் ஓரளவு சுயாட்சியை வழங்குமா என்பது இனித்தான் தெரிய வரும்.

கேள்வி:— பெருமளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் திரும்பத் திரும்ப தோல்வியடைந்ததால் சில கருதுகோள்களை மாற்றியமைக்க வேண்டியிருந்தது. எங்கும் மக்கள் இப்பொழுது சிறு திட்டங்கள் அல்லது காரியார்த்தமான அணுகு முறைகளைப் பற்றியே பேசுகிறார்கள். இவ்விதமான அணுகு முறை நீங்கள் முன்கூட்டியே எதிர்பார்க்கும் வகையான தேசிய, பொது மக்கள் விருப்புக்குரிய அபிவிருத்திக்கு ஆதரவாக இருக்குமா?

பதில்:- இந்தக் கருத்துக்கள், திட்டங்கள்யாவும் உள்ளூர முன்னுக்குப்பின் முரணாகவே இருக்கின்றன. ஒரு பக்கத்தில் அவற்றின் சமூகப்பொருளடக்கம் நிச்சயமாகக் கவர்ச்சியாக உள்ளது. ஆனால் மறுபக்கத்தில், ஒன்றில் தேசிய ரீதியாகவோ அல்லது சர்வதேச உறவுகளைப் பொறுத்தோ இத்தகைய ஒரு தெரிவின் பயன்பாட்டைப்பற்றி எடுக்கப்படும் முடிவுகளை நிறைவேற்ற அவை போதிய அளவுக்கு முயல்வதில்லை. உண்மை என்னவென்றால், அபிவிருத்தி என்பது உற்பத்தியாளர்களின் கருத்தையும், அவர்களுடைய முனைப்புகளையும், முதன்மை நிரலையும், அவர்களுடைய தேவைகளையும் அவை எவ்வாறு அவர்களைத் திருப்தி செய்யலாமென்பதையும் அறியாமல் சிந்திக்கப்பட்ட வளர்ச்சியின் ஓர் உடன் விளைவாக இருக்க முடியாது. ஒருவர் அறியக் கூடியவரை, இத்தகைய திட்டங்களை ஆரம்பிக்க, சர்வதேச ஸ்தாபனங்களுக்குப் போதிய அரசியல் அதிகாரம் இல்லை. அபிவிருத்தியடைந்த நாடுகளிலிருந்து கிடைக்கும் உதவியைக் கொண்டும் இவற்றை ஆரம்பிப்பதற்கில்லை. இது தவிர, வளர்முக நாடுகளின் உண்மையான நோக்கம் அதுவா என்பதில் எனக்குப் பெருத்த சந்தேகமுண்டு. இன்றைய அரசியல் ஆட்சிமுறைகளின் கீழ் இத்தகைய ஒரு காரியம் சாத்தியமா? சாத்தியமாகும் என்று நான் நிச்சயமாக நம்பவில்லை.

இதை வேறு விதமாகச் சொல்கிறேன். இத்தகைய ஓர் அபிவிருத்தி முயற்சியை மேற்கொள்வதென்றால், அதற்கு முன்னர், உள்நாட்டு அரசியல் மாற்றங்களின் பிரச்சினையும், பொது ஜன முயற்சிகளுக்கு வெளி ஆதரவு அளிக்கப்படும் இன்னொரு பிரச்சினையும் தீர்க்கப்பட்டிருக்க வேண்டும். மூன்றும் உலகில் ஏற்படும் மாற்றங்கள் சம்பந்தமாக மேற்கு நாடுகள் உண்மையில் என்ன கருத்துக் கொள்கின்றன? என்ன நடவடிக்கை எடுக்கின்றன? இவ்வகையான ஒரு மாற்றம் சம்பந்தமாக மேற்கு நாடுகள் பெரும்பாலும் எடுக்கும் நடவடிக்கை படையெடுக்கும் பயமுறுத்தலாகவே இருந்து வந்துள்ளது. ஒருவர் தர்க்கரீதியாக நடந்து கொள்ள வேண்டும். ஒருவர் பொது ஜன அபிவிருத்தியை எதிர்பார்க்கும் அதே சமயத்தில், ஒப்பியல் ரீதியாக அனுகூலமான அரசியல் நிலைமைகள் எழும் ஒவ்வொரு முறையும் அவற்றை ஒரு முறைப்படி எதிர்க்கலாகாது. பொருளாதார மட்டத்தில் மேற்கு நாடுகள் அனைத்தும் தெரிவுசெய்து கைக்கொள்ளும் பிரதான நடவடிக்கை என்னவென்றால், - அமெரிக்கா மட்டுமல்ல, மூன்றும் உலகம் சம்பந்தமாக முழுக்கருத்து ஒற்றுமை கொண்ட ஐரோப்பாவும் ஜப்பானும் கூட — சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கையைத் திணிப்பதுதான். அக்கொள்கை யாவது, ''உண்மை விலைகள்'' என்று சொல்லப்படுவதைப் பிரயோகிப்பதன் மூலம், பெரும்பான்மையான மக்களைப் பொறுத்தவரை, முற்றிலும் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தக் கூடிய ஒரு வழியில் சமநிலையை மீண்டும் ஸ்தாபிப்பதாகும். பொது ஜன அபிவிருத்திகள் பற்றிப் பேசும் அதே சமயத்தில் சர்வதேச நாணய நிதியம், பத்து நாடுகள் குழு முதலியவற்றின் மூலம் உலக முறையில் சிந்திக்கப்பட்டவை போன்ற மறுசீராக்கல் கொள்கைகளைத் திணிக்க முயல்வது சாத்தியமல்ல.

கேள்வி:— இறுதியில் நன்மையை விட தீமையே மேலோங்கி விடுகிறதென்னும் இரு கருதுகோள்களைப் பத்தாண்டுகளுக்கு முன்பு நீங்கள் உருவாக்கினீர்கள். அவை பெருமளவுக்குச் சரி — பிழை பார்க்கப்பட்டு விட்டன. இப்பொழுது என்ன நிலைமை?

பதில்:- குறுகிய காலத்தைக் குறித்து ஒருவர் சற்றும் நம்பிக்கை கொள்ளாதிருக்கலாம். ஏனென்றால் மூன்று காரணிகள் செயல்படுவதைக் காணலாம்.

(29 - ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலத்தீன் அமெரிக்க படுகடன்

## சிலியின் நிலை

**ரிக்கார்டோ பிரெஞ்ச் – டேவிஸ்**

சர்வதேச படுகடன்சுமை சமீப வருடங்களில் உலகப் பொருளாதார அடிவானத்தில் மிக இக்கட்டான பிரச்சினைகளில் ஒன்றாகத் தொடர்ந்து இருந்து வந்துள்ளது: 1983 ம் ஆண்டளவில், பெருமளவில் கடன் வாங்கும் நாடுகள் மிக நெருக்கடியான விகிதாசாரங்களை அடையத் தொடங்கியதற்குப் பின் ஆகக் கூடிய அளவு கடன் பட்டுள்ள நாடுகளுக்கு உதவி செய்ய அனைத்துலக பொருளாதார நிலைமையில் எந்தக் குறிப்பிடத்தக்க மாற்றங்களும் நேரவில்லை. 1970 கள் முழுதும் எண்ணெய் இறக்குமதி செய்யும் வளர்முக நாடுகள் மீளவரும் உலகளாவிய பின்னிடைவுகளாலும், வர்த்தக மாற்று வீதங்கள் தொடர்ந்து மோசமடைந்து வந்ததாலும் ஏற்பட்ட தங்களுடைய சீர்கெட்டுவந்த வெளிநாட்டுச் சூழலைச் சீர்செய்யப் பெரும் சிரம சாத்தியமான முயற்சிகளைச் செய்தன, இந்நாடுகளின் வர்த்தக மாற்று வீதங்கள் தொடர்ந்து மோசமடைந்ததன் விளைவாக 1980 களில் இவற்றின் கொடுப்பனவுப் பற்றுக் குறைகள் அதிகரித்தன. குறுங்கால, நடுக்கால மூலதனப் பாய்வுகளே இந்தப் பற்றுக்குறைகளுக்கு நிதியளிக்கும் பிரதான வழியாகின: இந்தக் கடன்பட்ட நாடுகளுக்கு மிகச் சமீபத்தில் ஏற்பட்ட கடனடைப்புக் கஷ்டங்களுக்கு அவற்றின் வெளிநாட்டுக் கடன்களின் முதிர்வு ஒழுங்கு சுருங்கியதே காரணம்.

உத்தியோக பூர்வமான அபிவிருத்தி உதவியின் மட்டம் மோசமடைந்து வந்தது: இவ்வுதவி சென்மதி நிலுவைப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்குப் பொதுவாகக் கிடைக்கவில்லை. வளர்முக நாடுகளின் பற்றுக் குறைகளில் பெரும் பகுதிக்கு நிதியளிக்கும் பணி வர்த்தக வங்கிகளிடம் அவற்றின் சொந்தக் கொடுகடன் பொறுப்பின் கீழ்விடப்பட்டது: இந்த வங்கிகள் இலாபமடைவதற்கு இந்நிலைமையில் ஒரு சந்தர்ப்பத்தைக் கண்டன. புதிதாக உபரி நிதிகளைக் கண்ட "ஒபெக்" எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் சேமிப்புகளுக்கும் அல்லது வங்கி வைப்புகளுக்கும் பற்றுக்குறை நாடுகளால் விடுக்கப்பட்ட கடன்கோரிக்கைக்குமிடையே செயலாற்ற வர்த்தக வங்கிகளே விரைந்தன. பெருமளவில் கடன்பட்ட நாடுகள் இந்தக் கடன் வழங்கல் சலுகைகளைப் பூரணமாகப் பயன்படுத்தின. உலக வங்கித் தொழில் முறையின் பிரதான பண-மைய நிறுவனங்களாகச் செயலாற்றிய நியூயார்க் வங்கிகளிடமிருந்தே அக்கடனளிப்பு யோசனைகள் பிறந்தன. உலகின் வங்கித் தொழில் சமூகம் "கொடுகடன் வெறியாட்டம்" என வர்ணிக்கப்பட்டதற்குள் பிரவேசித்தது. 1982 ம் ஆண்டு மிக நொய்ம்மையான ஒரு நிலையிலிருந்த சர்வதேச படுகடனுடன் ஆரம்பமானது. இந்நிலைமை 1983 ம் ஆண்டில் மோசமடைந்தது: 1984 ம் ஆண்டளவில் நெருக்கடி கட்டத்தை அடைந்துவிட்டது.

இந்தப் படுகடன்பிரச்சினை கொடுகடனளிகள் படுகடனளிகள் ஆகிய இரு சாராருக்குமிடையே பெருங் கவலையை உண்டாக்கியிருந்தது. கொடுகடன் வங்கிகள் தங்களுடைய நிதிகளை மீட்க, எச்சரிக்கை செய்யும் ஒரு கொள்கையைப் பின்பற்றி வந்துள்ளன; இதேவேளை படுகடனளி நாடுகளில் பெரும்பாலானவை கடன் கொடுப்பனவுகளுக்குப் புதிய கால அட்டவணையொன்றைப் பெற முயன்றுள்ளன; ஒரு சில கடனளி நாடுகள் கொடுப்பனவை நிறுத்தி வைக்க முயற்சி செய்துள்ளன. ஆனால், இத்தகைய நாடுகள், மேலும் சர்வதேச நிதியளிப்பும் ரொக்கப் பணப்புரள்வுமில்லாவிட்டால், தங்களுடைய பொருளாதாரங்களின் உடனடிப் பிரச்சினைகள் மேலும் தீவிரமடையலாமென்பதைக் காண்கின்றன.

மிகுந்த கரிசனைக்குரிய விஷயம் யாதெனில், 1985 ஜூலை மாதமுடிவில் இலத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த கடன்பட்ட நாடான பேரு அதன் படுகடன் சம்பந்தமாக மேற்கொண்ட நிலையாகும் - அந்நாடு தனது வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவை ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் 10 சதவிகிதத்துக்குக் கட்டுப்படுத்திவிட்டது. கடந்த வருடம் ஆகஸ்ட்மாதத்தில் கியூபா அரசாங்கம் ஹவானாவில் ஏற்பாடு செய்த பட்டிமன்றமும் அக்கறைக்குரிய விஷயமாகும். இதில் கடன்பட்டநாடுகளைச் சேர்ந்த 1,000 க்கு மேற்பட்ட பிரபலஸ்தர்கள் கலந்து கொண்டனர். அப்பிராந்தியத்திலுள்ள படுகடன்களை இரத்துச் செய்துவிடுவதுபற்றி ஜனாதிபதி காஸ்ட்ரோ வெளியிட்ட கருத்துக்களைச் சில பிரிவினர் ஆர்ப்பரித்து வரவேற்றனர். இந்தச் சம்பவங்கள் ஃபிர்டவுஸ் ஜாப்வாலாவின் கட்டுரையில் சீர்தூக்கி ஆராயப்படுகின்றன. அடுத்துவரும் பக்கங்களில் சர்வதேச படுகடன் பிரச்சினையையொட்டிய மற்றும் அடிப்படை விவகாரங்கள் "சர்வதேச படுகடனும் நிதியும்" என்ற கருத்துக்கோவையில் ஆராயப்படுகின்றன.

மிகப் பெரும்பாலான இலத்தீன் அமெரிக்க நாடுகளை வெளிநாட்டுப் படுகடன்களின் பெரும் பிரச்சினை எதிர்நோக்குகின்றது. இந்த தாக்கம் கடன்பட்ட நாடுகளின் பொருளாதாரங்கள் மீது ஏற்படுத்தும் விளைவுகள் வேறுபடுகின்றன. விளைவுகளின் வேறுபாடு குறித்த நாடொன்றின் படுகடன் நிலையில் ஏற்படும் அதிகரிப்பின் பரிமாணத்தையும் துரிதத்தையும், அத்துடன் அபிவிருத்திக்கும் கடன் வாங்குவதற்கும் அந்நாடு மேற்கொள்ளும் உபாயத்தையும் பொறுத்திருக்கிறது. உண்மையில் இந்தக் கடைசி நடவடிக்கைதான் (கடன் வாங்குதல்) அபிவிருத்தி மட்டத்தை நிர்ணயிக்கிறது. இதிலேயே வெளிநாட்டுப் படுகடன் மீதான நெருக்கடி ஒவ்வொரு நாட்டையும் தாக்குகிறது. சில நாடுகளில், கடந்த தசாப்தத்திலே சிலி நாட்டில் ஏற்பட்டது போல், பொருளாதாரம் ஒன்றில் தேங்கிவிட்டது அல்லது பின்வாங்கிவிட்டது. இதே வேளை மற்றும் நாடுகளில், பொருளாதாரம் சர்வதேச சந்தைகளில் அந்நாடுகளுக்கு அப்போது நிறையக் கிடைத்த கொடுகடனின் அடிப்படையில் உரத்த பலத்துடன் வளர்ந்தது.

ஏற்றுமதிச் சம்பாத்தியங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும்,. கைத்தொழில்மயமான நாடுகளிலுள்ள சந்தைகளில் இடம் பிடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் பிரச்சினைகளும் சேர்ந்து கடந்த 50 வருடங்களில் இலத்தீன் அமெரிக்காவிலுள்ள பொருளாதாரங்களுக்கு மிக உக்கிரமான வெளியதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

### வரலாறு

1973 ம் ஆண்டுக்கும் 1982 ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் சிலி நாட்டின் பொருளாதாரம் மிகக் குறைவான உற்பத்தியளவினுல் பாதிப்புற்றது. அதேசமயத்தில், செல்வமும் வருமானமும் சில இடங்களில் குவிந்திருந்த காட்சிகளேயும் காணக்கூடியதாயிருந்தது. இதற்கும் அக்காலத்தில் விதிக்கப்பட்ட வெளிநாட்டு, நிதிசார் கொள்கைகளுக்கும் குறிப்பிடத்தக்க தொடர்புண்டு. இறக்குமதிகளும் நிதி முறையும் மனம் போன வாறு தாராளமாக்கப்பட்டன. கொள்கை இவ்விதம் நிர்வகிக்கப்பட்டதன் விளைவாக, வெளிநாட்டு வங்கிகளிடம் கடன்படும் நிலைமை ஏற்பட்டது. இப்படு கடன்கள் 1977 ம் ஆண்டிலிருந்து 1981 ம் ஆண்டுவரை ஆண்டொன்றுக்குச் சுமார் 60 சதவிகிதமாகத் துரித வேகத்தில் அதிகரித்துவந்தன. படுகடன்களின் இந்த மித மிஞ்சிய அதிகரிப்பு உள்நாட்டில் மூலதன உருவாக்கத்துக்கு உதவுவதற்குப் பதிலாக அதற்கு ஊக்கத்தைக் குறைத்துவிட்டது. இதற்குப் பல வலுவான காரணங்களிருந்தன:

★ இறக்குமதிகள், குறிப்பாக நுகர் பொருள்களின் இறக்குமதி துரிதமாகவும் பாகுபாடின்றியும் தாராளமாக்கப்பட்டமை.

★ நாணய மாற்று வீதங்களில் ஏற்பட்ட பின்னிடைவு (மதிப்பேற்றம்) (துரிதமாகப் பணவீக்கம் அதிகரித்து வரும் ஒரு நிலைமையில் அரசாங்கம் பணவீக்க வேகத்தை விட குறைவான கதியில் அமெரிக்க டொலருக்கெதிராக அதன் நாணயத்தின் மதிப்பைக் குறைக்கின்றது. இதனுல் அமெரிக்க டொலர்கள் மலிவாகி, அதன் விளைவாக இறக்குமதிகள் உள்நாட்டுப் பொருள்களுடன் ஒப்பிடுகையில் மலிவாயிருக்கின்றன.)

★ உள்நாட்டுச் சந்தையில் உண்மையான வட்டிவிகிதங்கள் தொடர்ந்து விடாப்பிடியாக உயர்வாகவே இருந்து வருகின்றன.

★ சிலிநாட்டு நிதிகள், வெளிநாட்டு நிதிகள் ஆகியவற்றின் கன அளவை நிர்ணயிப்பதிலும் அவற்றைப் பிரயோகிப்பதிலும் ''சந்தை''க்கு வழங்கப்பட்ட பரிபூரண சுதந்திரம்; அத்துடன், உற்பத்திக்கு உதவும் முதலீடுகளைச் செய்வதற்காக, ஒப்பியல் ரீதியாகச் சந்தை அனுகூலங்களை அல்லது வாய்ப்புகளைக் கண்டறிவதிலுள்ள கஷ்டங்கள்.

இதெல்லாம் தீவிர வாதத்தைச் சிறப்பியல்பாகக் கொண்ட ஒரு மாதிரி உருவைப் பிரயோகிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட சந்தை நிலைமைகளில் நடைபெற்றன. அந்த மாதிரி உருவை இத்தனை வருடங்கள்வரை வைத்திருப்பதைச் சாத்தியமாக்கிய எதேச் சாதிகார சூழல் இங்கு நிலவியது.

### தலைவிதியும் படுகடனும்

1982 ம் ஆண்டில் சிலி நாட்டின் பொருளாதாரம் மிகக் கூடுமையான மறுசீரமைப்புக்கு உட்படுத்தப்பட்டது. அதனுல் மொத்தத் தேசிய உற்பத்தியில் 14 சதவிகித வீழ்ச்சி ஏற்பட்டது. அதிலிருந்து நிலைமை நெருக்கடியாக இருந்து வந்ததுடன் வெளிநாட்டுப் படுகடன் பிரச்சினையுடன் இணைக்கப்பட்ட சம்பவங்களின் போக்கிலும் தங்கியிருந்தது.

1977 ம் ஆண்டிலிருந்து சிலியின் வெளிநாட்டு வர்த்தகத் துறை நடப்புக்கணக்கில் உயர்ந்ததும் அதிகரித்து வருவதுமான பற்றுக் குறையைக் காட்டிய போதிலும், பெருமளவில் உட்பாய்ந்த நிகர மூலதனத்தால் 1981 ம் ஆண்டுவரை மதிப்பிடத்தக்க வெளிநாட்டு நாணயம் குவிந்திருந்தது. மிகப் பெரிய மூலதன உட்பாய்வு வெளிநாட்டு வர்த்தக விரிவால், குறிப்பாக அத்தியாவசியமற்ற நுகர் பொருள்களின் இறக்குமதிகளால் தூண்டப்பட்டது. மூலதன அசைவு எந்த அரசாங்க உத்தரவாதமுமின்றித் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட வங்கிக் கொடுகடன்களில் திகிலூட்டும் அளவுக்குச் செறிந்திருந்தது. மொத்தப் படுகடனடைப்பு 1981 ம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள், சேவைகளில் 70 சதவிகிதத்தையும் 1982 ம் ஆண்டில் 88 சதவிகிதத்தையும் அடைந்தது; இது 1970 - 1974 ம் ஆண்டுகளில் கடனடைப்புக்கான குணகத்தைப் போல் மூன்று மடங்காகும்.

1981 ம் ஆண்டில் வெளிநாட்டுப் படுகடனில் 80 சதவிகிதம் வங்கிகளுக்கும், நிதி நிறுவனங்களுக்கும் கொடுபட வேண்டியிருந்தது. 1974 ம் ஆண்டில் அவற்றின் பங்கு 19 சதவிகிதமாக மட்டுமே இருந்தது. பெற்ருேலியம் ஏற்றுமதி செய்யாத வளர்முக நாடுகளுக்கிடையே சிலி சர்வதேச தனியார் மூலதனச் சந்தைகளில் பெரும் படுகடனுளிகளில் ஒன்ருகிவிட்டது. 1976 ம் ஆண்டில் அது பதினேராவது இடத்திலிருந்தது. ஆனுல், 1981 ம் ஆண்டில் ஐந்தாவது இடத்தை அடைந்து விட்டது. கூட்டுமொத்த இலத்தீன் அமெரிக்க அமைவில், சிலியின் வங்கிக் கடன்கள், நபரொருவருக்கான பிரதேச சராசரித் தொகையான 600 அமெரிக்க டொலர்களுடனும் பிரேஸிலுக்கான சராசரித் தொகையான 500 அமெரிக்க டொலர்களுடனும் ஒப்பிடுகையில், நபரொருவருக்கு 1,000 அமெரிக்க டொலர்களை மிஞ்சிவிட்டது. மறுபக்கத்தில், சிலியின் வங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்கள், 1977 ம் ஆண்டு முதல் 1981 ம் ஆண்டுவரை வளர்முக நாடுகளுக்கான கூட்டுமொத்தச் சராசரியான 28 சதவிகிதத்துடன் ஒப்பிடுகையில், ஆண்டுக்கு 57 சதவிகிதமாக வளர்ந்தன. இந் நிலைமைக்குரிய பொறுப்பை படுகடனாளிகள், கொடுகடனாளிகள் ஆகிய இரு சாரார் மீதும் சுமத்த வேண்டும். கொடுகடனாளிகள் அதிக கடன் வசதிகளை ஏற்றுக்கொண்டு, தங்கள் கடன்பட்ட நிலையைத் தாராளமாக்கும்படி படுகடனாளி நாடுகளை அடிக்கடி நெருக்கின.

1977 ம் ஆண்டிலிருந்து 1981 ம் ஆண்டுவரை நடைபெற்றதைப் போல வெளிநாட்டுக் கடன்களைப் பிரமாண்டமான அள்வில் பெறும் இத்தகைய ஒரு போக்கு, தேசியப் பொருளாதாரத்தின் பல துறைகளில் குறிப்பிடத்தக்க விளைவுகளை உண்டாக்குகிறது. சிலி நாட்டைப் பொறுத்தவரை இவ்விளைவுகள் தீவிரமாயிருந்தன. அது அசாதாரண அளவில் செல்வக்குவிப்புக்கு உதவியது; சேமிப்பு முறை, முதலீட்டு முறை ஆகியவற்றின் செயற்பாட்டை மாற்றியது; நாணய, நாணயமாற்றுக் கொள்கைகளில் திட்டமான விளைவுகளை ஏற்படுத்தியது.

வெளிநாட்டுக் கடன் விரிவடைந்ததால் ஆரம்பத்தில் ஏற்பட்ட தாக்கம் வெளிநாட்டு நாணயம் கிடைக்கும் வசதியை அதிகரித்தது. உண்மையில், 1981 ம் ஆண்டுவரை மூலதனத்தின் நிகர உட்பாய்வு தேசியப் பொருளாதாரத்தினால் உட்கிரகிக்கப்படுவதற்கு மேல் அதிகமாயிருந்தது.

நடப்புக் கணக்கிலிருந்த பற்றாக்குறை பெருந் தொகைக்களாக இடையறாது வளர்ந்தது. 1980ம் ஆண்டில் வெளிநாட்டு மூலதன உபயோகம் மொத்தத் தேசிய உற்பத்தியில் 9 சதவிகிதத்துக்குச் சமமான ஒரு தொகையை எட்டியது. இதனுடன் ஒப்பிடுகையில் இலத்தீன் அமெரிக்காவுக்கான சராசரித் தொகை மொத்தத் தேசிய உற்பத்தியின் 5 சதவிகிதமாகும். நிலைமை இப்படியிருக்க, கடன் வாங்கும் தனியாருக்குப் பாய்ந்த மூலதனம் இதைவிட துரிதமான விகிதத்தில் வளர்ந்தது. இதன் விளைவாக ஏற்பட்ட உபரித் தொகை (பெறப்பட்ட தொகைகளுக்கும் செலவிடப்பட்ட தொகைகளுக்குமிடையேயுள்ள வித்தியாசம்) 1980 ம் ஆண்டுவரை பதிவாகி வந்த வெளிநாட்டு ஒதுக்கு நிதிகள் அதிகரிப்பதற்கு அடிகோலியது.

இந்த வெளிநாட்டு ஒதுக்கு நிதிகளின் பெருக்கம் நாணய, நாணயமாற்றுக் கொள்கையின் நிர்வகிப்பில் கணிசமான விளைவுகளை ஏற்படுத்தியது. இதே சமயத்தில் நடப்புக்கணக்கு மீதான பற்றாக்குறை திடுக்கிடும் வேகத்தில் அதிகரித்தது. அதேசமயத்தில், இறக்குமதிகள் மீதான அதிகரித்த செலவுகளுக்குப் பணங் கொடுப்பதற்காக உபயோகிப்பதற்கும், வெளிநாட்டு நாணய ஒதுக்கு நிதிகளை அதிகரிப்பதற்கும் சென்ற தொகைகளால் ஏற்பட்ட பெருமளவிலான மூலதனப் பெயர்வுகளின் விளைவாக, பொருளாதாரத்தில் கிடைக்கும் சகல கொடுகடன்களிலும் பெரும் பங்கு வெளிநாட்டு நிதிகளிலேயே உருப்பெற்றது.

உலகப் பொருளாதாரத்தில் நிலவிய நிலைமைகளும் உள்நாட்டுச் சந்தையும் கடன் சுமை அதிகரிக்கும் போக்குக்கு உதவின. இது முறையே சிலியின் வெளிநாட்டு வர்த்தகம் அதிக அளவில் பாதிக்கப்படுவதற்கு அடிகோலியது. உண்மையான நிகரப் படுகடனின் நடக்கை, மேலும் கொடுகடன் இலகுவாகப் பெறுவதற்கிருந்த வசதி, சர்வதேச சந்தையில் நிலவிய உண்மையான வட்டியின் குறைந்த விகிதங்கள் ஆகியன 1970 களிலும் 1980 களின் தொடக்கத்திலும் பல நாடுகளிலும் எல்லாம் சரியாயிருக்கிறதென்ற சுயதிருப்தி மனநிலையைத் தூண்டிவிட்டன. படுகடன்களில் பெரும் பகுதி தனியாரால் பெறப்பட்டதால், அது வினைத் திறமையுடன் உபயோகிக்கப்படும் என்று சிலிநாட்டு உத்தியோகபூர்வ வட்டாரங்களில் நிலவிய நம்பிக்கை இச்சுயதிருப்தி மனோபாவத்தைப் பலப்படுத்தியது. ''சந்தை கூடும் இடத்தின் மந்திர சக்தி'' காரியங்களைச் சரியாகக் கவனிக்கும் என்று எங்கும் நம்பப்பட்டது. இதன்விளைவாக, சிலியின் பொருளாதாரம் நிதி மூலதனத்தின் பிரமாண்டமான உட்பாய்வை அதிக அளவில் உபயோகிக்கப் பழகிக் கொண்டது.

இதற்கிடையில், உற்பத்தித் துறையில் நடந்து கொண்டிருந்தவை உத்தியோக பூர்வமாக எண்ணப்பட்டதற்கு நேர்மாறாக இருந்தன. உண்மையில், சேமிப்பு, முதலீட்டு விகிதங்கள் 1960 களில் அடையப்பட்டதைவிட குறைவாயிருப்பது தெளிவாகத் தெரிந்தது; நிலையான மூலதன உருவாக்கத்தின் மொத்த விகிதம் 1974 ம் ஆண்டிலிருந்து 1982 ம் ஆண்டுவரை மொத்தத் தேசிய உற்பத்தியில் சராசரியாக 15.5 சதவிகிதத்தை மட்டுமே அடைந்தது; சிறந்த ஆண்டில் (1981 ம் வருடம்) அது 1960 களில் பதிவான சராசரியான 20.2 சதவிகிதத்துக்கு மேல் உயரத் தவறிவிட்டது. நிதிகளில் அதிகரித்த பங்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் நுகர்வுக்குச் சென்றது. இதனால் சிலிநாட்டுப் பொருள்களின் மீதான செலவுகளும் உள்நாட்டுச் சேமிப்புகளும் நின்றுவிட்டன. இயற்கை மூலவளங்களை உபயோகிப்பதிலும் சுகபோகப் பெருவாழ்வுக்கான ஆடம்பர வசதிகளைக் கொண்ட கட்டடங்களை நிர்மாணிப்பதிலும் தீவிரமாயிருந்த சில துறைகளைத்தவிர மற்றெல்லாத் துறைகளிலும் ''ஒப்புமுறை அனுகூலங்களை''க் கண்டறிவதில் முதலீடு செய்வோர் கடுங் கஷ்டத்தை எதிர்நோக்கினர்.

1981 ம் ஆண்டில் சர்வதேச நிதிப்பிரச்சினைகள் எழுந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது, வர்த்தகக் கணக்கின் மீதான பற்றுக்குறை மொத்தத் தேசிய உற்பத்தியில் 11 சதவிகிதச் சொச்சத்துக்கும், நடப்புக் கணக்கின் மீதான பற்றுக்குறை 21 சதவிகிதத்துக்கும் உயர்ந்து விட்டன. அதன் விளைவாக, வெளிநாட்டு வர்த்தகத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்க வேண்டிய தேவை தவிர்க்க முடியாததாயிருந்த ஒரு சமயத்தில், சர்வதேச நிதி, வர்த்தக நிலைமை சீர்கேடடைந்தது. செம்பின் (சிலியின் ஏற்றுமதிகளில் பாதிக்குப் பொறுப்பாயிருக்கும் பொருள்) விலை மோசமாகக் குறைந்து, உள்நாட்டு நிலைமையைச் சீர்செய்யப் புதிய நிதிகளைக் காணவேண்டிய அவசியம் மிக அதிகமாயிருந்த அதே சமயத்தில் வெளிநாட்டுக் கொடுகடன்களைப் பெறுவதில் சிலிக்குக் கஷ்டங்கள் தோன்றின.

டொலர் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திவிடுமென்ற நம்பிக்கையில் அரசாங்கம் பொருளாதார ஒழுங்கமைப்புக்குரிய சகல சாதனங்களையும் ஏற்பாடுகளையும் அகற்றி விட்டது. உற்பத்திக்குரிய இயந்திர சாதனங்கள் வலுவற்று, மிதமிஞ்சிய கடன் பளுவில் ஆழ்ந்து விட்டன. அதன் விளைவாக, 1980 ம் ஆண்டில் ஏற்பட்ட வெளியதிர்ச்சியின் விளைவுகள் பொருளாதாரத்துக்குள்ளே பலமடங்கு பெருகின; 1982 ம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தி 14 சதவிகிதத்துக்கு வீழ்ச்சியுற்றது.

நிதிச் சந்தைகளுக்குள் நுழைவது சிலிக்கு அதிக கஷ்டமாயிருந்த அதே சமயத்தில், ஆரம்பத்திலே அதிக அளவிலிருந்த அதன் வெளிநாட்டு ஒதுக்கு நிதிகள் துரிதமாக வீழ்ச்சியுறத் தொடங்கின. வெளிநாட்டுப் படுகடன்களுக்கு மீண்டும் கால அட்டவணையொன்று தயாரிக்க வேண்டிய அவசியமெதுவுமில்லையென்று திரும்பத் திரும்ப அறிவிக்கப்பட்ட போதிலும், நீண்ட பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்குறிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. படுகடன்களில் பெரும்பகுதி தனியார்துறையால் பெறப்பட்டு, அது சம்பந்தமாக எந்த அரசாங்க உத்தரவாதமும் இல்லாதிருந்த போதிலும், அவ்விஷயமாக மீண்டும் கால அட்டவணை தயாரிப்பதற்கான பேச்சுவார்த்தைகளை சிலி அரசாங்கமே நடத்தி முடித்தது.

மீண்டும் கால அட்டவணை தயாரிப்பது சம்பந்தமாகக் கடந்த மூன்று வருடங்களில் பெரும்பாலான விஷயங்களில் செய்யப்பட்டவாறு, வழக்கம் போல, இப்பேச்சுவார்த்தைகளுக்கு முன்பு சர்வதேச நாணய நிதியத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. நூற்றுக்கணக்கான கொடுகடன் வங்கிகளுக்குப் பிரதிநிதித்துவம் வகித்த ஒரு கமிட்டியுடன் ஒப்புக் கொள்ளப்பட்ட காலக்கெடு, வட்டி பற்றிய நிபந்தனைகள் ஆர்ஜென்டினா, பிரேஸில், மெக்ஸிகோ ஆகிய நாடுகளுக்கு வழங்கப்பட்டவை போன்றே இருந்தன. அப்பொழுது, வெளித் தோற்றத்துக்கு, சிலி பெற்ற பெறுபேறுகளில் எந்தக் கணிசமான வித்தியாசமுமில்லை. எனினும், பல்வேறு கடன் விவகாரங்களில் பெறப்பட்ட நிபந்தனைகளின் இயல்பொப்புமை, சிலியில் படுகடன்களில் பெரும்பகுதி ஓர் அரசாங்க உத்தரவாதத்தினுள் உள்ளடக்கப்படவில்லையென்ற உண்மைக்கு மாறாக இருக்கிறது. மீண்டும் கால அட்டவணை தயாரிப்பது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் இக் குறிப்பிட்ட அம்சம் ஒரு முக்கிய இடம் பெற்றிருக்க வேண்டும். "மறு கால அட்டவணையில் அடங்கியுள்ள காலத்தில் தனியார்துறை படுகடனாளிகள் தங்களுடைய படுகடன்களைப் படிப்படியாகக் கொடுத்துத் தீர்த்துவிடக் கூடிய நிலைமையில் இல்லாவிட்டால்" என்பதைக் கவனிக்கிடத்து, இந்த அம்சம் பேச்சுவார்த்தைகளில் முக்கியத்துவம் பெற்றிருக்கும். உண்மையென்னவென்றால், முன்பு உள்ளடக்கப்படாத சிலியின் நிதி முயற்சிகள் மீதான படுகடன் சம்பந்தமான 1983 - 1984 ம் வருட கொடுப்பனவுகளை உள்ளடக்குவதற்காக சிலி அரசாங்கம் ஓர் உத்தரவாதத்தை வழங்கியது. எனினும், மற்றும் நாடுகளைவிட குறிப்பிடத்தக்கதாக அதிக அனுகூலமான நிபந்தனைகளை இவ்விதம் பெறவில்லை. இதிலிருந்து மேலான நிபந்தனைகளைப் பெற சில கையிலிருந்த துருப்புச் சீட்டு வீசப்பட்டுவிட்டதென ஒருவர் அநுமானித்துக் கொள்ளலாம்.

கடன்களை அடைக்க மீண்டும் கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் சிலியில் கடன் சுமையின் மட்டம் எவ்வளவோ பாரதூரமானதாயிருப்பதால், வட்டி கொடுப்பனவும் கடனழிவுக் கொடுப்பனவும் 1983 ம் ஆண்டிலும் 1984 ம் ஆண்டிலும் மொத்தத் தேசிய உற்பத்தியில் சுமார் 12 சதவிகிதத்தை உறிஞ்சின. மேலும், கடனழிவுக் கொடுப்பனவுகள் 1985 ம் ஆண்டில் விகித சமமற்ற முறையில் உயரவிருப்பதால், பிரச்சினை மோசமடையுமென்றே தோன்றுகிறது. 1985 - 1986 ஆகிய இருவருட காலத்துக்கு, கடனழிவுக் கொடுப்பனவுகள், 1983 - 1984 ஆகிய வருடங்களுக்கான மறுகால அட்டவணையில்லாதிருந்தால் 50 சதவிகிதம் அதிகமாயிருந்திருக்கும். இந்த அதிகரிப்புக்கு 1979 ம் ஆண்டிலிருந்து 1981 ஆண்டு வரை உபயோகிக்கப்பட்ட கொடுகடன்களே பிரதான காரணமாகும். மேலும், 1984 ம் ஆண்டு முடிவில் நிலவும் நிலைமைகள் தொடர்ந்து இருந்துவருமானால், அடுத்த மூன்று வருட காலத்துக்குக் குறிக்கப்பட்டுள்ள வட்டி கொடுப்பனவுகள் மொத்தத் தேசிய உற்பத்தியில் சுமார் 8 சதவிகிதமாயிருக்கும். 1983 ம் ஆண்டு மத்தியில் தயாரிக்கப்பட்ட மறுகால அட்டவணை தற்போதைய பொருளாதாரக் கொள்கையால் உண்டாக்கப்பட்ட பிரச்சினையில் ஒரு பகுதியை மட்டுமே சமாளிக்கக் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயுள்ளது. சர்வதேச நிதிச் சந்தைகளில் ஏற்பட்டுள்ள சிர்கேட்டுடன் சேர்ந்து, அது கடனடைப்பின் பரிமாணம் தோற்றுவித்துள்ள பிரச்சினையைத் தீர்க்கவில்லை. இந்தக் கடனடைப்பு 1985 ம் ஆண்டிலிருந்து சிலியின் பொருளாதாரத்தை நிரந்தரமாக நிச்சயமற்ற நிலைமையிலும், அவசரமாகக் கவனிக்கப்படவேண்டிய பெரிய சமூகப் பிரச்சினைகள், உற்பத்தி ஆகியவற்றின் செலவில் நிதிப்பிரச்சினைகளின் ஆதிக்கத்திலும் வைத்திருக்கும்.

நோக்கு

எதிர்வரும் வருடங்களுக்கான வாய்ப்புகள் எதிர்மறையாகவே உள்ளன. பொதுவாக வளர்முக நாடுகளின் விஷயத்தில் நடப்பதைப்போல, சிலி நாடு நிதிகளின் எதிர்மறையான மாற்றமொன்றை அனுபவிக்குமென்று இப்போது கிடைக்கும் மதிப்பீடுகள் கூறுகின்றன. அதாவது, நிகரக் கொடுகடன்கள் வட்டி கொடுப்பனவுகளைவிட குறைவாயிருக்கும். "கடன் சக்கரம்" சாதாரணமாகச் செயற்படும் நிலைமைகளில், கடன்பட்ட நாடுகள் தாங்களுடைய நிகரக் கொடுகடன்கள் தங்களுடைய வட்டி கொடுப்பனவுகளைவிட குறைவாயிருக்கும் ஒரு நிலைமையைக்கண்டு, படுகடனின் கன அளவைக் குறைப்பதன் மூலம் நிலைமையைச் சீர்செய்ய முயல்கின்றன.

எனினும், இவ்விஷயத்தில், நிலைமை அசாதாரணமானதாயிருக்கிறது. ஏனென்றால், கொடுகடன் வழங்கலில் செங்குத்தான வீழ்ச்சி ஏற்பட்டதனுலும் வட்டி விகிதத்தில் எதிர்பாராத அதிகரிப்பு ஏற்பட்டதாலுமே நிதிகளின் எதிர்மறையான பாய்வு நடைபெற்றது. மாற்றம் திடீரென ஏற்பட்டதாலும் அத்துடன் அது எதிர்பாராத வகையில் நடைபெற்றதாலும் எதிர்மாறுன பலன் ஏற்பட்டது. ஏனென்றால், அதன் விளைவாகக் கடன்பட்ட நாடுகளில் பொருளாதார முயற்சிகளிலும் வேலைவாய்ப்புகளிலும் முதலீடுகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. எதிர்காலம் எப்படியிருக்குமென்றல், வெளிநாட்டுக் கொடுகடன்களுக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுவதுடன் நடுக்காலத்தில் வளர்ச்சிக்குரிய ஆற்றலும் வீழ்ச்சியும்.

வெளிநாட்டுப் படுகடன் சம்பந்தமாக சிலியை எதிர்நோக்கும் பெரும் பிரச்சினையைத் தீர்க்க, உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். உள்நாட்டுச் சந்தை மீண்டும் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்வதுடன் அதற்குப் புத்துயிரும் ஊட்டப்பட வேண்டும்; செய்யப்படுவதில் பெரும்பகுதி சிலியின் சரக்காக இருக்க வேண்டும்; அதாவது, செய்யப்படுவதில் தேசிய முயற்சிகள் பெரும் பங்கு வகிக்க வேண்டும்; அத்துடன், பொருள்களைத் தெரிவு செய்து, இறக்குமதி செய்யும் ஒரு கொள்கையும் வகுக்கப்பட வேண்டிய தவசியமாகும். இதனுடன், ஏற்றுமதிகளைப் பெருக்க, ஊக்கத்துடன் முயற்சிகள் கைக்கொள்ளப்படவேண்டும்; யதார்த்த நிலைக்குப் பொருத்தமான ஒரு நாணய மாற்றுக் கொள்கை, வகுக்கப்படுவதுடன், பாரம்பரிய மற்ற பொருள்களுக்குப் புதிய சந்தைகளும் தேடப்பட வேண்டும். இத்தகைய முயற்சிகளின் வெற்றி ஒரு புறமிருக்க, கடனடைப்பு இன்னும் ஒரு மிதமிஞ்சிய சுமையாகவே இருந்துவரும். இத்தகைய ஒரு கடன் சுமையால் நெருக்கப்படும் பொருளாதாரம் இறுதியில் அபிவிருத்தியடைய முடியாது. ஆதலால், முடிவில் கடன்களை அடைக்கச் சக்தியற்றதாகிவிடும்.

இதன்விளைவாக, மொத்தக் கடன் நிலுவைகள் சம்பந்தமாக (சில இயற்கையான விதிவிலக்குகளுடன்) புதிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, புதிய வட்டி விகிதங்கள் பிரயோகிக்கப்படுவதுடன் கொடுப்பனவுகளின் பெரும்பகுதிக்கு மறு நிதியளிப்பும் செய்யப்பட வேண்டும்.

(24 - ம் பக்கத் தொடர்ச்சி)

மூலதன விரிவாக்கம் என்னும் தர்க்கநியாயம் ஆபிரிக்காவில் அந்நாட்டைக் கொடிய வறுமையின் விளிம்புக்குத் தள்ளி, நசுக்கி வருகிறது; விளிம்புக்குத் தள்ளல் என்னும் தர்க்க நியாயம் அழித்தொழிக்கும் இறுதி நோக்கத்தை மறைத்துச் சொல்கின்றது; கருத்தியல் (சித்தாந்தம்) மட்டத்தில் அந்த அழித்தொழிக்கும் செயலை நியாயப்படுத்தவும் அதற்குச் சட்டவலு அளிக்கவும் உபயோகிக்கப்படும் ஆயுதம் என்னும் தர்க்க நியாயம் - ஆகிய இவையெல்லாம் கைகோத்துச் செல்கின்றன. ஐரோப்பாவில் இன உயர்வு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட இனப்பாகுபாடுகளின் உதயம்; குடியேறிய தொழிலாளர்களின் பிரச்சினையுடனும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் விளைவாக அதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்ட (சுயநல நோக்கங்களுக்காக மக்களின் உணர்ச்சிகளுக்குத் தூபமிடும் மேடைப் பேச்சுக்களை நிகழ்த்தும்) கொள்கைகளோடும் மட்டும் தொடர்புள்ளதாய்த் தோன்றிய ஓர் அசாதாரண உப சம்பவமல்ல; மூன்றும் உலகத்தை அழித்தொழிக்கும் கருத்துக்குச் சட்டபலமளிக்கும் தர்க்க நியாயமுமாகும்.

இதெல்லாம் வெளிப்படையாகத் தெரிகிறது. இதற்கெல்லாம்திறவு கோலாக ஒரு மூன்றும் அம்சம் விளங்குகிறது. அதுதான் யுத்தபயத்தை வலியுறுத்தி வரும் செயல். போருக்கு முற்பட்ட இச்சூழ்நிலை முழு அலுவலையும் நியாயப்படுத்த உதவுகிறது. குறுகிய காலத்தில் இதுவே நடு அரங்கில் குந்திக் கொண்டு, கண்ணேட்டத்தை இவ்வளவு இருள்மயமாக்குகிறது. இந்த அந்தகாரம் எல்லா இடங்களிலும் சூழ்ந்திருக்கிறது. எனினும், நீண்ட காலத்தில், எந்த இறுதி வெடியும் வெடிக்கவில்லையானல், இவ்வளவு அவநம்பிக்கையுற்று, மனச் சோர்வு அடைவதற்கு எக்காரணமுமில்லை. ஏனென்றல், சரித்திரம் எப்பொழுதும் இவ்வழியில்தான் சென்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்கு மணிகட்டுவது யார்?

பிர்டவுஸ் ஜாப்வாலா

இன்று இலத்தீன் அமெரிக்காவில் கொழுந்துவிட்டெரியும் பிரச்சினையாயிருப்பது, வெளிநாட்டுக் கடன் பிரச்சினையாகும். வட்டிக் கொடுப்பனவுகள் மாத்திரம் இப்பிரதேசத்திலுள்ள பல நாடுகளின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 10 சதவிகிதத்தை விழுங்கி விடுகின்றன. இது கொள்ளைகளும் சூறையாடலும் நடைபெற்ற காலங்களில் மட்டுமே மற்றும் நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட தேசிய உற்பத்தியில் ஒரு சதவிகிதமாகும். இதற்குஈடான சம்பவங்கள் சமீபகாலங்களில் நடைபெறவில்லை. ஒப்புமைகளுக்கு நாம் இலத்தீன் அமெரிக்காவில் ஐபீரிய ஆட்சி நடைபெற்ற முதலிரு நூற்றாண்டுகளுக்கும், பிளாஸி சண்டையையடுத்து வங்காளத்திலும் அவுத்திலும் பிரிட்டிஷ் ஆட்சி நடைபெற்ற அரை நூற்றாண்டுக்கும், அல்லது வெளியுலகுக்கு சீனா திறந்துவிடப்பட்டதையும் அபினியுத்தத்தையும் அடுத்துவரும் காலத்துக்கும் திரும்பிச் செல்லவேண்டும்.

கடந்த சில வருடங்களில், இப் பிராந்தியத்திலுள்ள நாடுகள், முதல் கிடக்கட்டும், படுகடன் மீதான வட்டியைச் செலுத்துவதே அதிக அளவுக்கு இயலாத காரியமாயிருக்கிறதென்பதை ஒத்துக்கொள்ளத் தொடங்கியுள்ளன. உதாரணமாக, மெக்ஸிகோவில் 1983 ம் ஆண்டிலே இறக்குமதிகள் 1982ம் வருடத்தில் இருந்த அவற்றின் மட்டத்தில் கிட்டத்தட்ட சரிபாதியாகக் குறைக்கப்பட்டன. இதனால் 1808 கோடி அமெரிக்க டொலர் மதிப்புள்ள உபரிப்பணம் நாட்டில் உண்டாக்கப்பட்டது. உண்மையில் இதெல்லாம் எவ்விதத்தும் வளர்ந்து கொண்டேவந்த படுகடன் மீதான வட்டியைச் செலுத்துவதற்காகவே இப்பணம் சேகரிக்கப்பட்டது. படுகடன் மீதான வட்டியைச் செலுத்த முடியாத நிலை தோன்றியதற்கு இரு சமீபக் காரணிகள் காரணமாகும். (உண்மையான காரணம் ஒரு புறமிருக்கட்டும். குறை அபிவிருத்தியிலும், சமமற்ற நாணய மாற்றிலும் தங்கியிருக்கிறது.) அந்தக் காரணிகள் (1) உயர் வட்டிவிகிதங்கள் (2) அபிவிருத்தியடைந்த முதலாளித்துவ நாடுகளில் (காப்பு வரிகளின் உருவத்தில்) கைக்கொள்ளப்படும் பாதுகாப்புக் கொள்கைகள்.

முதற்காரணி அதிகடொலர் கொடுப்பனவுகளைக் குறிப்பாலுணர்த்துகிறது. இரண்டாவது காரணி டொலர்களைச் சம்பாதிக்கும் சக்தி குறைந்துள்ளதைச் சூசகமாகக் காட்டுகிறது. இதனால் இலத்தீன் அமெரிக்கா கடனிறுக்கும் வகையற்று, ''திவாலாகி விட்டது'' என்று கருதிவிடலாகாது. இந்தச் சூதுவிளையாட்டின் விதிகள் அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பாவிலும் தயாரிக்கப்படுகின்றன என்று சொன்னால் போதும். அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பாவிலும் உயர்ந்துவரும் வட்டி வீதங்களும், இறக்குமதிகளுக்கு உயர் தீர்வை அறவிடும் வர்த்தகக் காப்பு முறையும் இரட்டைக் கைக்குத்துக்குத்தும் ஒரு கொள்கையாகச் சேயற்பட்டு, இலத்தீன் அமெரிக்க நாடுகளை நிரந்தரமாகக் கடன்பட்ட நாடுகளாக்கியும், அவற்றின் கடன் சுமையை அதிகரித்தும் வருகின்றன.

என்னமுயற்சிகள் செய்தபோதிலும் தங்கள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாதென்ற உணர்வு இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அதிகரித்து வருவதால், பரிகாரங்களைத் தேடும் முயற்சிகள் பொருளாதாரக் கொள்கைகளிலிருந்து அரசியல் நடவடிக்கைகளாகத் துரிதமாக மாறிவருகின்றன. ஆரம்பத்தில், இப் பிரதேசத்திலுள்ள நாடுகள் சர்வதேச நாணய நிதியம் எழுதிக் கொடுத்த பரிகார முறையை அமுல் செய்தன: அரசாங்கச் செலவுகளைக் குறைத்தல், இறக்குமதிகளை வெட்டுதல், ஏற்றுமதிகளுக்கு ஊக்கமளித்தல், சம்பள விகிதங்களை முடக்கிவைத்தல் முதலியன. அதாவது, படுகடனைக் கொடுத்துத் தீர்த்துவிடுவதற்கு ஒதுக்கப்படுவதற்காக ஒரு விசேஷ உபரிப்பணத் தொகையை உண்டாக்க அந்நாடுகள் உண்மையாகவே முயன்றன. சர்வதேச நாணய நிதியம் விதித்த இந்தக் கொள்கைகளின் விளைவாக, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதாரங்கள் பலவீனமடைந்துள்ளன; இக் கொள்கைகளை அமுல் நடத்திய அரசாங்கங்கள் பொது மக்களின் அரசியல் வெறுப்பைச் சம்பாதித்துள்ளன. இதனால் சில நாடுகளில் அங்குள்ள வர்க்கங்களுக்கிடையே ஒரு விரிவான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதாவது, தங்களுடைய பொருளாதாரங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய முதல் நடவடிக்கை, வட்டிக் கொடுப்பனவுகளில் மிச்சப்படுத்தப்படும் டொலர்களைத் தேசியப் பொருளாதாராங்களுக்கு அதிகம் பொருந்தக் கூடிய வழிகளில் உபயோகிப்பதாகும்: அடித்து வீழ்த்தப்பட்டுள்ள தேசிய உற்பத்திச் சாதனத்துக்கு வலுவூட்டுவதற்காக இச் சேமிப்பைப் பெரும்பாலும் இறக்குமதிளுக்கு உபயோகிக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. எனினும், உலக வங்கித் தொழில் முறைக்கு இவ்வளவு வட்டிப்பணம் செலுத்துவதைத் தவிர்ப்பதற்கு ஏதாவதொரு வழிமுறை வகுக்கப்படும் வரை, எடுப்பது சுலபமெனத் தோன்றும் இந்த நடவடிக்கையை எடுக்க முடியாது.

ஆகஸ்ட் 1985 ல் நடைபெற்ற பொருள் பொதிந்த இரு சம்பவங்கள் ஐரோப்பிய வட்டி வீதங்கள் என்னும் இந்த ஜீவாதாரமான விஷயத்தில் ஒரு திருப்பம் ஏற்பட்டு விட்டதெனக் கட்டியங் கூறின. முதலாவதாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரு நாட்டின் பிரகாசம் பொருந்திய புதிய நாட்சத்திரமாகத் தோன்றியுள்ள ஜனதிபதி அலன் கார்சியா பெரஸ் வெளிநாட்டுக் கடன் மீதான கொடுப்பனவுகளை ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் 10 சதவிகிதத்துக்கு வரையறுத்துள்ளார். அதே சமயத்தில் கார்சியா தமது கொள்கைகளுக்கு — ஆகக் குறைந்த சம்பளங்களை 50 சதவிகிதம் அதிகரித்தல், பெரு நாட்டு ஸோல் நாணயத்துக் கெதிரான சட்டா பேரத்தை (சாகச வியாபாரம்) எதிர்த்துப் போராடுதல் போன்றவை வெகுஜன ஆதரவைப் பலப்படுத்துவதற்காகப் பல உள்நாட்டு நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக எடுத்திருக்கிறுர். பெரு நாட்டுக் கடன் கொடுப்பனவுக்களை அதன் சம்பாத்திய சக்தியுடன் இணைத்ததன் மூலம் கார்சியா சகல கடன்பட்ட நாடுகளின் நிலையையும் முன்னணிக்குக் கொண்டுவந்திருக்கிறுர். அதே சமயத்தில், சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்த முடியாதென அவர் மறுத்துள்ளார்.

கார்சியாவின் யோசனைகள் கொடுகடன் நாடுகள் பெறும் வட்டியைப் படுகடன் நாடுகளின் சேமநலத்துடன் இணைக்கின்றன. பெருநாடு உலக வங்கித் தொழில் முறைக்குக் கூறிவருவதென்ன? "நான் சம்பாதிப்பதில் 10 சதவிகிதத்தை மட்டுமே உனக்குச் செலுத்த முடியும். நீ என்னை அதிகமாகச் சம்பாதிக்க விட்டால், நான் உனக்கு அதிகமாகச் செலுத்த முடியும்" இவ்விதமாக, ஜனதிபதி கார்ஸியா பல காரியங்களைச் சாதித்துள்ளார்:

(1) மூன்றும் உலக நாடுகளுக் கெதிரான சமமற்ற நாணய மாற்று, காப்புவரிக் கொள்கைகளை (இவை அடிப்படையில் பொருளாதாரப் பிரச்சினைகளே) பற்றிய பேச்சுவார்த்தைகளைத் தற்காலிகத்தந்திரமாக அரசியல் பேச்சுவார்த்தைகளாக மாற்றியுள்ளார். இவ்விதமாக, அமெரிக்காவும் மற்றும் அபிவிருத்தியுற்ற நாடுகளும் கொடுகடன் நாடுகளாகப் பேச்சுவார்த்தைகளுக்குள் நிர்ப்பந்தமாகத் தள்ளப்பட்டுள்ளன. அத்துடன், அந்நாடுகள் உலக வங்கித் தொழில் முறை வாயிலாகக் கடன்பட்ட நாடுகளின் விஷயங்களைத் தொடர்ந்து திரைமறைவில் செய்துவர முடியாது.

(2) பெருநாடு எதை ஏற்றுக் கொள்ளும் என்பதை அவர் நிலைநாட்டி விட்டதால், இருபக்க முறை பேச்சுவார்த்தைகளின் சாத்தியப் பாட்டைக் கைவிடுகிருர். இவ்விதமாக, அவர் இப் பிராந்தியத்திலுள்ள முப்பெரும் நாடுகளான பிரேஸிலும் மெக்ஸிகோவும் அர்ஜென்டினவும் மேற்கொண்ட, வேதனையுடன் நல்ல கொடுப்பனவு நிபந்தனைகளை வகுக்கும் பாதையைக் கைகழுவி விட்டார். இங்கு அவர் பெரிய நாடுகள், வங்கியாளர்கள், கொடுகடன் நாடுகளிடமிருந்து அரசியல் முனைப்பை எடுத்துக் கொண்டிருக்கிறுர்.

(3) அவருடைய முடிவின் விளைவு எப்படியிருந்தபோதிலும், மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் கைகளை அவர் பலப்படுத்தியுள்ளார். அந்நாடுகளின் சொந்த மக்கள் தங்களுடைய அரசாங்கங்கள் ஒருமைப்பாட்டையேனும் பிரகடனஞ் செய்யவேண்டுமென எதிர்பார்ப்பார்கள். பெரு மக்களுடன் ஒருமைப் பாட்டைத் தெரிவிப்பதென்றல், வெளிநாட்டுக் கடன் மீதான கொடுப்பனவாக ஏற்றுமதி வருமானத்தின் மீது 10 சதவிகித வரையறையை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். பெருநாடு காட்டியுள்ள உதாரணத்தைப் பின்பற்ற வேண்டாமென்று அமெரிக்காவிடமிருந்தும், அவ்வுதாரணத்தைப் பின்பற்றுமாறு அவர்களுடைய மக்களிடமிருந்தும் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் அரசாங்கங்கள்மீது நெருக்குதல் அதிகரிக்குமென்பது திண்ணம். எனவே, பெரு நாட்டைப் பின்பற்றுதல் அல்லது அமெரிக்காவைப் பின்பற்றுதல் - ஆகிய ஒரு புதிய தெரிவுரிமையை இலத்தீன் அமெரிக்க நாடுகள் பெற்றுள்ளன. எனினும், அந்நாடுகள்மீது ஏக சமயத்தில் அதிக நெருக்குதல் இருக்குமென்பது நிச்சயம்.

(4) புதிய தெரிவுரிமை (எல்லாவற்றையும் கொடுத்து விடுக) என்னும் உலக வங்கித் தொழில் முறையின் தீவிர நிலைக்கும் (ஒன்றும் கொடுக்காதீர்) என்னும் காஸ்ட்ரோ (கியூபா ஜனதிபதி) வின் யோசனைக்கும் ஓர் இடைநடுவான மறுமொழியாகத் தோன்றியுள்ளது. ஏற்கெனவே, ஈக்குவடோர் நாடு ஏற்றுமதிகளில் 30 சதவிகிதத்தை ஒரு கொடுப்பனவு வரையறையாக ஸ்தாபித்துவிட்டது.

(5) பெருநாடு வங்கியாளர்களிடம் அவர்கள் இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்குக் கொடுத்த கடன்களில் ஒரு பகுதி ஏற்கெனவே நஷ்டமாகி விட்டதென்றும், பெரு நாட்டின் மீது அவர்களுடைய கோரிக்கைகள் அதிகரித்தால் அது முழு நஷ்டமாகலாம் எனச் சொல்லிவருகிறது. இது வங்கியாளர்கள் சாதாரணமாக அறிந்த விஷயம் தான். ஆனல் இதிலுள்ள புதிய அம்சம், காஸ்ட்ரோ நீங்கலாக, எவரோ ஒரு இலத்தீன் தலைவர் அதைச் செயல்களில் சொல்ல முடிவு செய்துள்ளதுதான்.

(6) இதற்கெல்லாம் மேலாக, ஜனதிபதி கார்சியா படுகடன் பிரச்சினையைச் சுற்றி பெருநாட்டு மக்களை ஒற்றுமைப் படுத்தியுள்ளார். "ஒரு கையளவு டொலர்களுக்காக நாங்கள் எங்கள் முழங்காலில் மண்டியிட்டு வாழ மாட்டோம்" என்று அவர் கூறியுள்ளார். மேலும், "பெரு அரசாங்கத்துக்குக் கடன் வழங்கியவர்கள் பெருமக்களே" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். இது எளிய உண்மையாகத் தொனிக்கலாம். ஆனல், ஹன்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்ஸெனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதைக் கதையில் போல, சக்கரவர்த்தி உடை அணியாதிருக்கிருரென ஒரு குழந்தைதான் சுட்டிக் காட்டியது.

(7) முதலும், வட்டியும், இலாபமும் புனிதமானவையென்ற அடிப்படை முதலாளித்துவ ஒழுக்க நெறியை கார்சியாவின் யோசனைகள் அழித்தொழித்து வருகின்றன. அவர் அந்நெறியை மீறிவருகிருர். அது எல்லோருக்கும் தெரியும் - அவர்கள் வேறுவிதமாகப் பாசாங்கு பண்ணிஞலும் அல்லது பாசாங்கு பண்ணுவிட்டாலும் சரி, எனவே, ஜஞதிபதி கார்சியா எவருக்கும் உண்மையாகவே நிச்சயமாகத் தெரியாத ஒன்றுக்கு வாயிற்கதவைத் திறந்து விட்டிருக்கிருர்.

சமீபத்தில் இலத்தீன் அமெரிக்காவில் நடைபெற்ற இரண்டாவது முக்கியமான சம்பவம் கியூபா அரசாங்கம் ஹவாஞவில் ஏற்பாடு செய்த கருத்தரங்காகும். இலத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த 1,200க்கு மேற்பட்ட பிரமுகர்கள் இதில் கலந்து கொண்டனர். அவர்களில் கல்லூரிப் பேராசான்கள், எழுத்தாளர்கள், அரசியல் தலைவர்கள், மதத்தலைவர்கள், தொழிற் சங்கங்களின் தலைவர்கள் முதலியோர் காணப்பட்டனர். அரசாங்க அதிகாரிகள் ஆகக் குறைந்த அளவிலேயே இதில் பங்கு பற்றினர் என்ருலும், வெளிநாட்டுக் கடன் பிரச்சினை மீது ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்ய முடிந்தமையே இலத்தீன் அமெரிக்காவுக்கு ஒரு புதிய திருப்பமாக அமைந்து விட்டது.

இலத்தீன் அமெரிக்காவில் வாழும் குடிமக்களின் வளமார் பன்முகத்தன்மை கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களிலும் யோசனைகளிலும் பிரதிபலித்தது. கார்பிரியல் கார்சியா மார்க்குவஸ், அடோல்ஃபோ பெரஸ் எஸ்குவல் போன்ற நோபல் பரிசு பெற்ற மேதைகள் தங்களுடைய கருத்துக்களையும் யோசனைகளையும் சமர்ப்பிக்க, பல நாடுகளின் முன்னுள் ஜஞதிபதிகளுடனும், கல்லூரிப் பேராசிரியர்களோடும், பல வகையான சமயத்தலைவர்களுடனும் போட்டியிட்டனர். அமெரிக்கத் தகவல் தொடர்பு சாதனங்கள் இக்கருத்தரங்கின் பயனை எவ்வளவு குறைத்துக் காட்டமுடியுமோ அவ்வளவு குறைத்துக் காட்ட முயன்ற போதிலும், காஸ்ட்ரோவின் கருத்துக்கள் ஏதாவதொரு வழியில் இலத்தீன் அமெரிக்காவில் பரந்த அளவிலான எதிரொலிகளைக் கிளப்பியுள்ளன. படுகடனை இரத்துச் செய்யும் அவருடைய (காஸ்ட்ரோ) விரிவான குறிக்கோள் இப்பிரதேசத்திலுள்ள பெரும்பாலான நாடுகளில் நீண்டகாலத்தில் நிறைவேறக் கூடிய ஒரு சாத்தியக் கூருகவே இருந்து வருகிறது. எனினும், படுகடனடைப்பு சம்பந்தமாக இடைநடுவில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் சட்ட பூர்வமாக அதில் ஒரு பகுதியைத் தாமதித்துச் செலுத்துதல், குறுங்காலத்துக்குத் தரமதித்துச் செலுத்துதல் பற்றிக் குறிப்பிடுகின்றன. எனினும், உலக நெருக்கடி இப்போதுள்ள நிலையில் கடன்பட்ட நாடுகளின் கொடுப்பனவுச் சக்தி இடையருது அரிக்கப்பட்டுவருவதால், எதிர்காலத்தில் கொடுப்பனவு நடக்கும் சாத்தியக்கூறு இன்றுள்ளதைவிட குறைவாகக் கூட இருக்கும்.

படுகடன் சம்பந்தமாகத் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகளில் மிக அடக்கமான யோசனை, மிக அனுகூலமான நிபந்தனைகளின் கீழ் படுகடனைப்பற்றி மீண்டும் பேசி முடிப்பதுதான். இந்த ''அனுகூலம்'' வட்டி விகிதத்தைக் கிட்டத்தட்ட லண்டன் வங்கிகளுக்கிடையிலான கடன் வட்டி விகிதத்துக்குக் குறைப்பதிலும், முதலின் கொடுப்பனவை ஒத்திவைப்பதிலும் தான் அடங்கியுள்ளது. இப்பாதையைத்தான் மெக்ஸிகோ பின்பற்றியது. அதஞல் முதல்மீது முக்கியமான தொகைகள் 1988 ம் ஆண்டு வரை செலுத்தப்படமாட்டா. அதுவே பிரேஸிலும், அர்ஜென்டிஞவிலுமுள்ள அரசாங்க வட்டாரங்களில் முதலாவது தெரிவுரிமையாக இருக்கிறது. அது வங்கியாளர்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு பிரமேயம். ஏனென்ருல், அவர்கள் எந்தச் சொத்துக்களையும் பதிவழிப்புச் செய்யத் தேவையில்லை. ஆதலால், அது கடன் பட்ட நாட்டுக்கும் வங்கிகளுக்குமிடையே ஆகக் குறைந்த மனத்தாங்கலையே உண்டாக்குகிறது.

வங்கிகள் முதலும் வட்டியும் பூரணமாகச் செலுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காகச் சிறு சலுகைகளை வழங்குகின்றன. கொடுகடன் நாடுகள் எதிர்க்கும் ஒரு வழியல்ல இது. அத்துடன், இது கடன்பட்ட நாட்டுக்குக் கடனைத் திருப்பிச் செலுத்த அதிக அவகாசமும் அளிக்கிறது. எனினும், இப்பிராந்தியத்தில் அந்த நிலைமைகளைச் சாதித்துள்ள ஒரே நாடு மெக்ஸிகோ தான். எனவே மெக்ஸிகோ, லண்டன் வங்கிகளுக்கிடையிலான கடன் வட்டி விகிதத்தைவிட மேலான வட்டி விகிதங்களைச் செலுத்துகிறது. அதன் கணக்குகள் பொருந்துவதில்லை; உண்மையாகவே பொருந்த முடியாது. மெக்ஸிகோவுக்கு ஏறக்குறைய 1500 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியுள்ள இறக்குமதிகளும், கடன்களை அடைக்க அதே போன்ற ஒரு தொகையும் தேவைப்படுகின்றன. அதே வேளை அந்நாடு ஏற்றுமதி செய்யக்கூடிய பொருள்களின் பெறுமதி ஏறக்குறைய 2,000 கோடி அமெரிக்க டொலர்கள். எனவே, லண்டன் வங்கிகளுக்கிடையிலான கடன் வட்டி விகிதத்தையும், அமெரிக்கப் பொருளாதாரத்தின் வளர்ச்சி விகிதத்தையும், எண்ணெயின் விலையையும் பொறுத்து, மெக்ஸிகோவுக்கு வர்த்தக உபரியிருந்த போதிலும், அதன் சென்மதி நிலைவைப் பற்ருக்குறை ஏறக்குறைய 1,000 கோடி அமெரிக்க டொலர்களாயிருக்கிறது. எதிர்

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் வருடங்களில், படுகடன் கொடுப்பனவுகள் சம்பந்தமாக மெக்ஸிகோ அதிக பேச்சுவார்த்தைகளை மீண்டும் நடத்த வேண்டியிருக்குமேயன்றி அந்த அவசியம் குறையாது.

அடுத்த யோசனை கடன் பட்ட நாடுகளுக்கு வட்டிக் கொடுப்பனவுகளிலிருந்து மூன்றிலிருந்து ஐந்து வருடங்கள் வரை விடுதலையளிப்பதற்காக இம்முறைக்குப் புத்துயிரூட்டுவதாகும். இந்த யோசனை மெக்ஸிகோ வங்கியின் முன்னைய பணிப்பாளரும், திட்டத் தயாரிப்பு - வரவு செலவுத்திட்டத்தின் முன்னைய காரியதரிசியும், 1982ம் வருட வங்கி தேசியமயத்தின் சிற்பியுமான கார்லோஸ் டெலோ அவர்களால் ஹவானாவில் வெளியிடப்பட்டது. பத்து வருட காலத்துக்கு ''கிறிஸ்தவ கருணை'' காட்டப்பட வேண்டுமெனக் கோரும் இதேபோன்ற ஒரு யோசனை மெக்ஸிகோ மாநகருக்கருகிலுள்ள குவர்னவாக்கா பட்டணத்தின் முன்னைய மேற்றிராணியாரான ஸெர்ஜியோ மென்டஸ் அர்க்கியோ அவர்களால் வெளியிடப்பட்டது. இந்த யோசனைகள் கடனைத் திருப்பிக் கொடுக்கும் ஆவலையும் இயலாமையையும், அதன் விளைவாக, வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டியைச் செலுத்துவதற்குத் தேவையான கோடிக்கணக்கான டொலர்களை வருட முடிவில் கடன் பட்ட அரசாங்கம் சேகரித்து வைக்கும் வரை, டொலர்களைக் குவித்து வைப்பதற்காக இலத்தீன் அமெரிக்க மக்களின் வாழ்க்கைத் தரங்களிலிருந்து ஒரு சில சதங்களைக் கசக்கிப் பிழிந்தெடுப்பதன் மூலம் அவர்களுக்கு உண்டாக்கப்படும் கஷ்டங்களையும் துயரங்களையும் வற்புறுத்துகின்றன. அடிப்படையில் மூச்சு விடுவதற்கான அவகாசம் பெறப்பட்டுள்ளது. ஆனால், இந்தச் சூது விளையாட்டின் விதிகள் தொடப்படவில்லை.

பெரு நாட்டு யோசனையில் கடன் மீதான கொடுப்பனவுகளை ஆறு மாதங்களுக்கு இடைநிறுத்தஞ் செய்வதும், கொடுப்பனவுகள் ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் ஒரு குறித்த பின்னத்துக்கு வரையறுக்கப்பட்டிருப்பதும் சேர்ந்திருப்பதால், அந்த யோசனை மேற்குறித்த இரு யோசனைகளையும் முந்திவிடுகிறது. எனவே பெருநாட்டு யோசனை, கொடுகடன் நாடுகளும் இப்போதுள்ள பிரச்சினையின் ஒரு பகுதியாக அமைத்திருக்கிறார்கள் என்ற தர்க்க நியாயத்தைத் தொடர்ந்து, அவர்கள் பரிகாரத்தின் ஒரு பகுதியாகவும் அமைய வேண்டுமெனக் கூறுகிறது. இந்தப்பத்துச் சதவிகித வரம்பு, மற்றப்படி பெருநாடு கொடுக்க வேண்டியதுடன் ஒப்பிடுகையில் (ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் கிட்டத்தட்ட 100 சதவிகிதத்தைச் செலுத்த வேண்டும்), மிகக் குறைவானதாகும். ஆதலின் ஜனாதிபதி கார்சியா படுகடன் முற்றாக இரத்துச் செய்யப்படும் பாதையில் 90 சதவிகித தூரம் முன்னேறிச் சென்றுள்ளார். 10 சதவிகிதம் என்னும் இந்த இலக்கம் உண்மையில் வங்கியாளர்களுக்குப் பெரிதும் ஓர் அடையாளப் பற்றுச்சீட்டாக மாறுகின்றது. இது அவர்களுடைய கற்பனை உலகில் தொடர்ந்து வாழ அவர்களுக்கு உதவுகின்றது. எனினும், புறவயமாக, பெரு நாடு அதன் கொடுகடனாளிகள் பெற எதிர்பார்க்கும் ஒவ்வொரு டொலருக்கும் 10 சதம் மட்டுமே செலுத்தும். எனினும், இக் கொடுப்பனவு ஜனாதிபதி காஸ்ட்ரோ வெளியிட்ட படுகடனை இரத்துச் செய்யும் யோசனையிலிருந்து தூரவிலகி நிற்கவும், தமது யோசனைகளை அரங்கின் 'நடுவே' வைக்கவும் ஜனாதிபதி கார்சியாவை அனுமதிக்கின்றது. ஒன்றில் மொத்தக் கொடுப்பனவோ அல்லது மொத்த இரத்தோ நடைபெறுது.

இதனால் பெருநாட்டுக்கு ஏற்படும் பாதிப்பு குறைவாயிருக்குமென்றே தோன்றுகிறது. ஏனென்றால், 'அமெரிக்காவிடமிருந்து வரும் நெருக்குதல் பெருநாட்டு மக்களைத் தீவிரப்போக்கைக் கைக்கொள்ளச் செய்துவிடுமென்பது பெரும்பாலும் நிச்சயம்; உலக வங்கித் தொழில் முறைக்குச் சவால் விடுத்த முதலாவது நாடென்ற முறையில் பெருநாடு இதுவரை அடக்கி வைக்கப்பட்டிருந்த அனுதாபம் அனைத்தையும் பெறும்'. கார்சியாவின் யோசனைகள் காஸ்ட்ரோவின் படுகடன் ஒழிப்பு யோசனைகளை நேர்த்தியாகப் பூரணப்படுத்தியுள்ளன. இலத்தீன் அமெரிக்க இராஜதந்திரிகள் ஹவானாவிலுள்ள ''நியூயார்க் டைம்ஸ்'' பத்திரிகை நிருபரிடம் தெரிவித்தவை ஈண்டு எடுத்துக் காட்டத்தக்கவையாகும்: ''வங்கிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் எங்கள் நிலையை காஸ்ட்ரோ முன்னேற்றி வருகிறார். நாங்கள் கொடுக்கப் போவதில்லையென்ற கருத்துடன் அவர்களை ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளி வருகிறார். நாங்கள் கொடுக்கத்தான் போகிறோம்; நாங்கள் கொடுக்கத்தான் வேண்டும். ஆனால், இந்த விளையாட்டின் விதிகள் மாற்றப்பட்டாலே நாங்கள் கொடுக்க முடியும். எங்களுக்கு நல்ல இணக்கமான நிபந்தனைகள் தேவை. காஸ்ட்ரோ எங்கள் எல்லோருக்குமாக நெருக்கி வருகிறார். எங்களுக்குச் சொல்லத் துணிவில்லாத விஷயங்களை அவர் சொல்லி வருகிறார். ஒரு வேளை ஓர் இடைநடுவான நிலையைக் கண்டுபிடிக்க அவர் எங்களுக்கு உதவி வருவதாயிருக்கலாம். அதை நாங்கள் பாராட்டுகிறோம்''. இலத்தீன் அமெரிக்கா வெங்கும் காஸ்ட்ரோவின் குரலுக்குச் செவிசாய்க்கிறார்கள். கியூபாவைத் தனியாகப் பிரித்து வைக்க அமெரிக்கக் கொள்கை காலமெல்லாம் முயன்றுள்ள போது, அமெரிக்காவை இலத்தீன் அமெரிக்காவிலுள்ள அதன் அண்டை நாடுகளிலிருந்து தனிமைப்படுத்த அவர் தொடங்கியிருக்கிறார்.

(நன்றி: 'எக்கனமிக் அன்ட் பொலிடிகல் வீக்லி')

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

Jaffna. Phone 23436

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

பிரதி விலை ரூ. 3-50

வருட சந்தா ரூ. 40-00

## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

---

283, கே. சிறில் சி. பெரேரா மாவத்தை கொழும்பு-13ல் உள்ள இன்டர் நெஷனல் கிரபிக் மெகசின் லிமிட்டட் அச்சுயந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org